

கல்கி
மணியம்
ALKI பிப்ரவரி 6, 1955
4 அணா


ஒவ்வொரு தினமும் நீங்கள் அழுக்கிலுள்ள கிருமிகளின் அபாயத்துக் குள்ளாகலாம்.
இந்தக் கிருமிகளை லைப்பாய் சோப்பினால் கழுவிக்களைந்து தினமும் உங்களைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.
லைப்பாயின் "பாதுகாக்கும் நுரை" உங்கள் ஆரோக்கியத்தைக் காப்பாற்றுகிறது
லைப்பாய் சோப்
தினசரித் தொல்லையான அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது.
LIFEBUOY
LIFEBUOY SOAP

மலர் 14 :: இதழ் 28

கல்கி

ஜய வரு :: தை 24

பொருளடக்கம்

1955 பிப்ரவரி 6

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

சமுதாயத்துடன் *நீங்களும் சுபிட்சமடைக!*

உங்கள் சேமிப்புகளை இந்திய அரசாங்கத்தின்

சிறு சேமிப்புத்திட்டத்தில் முதலீடு செய்க

அதன் மூலம்

இந்தியாவின் திட்டங்களுக்கும் உதவிபுரிக

- ★ சமுதாய அபிவிருத்தித்திட்டம்
- ★ பெரிய நதிகளில் நீர்த்தேக்கத்திட்டங்கள்
- ★ சமூக சுபிட்சத்திட்டங்கள்
- ★ ரயில் மற்றும் ரஸ்தா அபிவிருத்தி

உங்கள் பணத்தை இவ்வசீகரமான
உத்தரவாதம்பெற்ற செக்யூரிடிகளில் ஏதாவதொன்றில் போடுங்கள்

12 வருட நேஷனல் ஸேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்	கெடு பூர்த்தியாகும்போது ஆண்டு 1-க்கு 4.16 சத விகிதம் வட்டிபெறும். ரூ 5 முதல் ரூ. 5,000 வரை மதிப்புகளில் கிடைக்கும். தனி நபர் ரூ. 25,000 வரை வாங்கலாம்.
10 வருட டிரெஷரி ஸேவிங்ஸ் டிபாஸிட் சர்டிபிகேட்டுகள்	வருடாவருடம் 3½ சத விகித வட்டி பெறலாம். ரூ. 100ன் மடங்குகளாக ரூ. 25,000 வரை கிடைக்கும். தனி நபர் வாங்கக் கூடியது ரூ. 25,000 வரை.
10 வருட நேஷனல் பிளான் சர்டிபிகேட்டுகள்	கெடு பூர்த்தியாகும்போது ஆண்டு 1-க்கு 4½ சத விகிதம் வட்டி கிடைக்கும். ரூ. 25, ரூ. 50, ரூ. 100 & ரூ. 500 மதிப்புகளில் கிடைக்கும். தனி நபர் வாங்கக்கூடிய அளவு ரூ. 1000 வரை.
போஸ்டாபீஸ் ஸேவிங்ஸ் பாங்க் அகௌண்ட்ஸ்	டிபாசிட்களின் பேரில் ரூ. 10.000 வரையுள்ள தொகைகளுக்கு 2 சத விகித வட்டியும், அதற்கு மேல் 15,000 வரையுள்ள தொகைக்கு 1½ சத விகித வட்டியுமுண்டு.

15 வருட ஆன்னியுடி சர்டிபிகேட்டுகள்

வெளியீடு விலைகள் ரூ. 3,500, ரூ. 7,000, ரூ. 14,000 & ரூ. 28,000. தனிநபர் உயர்ந்த பக்ஷம் ரூ. 28,000 அளவிற்கு வாங்கி வைத்துக் கொள்ளலாம்.

அசல் தொகை 3½ சத விகித தொடர்வட்டி சேர்த்து சமமான மாதாந்தரத் தவணைகளில் 15 வருட காலத்தில் திருப்பியளிக்கப்படுகிறது.

உங்களுக்கு உத்தரவாதமாக ஒரு
சிறந்த லாபம் வருமானவரி கழிவின்றி கிடைக்கிறது.

[illegible]

இந்தியாவின் எதிர்காலத்தில் முதலீடு செய்க.



தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்

கதவடைப்பு வேண்டாம்!

காங்கிரஸைப் புனிதப்படுத்தும் நோக்கத்தில் அகில இந்திய காங்கிரஸின் புதிய தலைவர் ஸ்ரீ தேபர் அவர்கள் ஆவடி மகாநாட்டிலே கூறிய வாசகங்களைச் சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தோம்.

"யோக்யதை வேண்டும். அது இல்லாதவர்கள் அகன்று, காங்கிரஸில் அனைவரும் நல்லவர்களாக இருக்க வேண்டும்" என்றார் ஸ்ரீ தேபர்.

"அதுவே முக்கியம்" என்றார் ஸ்ரீ நேரு அவர்கள். ஆவடி மகாநாட்டில் இதை எல்லோரும் ஆமோதித்தனர். பத்திரிகைகளும் இந்தத் தீர்மானத்தைப் பாராட்டின.

தமிழ் நாட்டுக் காங்கிரஸில் இடம் பெற்ற முக்கியஸ்தர்கள் இந்த விஷயத்தைக் கவனிக்க வேண்டும் என்பது எடுத்துச் சொல்லாமலே விளங்கும்.

பழைய காங்கிரஸ்காரர்கள் எல்லோரும் மிகவும் ஒழுக்கமானவர்கள் என்றும், புதிதாகப் புகுந்த நவீனர்கள் எல்லாவற்றையும் கெடுத்து வருகிறார்கள் என்றும், இந்தச் சிக்கலைத்தான் கவனிக்க வேண்டும் என்றும் அடிக்கடி பேசப்பட்டு வருகிறது. பழையவர்கள் கெட்டுப் போனார்களா அல்லது கெட்டவர்கள் புதிதாகப் புகுந்து விட்டார்களா அல்லது இரண்டுமேதானா என்பது ஆராய வேண்டிய விஷயம்.

மக்கள் குணங்கள் எப்போதும் ஒரே விதமாக இருக்கும் என்று சொல்வதற்கு இல்லை. நேற்றுவரை நல்லவராக இருந்தவரின் மனத்தில் இன்று புதிதாக ஆசை என்ற நோய் புகுந்து விடுமானால், அவர்கள் தொடர்ந்து நல்லவர்களாக இருப்பது எப்படி சாத்தியம்? ஆனபடியால் பழையவர்கள் எல்லோரும் சரியாக இருப்பதாக வைத்துக் கொள்வதற்கில்லை. நல்லவர்கள் பலர் காங்கிரஸுக்கு வெளியில் இருக்கிறார்கள். புதியவர்களுக்கு இடமில்லை என்றால் காங்கிரஸின் ஆயுள் எம்மாத்திரம்? ஒரு அமைப்பு அல்லது ஒரு கட்சிக்குத் தீர்க்காயுள் வேண்டுமானால் கதவு திறந்து வைத்திருக்க வேண்டும். புதியவர்கள் நுழைய இடம் தந்து கொண்டே இருக்க வேண்டும். புதியவர்களை வேண்டாம் என்று தடுத்து விட்டால், நாளடைவில் அமைப்பு அழிந்து போகும்.

மற்றொரு விஷயம்: ஒழுக்கம் என்பது எவ்விதத்தில் கெட்டுப் போயிருக்கிறது என்று ஆராய்ந்து பார்த்தால், முக்கியமாகப் பதவி ஆசைதான் இதற்குக் காரணம். வறுமைச் சுழலில் பல நாள் கஷ்டப்பட்டவர்கள் இப்போது எப்படியாவது கொஞ்சம் நிம்மதியான நிலை அடையலாம் என்று பணத்துக்கும் ஆசைப்படுகிறார்கள். பதவி ஆசையும் பணத்து ஆசையும் பழையவர்களைத் தொடாமல் விடவில்லை. புதியவர்களாயினும் சரி பழையவர்களாயினும் சரி, துராசை என்னும் நோய் பீடித்தால் காங்கிரஸுக்கு பலக் குறைவுதான். இந்த வியாதி பழைய காங்கிரஸ்காரர்களைத்தான் அதிகமாகத் தீண்டி வருகிறது என்றுகூடச் சொல்லலாம்.

ஒழுங்கீனம் ஒழிய வேண்டும் என்று சொல்லிக் கொண்டே, ஒழுங்கற்ற சிலர் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொண்டு போவதற்காகக் 'கட்டுப்பாடு வேண்டும்' என்று சொல்லிக் கொண்டு தங்கள் சதிகளை நிறைவேற்றுகிறார்கள். சீலம் உள்ளவருக்கு இடம் கொடுக்காமல் கட்டுப்பாட்டு சூத்திரத்தை உபயோகித்து வருகிறார்கள்.

பூனைக்குட்டி தன்னுடைய வாலைத் தானே துரத்திக் கொண்டு சுற்றிச் சுற்றி வருவதைப் போல், 'ஒழுக்கம் ஒழுக்கம், அயோக்யதை கூடாது!' என்று சொல்லிக் கொண்டு வேட்டையாடுவோர் பலர் உண்டு. 'கட்டுப்பாடு' என்ற பெயரில் நியாயத்தையும் உண்மையையும் நிராகரித்து விடக் கூடாது. அத்தகைய பொய்க் கட்டுப்பாட்டை விட்டுவிட வேண்டும். நீதியோடு கலந்த கட்டுப்பாடுதான் பயன் தரும்.

யோக்கியதைக் குறைவினால் காங்கிரஸுக்கு வரவர பலம் குறைந்து கொண்டுதான் வருகிறது. எவ்வளவு குறைந்தாலும் ஓரளவு பலம் இருந்தே வருகிறது. ஆனால் இது எத்தனை நாளைக்குத் தாங்கும் என்பதுதான் கவலைப்பட வேண்டிய காரியம்.

பழையவர்கள் எப்படியேனும் இருக்கட்டும், நல்லவர்களாகப் பார்த்துச் சில புதியவர்கள் காங்கிரஸில் சேர வேண்டும். அவர்களும் உடனே கெட்டுப் போய் விடாமல் இருக்கும் சூழ்நிலையை உண்டாக்கிக் கொள்ள வேண்டும்.

காங்கிரஸின் ஆரோக்கியத்துக்கு வழி கதவடைப்பு அல்ல. காற்றும் வெயிலும் அடிக்க வேண்டும். கதவை நன்றாகத் திறக்க வேண்டும்!

தீப்பொறி தெறிக்குமா?

எந்த விநாடியிலும் வெடிமருந்துக் குவியலில் தீப்பொறி தெறிக்கலாம் என்கிற உலக நெருக்கடி இப்போது ஏற்பட்டிருக்கிறது.

ஒருபுறம், சியாங் கை ஷேக்கின் ஆதிக்கத்தில் இருக்கும் பார்மோசாத் தீவைப் பாதுகாப்பதற்குற்ற சகல இராணுவ நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ளும்படி, அமெரிக்க ஜனப் பிரதிநிதி சபை ஜனாதிபதி ஐசன் ஹோவருக்கு அதிகாரம் அளித்து விட்டது.

மற்றொரு புறம், அமெரிக்காவின் ஆதிக்கத்தில் சிக்கியிருக்கும் பார்மோசாவை விடுவித்தே தீருவோம், அந்தத் தீவு சீனாவின் இன்றியமையாத ஒரு பாகம் என்று சீன சர்க்கார் பகிரங்கமாகப் பிரகடனம் செய்துள்ளனர்.

சீனாவில் அமெரிக்கா அணுகுண்டுகளை வீசினால், அதற்குப் பிரதியாக அமெரிக்காவிலும் அணுகுண்டுகளை வீசும் சக்தியுள்ள நண்பர்கள் சீனாவுக்கு இருக்கிறார்கள் என்று சீனக் குடியரசு சர்க்கார்ப் பிரதிநிதிகள் கூறி வருகிறார்கள்.

பார்மோசாவுக்கு அருகில் ருஷ்ய நீர்மூழ்கிக் கப்பல்கள் நடமாடத் தொடங்கி யிருக்கின்றன. பார்மோசாவைப் பாதுகாக்க அமெரிக்க விமானங்களும் கப்பல்களும் தயாராக இருந்து வருகின்றன.

இங்கிலேயில், எந்த விநாடியிலும் பார்மோசா பிரச்னை திடீரென்று முற்றி மற்றொரு மகா யுத்தத்தில் வந்து முடிந்து விடுமோ என்று சர்வதேச ராஜதந்திரிகளிடையே பெரும் கலக்கம் ஏற்பட்டிருப்பதைக் குறித்து ஆச்சரியப்படுவதற்கில்லை.

"கிழக்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பு முற்றி விடாமல் தடுத்தாலொழிய, இந்த ஆண்டு முடிவதற்குள் மானிடவர்க்கம் மறைந்து விடும்" என்று மேதாவியும் அறிஞருமான பெர்ட்ராண்ட் ரஸ்ஸெல் எச்சரித்துள்ளார்.

"சீனா சம்பந்தப்பட்ட வரையில் அமெரிக்கா தற்போது அனுஷ்டித்து வரும் கொள்கை தவறானது. அந்தக் கொள்கையின் விளைவாக மகா யுத்தம் ஏற்படுமாயின், அதில் பிரிட்டிஷ் மக்கள் பங்கு எடுத்துக் கொள்ள மாட்டார்கள்" என்று "டெய்லி மிரர்" என்ற பிரிட்டிஷ் பத்திரிகை தெளிவாக எழுதி யிருக்கிறது. "பார்மோசா பிரச்னையை யொட்டி யுத்தம் ஏற்படுவதை பிரிட்டிஷ் மக்கள் விரும்பவில்லை. தாங்கள் அங்கீகரிக்காத சியாங் கை ஷேக் சர்க்காருக்காக பிரிட்டன் போரில் இறங்காது"—இவ்வாறு பிரிட்டிஷ் தொழிற்கட்சிப் பத்திரிகையான "டெய்லி ஹெரால்டு" குறிப்பிட்டிருக்கிறது. இதுவே எல்லா பிரிட்டிஷ் பிரமுகர்களுடைய அபிப்பிராயமும் என்பது தெளிவாகத் தெரிகிறது. மற்ற நாடுகளின் கருத்து எவ்விதமிருக்கும் என்பது பற்றிச் சந்தேகம் எதுவும் இருப்பதற்கு இடமில்லை.

நிலை இவ்வளவு நெருக்கடியான போதிலும் அமெரிக்கா தன் பிடிவாதத்தை விட்டு விடும் என்றே தோன்றுகிறது. பிடிவாதக்காரன் கொஞ்சம் சத்தம் அதிகமாகப் போட்டுத்தான் தன் காரியத்தை நிறுத்திக் கொள்வான்.

நேருவுக்கு மற்றும் ஒரு வெற்றி

தற்போது லண்டனில் நடைபெற்று வரும் காமன்வெல்த் நாடுகள் மகாநாட்டில் கலந்து கொள்வதற்காகச் சென்றுள்ள பண்டித ஜவாஹர்லால் நேருவுக்கு மற்றும் ஒரு வெற்றி நிச்சயம்.

இந்தோ சீனாவில் ஏழு ஆண்டுகளாக நடந்து வந்த கோர யுத்தம் நிற்பதற்கு ஜவாஹர்லால்ஜியின் யோசனையே காரணமாக இருந்தது. இந்தோ சீன யுத்தத்தை நிறுத்தும் விஷயமாக நேருஜியின் கோரிக்கைக்கு இணங்கிய ஆங்கில ராஜதந்திரிகள், இப்போது பார்மோசா நெருக்கடி மகா யுத்தமாகி விடாமல் தடுக்கும் விஷயத்திலும் ஜவாஹர்லால் நேருவின் யோசனைக்கு இணங்குவார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

"சமாதானத்தை விரும்புவோரின் சிந்தனை சமாதானமாக இருக்க வேண்டும்; பாஷை சமாதானமாக இருக்க வேண்டும்; தொனி சமாதானமாக இருக்க வேண்டும்" என்று நேருஜி லண்டனில் கூறியுள்ளார். ஆனால், வல்லரசுகள் வாயளவில் சமாதான மந்திரத்தை ஜபித்து வருகின்றனவே ஒழிய, மற்றப்படி அவைகளின் போக்கு நேருஜியின் கருத்துக்கு நேர்மாறாக இருக்கிறது.

ஆயினும், நேருஜிக்கும் சர்ச்சில், ஈடன் முதலிய பிரிட்டிஷ் ராஜதந்திரிகளுக்கும் நடக்கும் பேச்சு வார்த்தைகளின் பலனாக, உலக நெருக்கடி தீருவதற்கு வழி பிறக்குமென்றே நம்புகிறோம்.

அமைதி நிலவுமாக!

உலகம் எப்பொழுதும் போல்தான் சுழல்கிறதா அல்லது எதிர்த் திசையில் சுழல ஆரம்பித்து விட்டதா, என்ன!

கிழக்கில் உதிக்கும் சூரியன் மேற்கில் உதிக்க ஆரம்பித்து விட்டானா, என்ன!

இப்படி யெல்லாம் நமக்குப் பல சந்தேகங்கள் வந்து விட்டன, ஜெனரல் மெக் ஆர்தர் வெளியிட்ட அறிக்கையைப் படித்தபோதுதான்!

ஆனால் உலக நியதி என்பது எப்படியிருக்கிறது! மேற்கே அஸ்தமிக்கிற சூரியன் நிச்சயம் கிழக்கே உதித்துத்தான் ஆகிறான்! அப்படித்தான் இப்பொழுது புதிய உதயத்துடன் தோன்றி யிருக்கிறார் மெக் ஆர்தர்!


ஜெனரல் மெக் ஆர்தர் அடடா, ரொம்ப ரொம்பப் புகழ் பெற்றவர். கொடுமையின் எல்லையைக் கண்டவர். அவர்தான் சென்ற மகா யுத்தத்தில் ஜப்பானை ஒடுக்கிய வீரர். கொரியாப் போரை உலகப் போராக மாற்றி விட்டுத்தான் மறு காரியம் பார்ப்பேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டிருந்தார். நல்ல வேளை! முந்திய அமெரிக்க ஜனாதிபதி ட்ருமன் தக்க சமயத்தில்

வேற்றுமையில் ஒற்றுமை!



"இரு வல்லரசுகளும் உலகத்தை எத்தகைய ஆபத்தில் ஆழ்த்துகின்றன என்பதை அவை உணரவில்லை!"
—பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்

குடியரசுத் திருநாள்



ஜனவரி 26ஆம் குடியரசுத் திருநாளை இமயம் முதல் குமரி முனை வரையில் உள்ள எல்லா இடங்களிலும் கோலாகலமாகக் கொண்டாடினார்கள். புது டில்லியில் நமது ஜனாதிபதி ராஜேந்திர பிரஸாத் முன்னிலையில் அணிவகுப்புகளும், அந்தந்த ராஜ்யத்துப் பிரதாபத்தைச் சித்திரிக்கும் காட்சிகளும் ஊர்வலமாகச் சென்ற கோலம் கண்கொள்ளாக் காட்சியாக இருந்ததாம். இதைப் போலவே ஒவ்வொரு ராஜ்யத் தலைநகரிலும் அந்தந்த ராஜ்யத்துக் கவர்னர் கொடியேற்றுவித்து அணிவகுப்பு மரியாதைகளை ஏற்றுக்கொண்டார். நமது ராஜ்யத் தலைநகரான சென்னையில் குடியரசு தின விழாவை வெகு சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடு செய்தார்கள். அன்றைய தினம் ஐலண்டு மைதானத்தில் அதிகாலையில் இருந்தே பதினாயிரக் கணக்கில் ஜனங்கள் வந்து கூடி விட்டார்கள். நம் கவர்னர் முன்னிலையில் தரைப்படை, இதற்கென்று சென்னைக்கு வந்திருந்த நாலு கப்பல்களிலிருந்து இந்தியக் கப்பற் படை, நமது யுவர்கள் சேர்ந்த நேஷனல் கேடட் கோர், போலீஸ் பட்டாளங்கள் ஆகியோர் அணிவகுத்து மரியாதை செய்தார்கள். இதே சமயத்தில் சென்னை நகரின் பல பாகங்களிலும் குடியரசு தினத்தை உற்சாகமாகக் கொண்டாடினார்கள். கொடியேற்றம் பொதுக் கூட்டம் எல்லாம் சிறப்பாக நடந்தது.

நமது தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறக்கச் சென்னைஐலண்டு மைதானத்தில் நடந்த ராணுவ அணிவகுப்பின் மரியாதையைக் கவர்னர் கனம் ஸ்ரீ பிரகாசா ஏற்றுக் கொள்ளும் அற்புதக் காட்சியை மேலே படத்தில் காணலாம். போட்டோ: எம். டி. கணேஷ்

இவரைப் பதவியிலிருந்து நீக்கி உலகப் போரை வர விடாமல் தடுத்தார்.

இப்படியெல்லாம் ஒரு அற்புதப் புகழ் பெற்ற மெக் ஆர்தர் சற்றும் நம்ப முடியாதபடி ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். புலி என்றைக்குப் புல்லைத் தின்ன ஆரம்பித்தது என்று கேட்கத் தோன்றுகிறது.

எப்படியானால் என்ன, அவர் கூறியிருப்பது நூற்றுக்கு நூறு உண்மை.

முன்னிருந்த காலம் இப்பொழுதில்லை. முன்பிருந்த உலகம் இப்பொழுது இல்லை. அணுகுண்டு ஜலவாயு குண்டு மலிந்து விட்ட காலம் இது. ராணுவ ஐக்கியங்கள், கட்டாய ராணுவ சேவை, முதலிய பழைய வகை யுத்தத் தற்காப்பு முயற்சிகளோ, எதிர்ப்பு முயற்சிகளோ இன்றையச் சூழ்நிலைக்குச் சற்றும் ஒவ்வாது. அணு குண்டு, ஜலவாயு குண்டு பிரயோகிக்கப்பட்டால் உலகம் சர்வ நாசம் ஆவது நிச்சயம். ஆகவே இனி யுத்தம் என்கிற பேச்சே இருக்கக் கூடாது. அதற்கான வழியை அமெரிக்காவே ஏன் முன்னின்று காட்டக் கூடாது என்று கேட்டிருக்கிறார்.

இதை அமெரிக்கா உணர்ந்தால் உலகில் அமைதி நிச்சயம் நிலவும்!

‘கல்கி’ அன்பர்களுக்கு

‘கல்கி’ காங்கிரஸ் மலரைக் குறித்துப் பல அன்பர்கள் நமக்கு எழுதி யிருக்கிறார்கள். இலங்கையிலிருந்து எழுதியுள்ள அன்பர், “மலரில் மணங் கமழும் அறிவுக்கு விருந்து ஒரு புறம் இருக்க, அமரர் கல்கியை மனக்கண் கொண்டு பார்த்துக் கொண்டிருந்த வாசகர்களுக்குக் கண்ணெதிரே கொண்டு வந்து நிறுத்தியது போல் இருக்கிறது, மலரின் முகப்பில் தாங்கள் சேர்த்திருந்த கல்கியின் படம். பெரும்பான்மை வாசகர்களின் ஆசையைப் பூர்த்தி செய்து வைத்த தங்களுக்கு எனது அன்பு கலந்த வணக்கம்” என்று எழுதி யிருக்கிறார்.

தட்டப்பாறையிலிருந்து எழுதியுள்ள அன்பர்:

“தங்கள் காங்கிரஸ் மலரைக் கண்டு பேருவகை கொண்டேன். ஒப்பற்ற பாரதத் திலகங்களின் வகை வகையான வண்ணச் சித்திரங்கள் கண்ணைக் கவர்ந்து விட்டதுடன், அவர்களது மகத்தான சேவையை உணர்த்தும் கதை கட்டுரைகள் கருத்தையும் கௌவி விட்டன. காங்கிரஸுக்கு எதிரான கட்சிப் பிரசாரங்களால் மயங்கிக் கிடக்கும் மாந்தர், தங்கள் மலரின் மணம் பட்டுத் தெளிவுறுவர் என்பதில் ஐயமில்லை. இதுவே நாம் காலஞ் சென்ற கல்கி கிருஷ்ணமூர்த்தியவர்களுக்குச் செய்யும் பணிவிடைகளுள் சாலச் சிறந்தது. சுருங்கக் கூறின் கல்கி காங்கிரஸ் மலர் சாதாரண மலரல்ல. அதுவே ‘பொன் மலர் நாற்றமுடைத்து’ என்பதாகும்.”

இப்படிப் பல அன்பர்கள் தங்களுடைய மனமுவந்த பாராட்டுகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இவர்கள் அனைவருக்கும் எங்கள் நன்றி உரியது.

சென்ற ஆண்டு ஜூன் மாதம் ஆறாம் தேதி இதழில் ‘உங்கள் ஊர் பஞ்சாயத்து’ என்று ஒரு கட்டுரைப் போட்டி அறிவித்திருந்தோம் அல்லவா! அந்தப் போட்டியில் கலந்து கொண்ட எல்லாக் கட்டுரைகளும் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு விட்டன. கீழ்க்கண்ட அன்பர்களுக்கு இந்தப் பரிசுகள் வழங்கப்படுகின்றன.

முதலாவது பரிசு: 25—0—0; எழுதியவர்: ஸ்ரீமதி கே. சரஸ்வதி, வத்திராயிருப்பு; பிரசுரமான தேதி 11—7—54.

இரண்டாவது பரிசுகள்: 15—0—0; (1) ஜனாப் எம். எம். இஸ்மாயில், களக்காடு; பிரசுரமான தேதி: 1—8—54. (2) ஸ்ரீ கே. வி. முருகன், உசிலம்பட்டி; பிரசுரமான தேதி: 22—8—54. (3) கோடூர் ஸ்ரீ ராஜகோபால சாஸ்திரி, ராமேசுவரம்; பிரசுரமான தேதி: 29—8—54.

பரிசுக்குரிய தொகைகள் இந்த அன்பர்களுக்கு 3—2—55 அன்று அனுப்பப்பட்டன.


பொதுவாக, இந்தக் கட்டுரைப் போட்டிக்கு வந்த எல்லாக் கட்டுரைகளுமே தரத்திலும் எழுத்து முறையிலும் சிறப்பாக இருந்தன. இதில் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எங்கள் வந்தனம். —ஆசிரியர்

நிபுணர்கள்!



“நம் குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் படிப்பதைவிட வீட்டிலே கற்றுக் கொள்வது பயனுள்ளது!” என்று ராஜாஜி கூறுகிறார்.

தெய்வயானை



கல்கி

என்னுடைய நண்பர் வெற்றிலை பாக்குக் கடை ஓமக்குட்டி முதலியாரும் நானும் ஒரு நாள் கடற்கரையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம். மதுவிலக்கு இயக்கத்தைப் பற்றிப் பேச்சு வந்தது. "இருக்கட்டும், நீங்கள் சாராயக் கடைக் குத்தகை ஒரு காலத்தில் எடுத்திருந்தீர்களாமே! அதை எப்படி விட்டீர்கள்! உத்தரமேரூர் விட்டுச் சென்னைப் பட்டணத்துக்கு ஏன் வந்தீர்கள்!" என்று நண்பரைக் கேட்டேன். "அது பெரிய கதை!" என்றார் முதலியார். "பாதகமில்லை, சொல்லுங்கள்" என்றேன். ஓமக்குட்டி முதலியார் சொல்லத் தொடங்கினார் :—

நாங்கள் ஜாதியில் நெசவுக்காரர்களானாலும் எங்கள் குடும்பத்தில் மட்டும் இரண்டு தலைமுறையாய் நெசவு கிடையாது. என்னுடைய பாட்டனார் எங்கள் ஊரிலேயே பெரிய பண்ணைக்காரராயிருந்தார். ஆனால் என் தகப்பனார் காலத்தில் எங்கள் சொத்தெல்லாம் பல வழியிலும் அழிந்து விட்டது. என்னையும் என் தாயாரையும் ஏழைகளாய் விட்டுத் தந்தை இறந்து போனார். அப்பொழுது எனக்கு மூன்றே வயது. கடன்காரர்கள் எங்கள் சொத்தெல்லாம் எடுத்துக் கொண்டு விட்டார்களாம்.

என் தாயைப் பெற்ற பாட்டனார் ஒருவர் இருந்தார். அவர் அப்போது எங்களுடன் வந்து வசிக்கத் தொடங்கினார். அவர் கிழவர், வேலை செய்யத் தள்ளாதவர், ஆனால் நல்ல கெட்டிக்காரர். எங்களுக்கு மிஞ்சிய சொற்ப நிலத்தின் சாகுபடிக்கு வேண்டிய ஏற்பாடு செய்து குடும்ப காரியங்களைச் சீர் பெற நடத்தி வந்தார். நான் தினந்தோறும் பகலில் எங்கள் மாடுகளை ஓட்டிச்சென்று மேய்த்து வருவேன். மாலை வீட்டுக்கு வந்து மாடுகளைக் கட்டி விட்டுப் பாட்டன் பக்கத்தில் உட்காருவேன். அவர் இராமாயண, பாரதக் கதைகள் சொல்வார். விக்ரமாதித்யன் கதை, தேசிங்கு ராஜன் கதை முதலியனவும் சொல்வார். இவைகளையெல்லாம் நான் மிகவும் சுவாரஸ்யமாகக் கேட்டுக் கொண்டிருப்பேன்.

ஒரு நாள் அவர் நளன் கதை சொல்லிக்கொண்டிருந்தார். தமயந்திக்கு இரண்டாவது சுயம்வரம் என்பதாக நளனுக்குச் செய்தி வந்த இடத்தில் அவர் கதையை நிறுத்தி, "உடம்பு சரியாயில்லை, அப்பா! ஏதோ ஒரு மாதிரியாயிருக்கிறது. சற்று படுத்தால் தேவலாம். பாக்கிக் கதை நாளைக்குச் சொல்கிறேன்" என்றார்.

கதையை அவர் முடிக்கவேயில்லை. மறுநாள் அவருக்கு உடம்பு அதிகமாய் விட்டது. ஊரார் அவர் செத்துப் போய் விடுவாரென்று பேசிக் கொண்டதைக் கேட்டேன். செத்துப் போவதென்றால் எனக்கு அப்போது முழுதும் புலப்படவில்லை. எலி, பெருச்சாளி, பூச்சியின் சாவுதான் தெரியும். ஆனாலும் எல்லாரும் பேசிக் கொள்வதைக் கேட்டு ஒரு வித துக்கம் உண்டாயிற்று. அதைவிடக் கதை பாக்கியாய் நின்று விட்டதே என்ற துக்கந்தான் அதிகமாயிருந்தது. எனக்கு இப்போது நன்றாய் ஞாபகமிருக்கிறது; அவர் அருகில் சென்று "தாத்தா! நீ செத்துப் போகிறாயா! வேண்டாம்! கதையை முடிக்காமல் செத்துப் போக வேண்டாம்" என்று சொல்லி அழுதேன். அப்போது அவர் புன்சிரிப்பு சிரித்து, "குழந்தாய்! இதற்காக நீ வருத்தப்படாதே. நீ புத்தகம் படிப்பதற்குக் கற்றுக் கொள். நான் உனக்குச் சொன்ன கதைகளைவிட இன்னும் எவ்

ராஜாஜி நடத்திய 'விமோசனம்' என்ற பத்திரிகையில் 1929-ம் ஆண்டு வெளியானது.

வளவோ நல்ல கதைகள் புத்தகங்களில் இருக்கின்றன. நீ நன்ருகப் படிக்கக் கற்றுக் கொண்டால், ஆயிரங் கதைகள் படிக்கலாம். மற்றவர்களுக்கும் நீ கதை சொல்லலாம்'' என்ருர். மறுநாள் அவர் இறந்து போனுர்.

** ** **

பாட்டன் கூறிய வார்த்தைகளை நான் மறக்கவே இல்லை. எங்கள் ஊருக்கு அடுத்த ஊரில் ஒரு பள்ளிக்கூடம் இருந்தது. தாயிடம் உத்தரவு பெற்று அந்தப் பள்ளிக்கூடத்துக்குப் போனேன். எழுத்துக் கூட்டிப் படிக்கத் தெரியும் வரையில்தான் அங்கே இருந்தேன். வீட்டு வேலை, வயல் வேலைகளைக் கவனிக்க வேண்டியிருந்தது. ஆனல் படிப்பதை மட்டும் விடவில்லை. எங்கே, யாரிடத்தில் கதைப் புத்தகம் இருந்தாலும் கெஞ்சிக் கூத்தாடி வாங்கிக் கொண்டு வந்து விடுவேன். விளங்கினலும் விளங்கா விட்டாலும் தட்டுத் தடுமாறி வாசித்து முடிப்பேன். ஒரு கந்தல் ஏடு அகப்பட்டால்கூட விடுவதில்லை. இவ்வாறு இராமாயணம், பாரதம், கந்த புராணம், நள மகாராஜன் கதை, அரிச்சந்திர மகாராஜன் கதை, விக்கிரமார்க்கன் கதை, அல்லி அரசாணி மாலை முதலிய பல நூல்கள் படித்து முடித்தேன்.

இப்படிப் பல வருஷம் சென்றன. ஒரு நாள் எனக்கு ஒரு ''நாவல்'' கிடைத்தது. ஆஹா! அதைப் படித்தபோது நான் அடைந்த சந்தோஷத்தைச் சொல்லி முடியாது. அது முதல் நாவல் பைத்தியம் என்னை நன்ருய்ப் பிடித்துக் கொண்டது. ஒருமுறை எங்கள் ஊரிலிருந்து சிலர் கிறிஸ்த்மஸ் வேடிக்கை பார்க்கப் பட்டணத்துக்கு வந்தார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து வந்தேன். அவர்களெல்லாம் ஏதேதோ சாமான்கள் வாங்கிக் கொண்டு திரும்பினுர்கள். நான் என்ன செய்தேன் தெரியுமா? மூர்மார்க்கெட்டில் பழைய கிழிந்த நாவல்களில் ஒரு கட்டு வாங்கிக் கொண்டு போய்ச் சேர்ந்தேன். இரவு பகல் ஒரே மூச்சாக அவைகளை வாசித்து முடித்தேன். இப்பொழுது நினைத்தால் மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது. குப்பைத் தொட்டியில் போடுவதற்கே தகுந்தவை என்று இப்போது நான் கருதும் நாவல்களை அப்போது எத்தனை ஆவலுடன் படித்தேன்!.........

[''இருக்கட்டும். நீங்கள் என்னைக் கேலி செய்வதில்லையென்று உறுதி கூறினல்தான் இனிமேல் கதை சொல்லுவேன்'' என்ருர் ஓமக்குட்டி முதலியார். ''ஒருகாலும் கேலிசெய்ய மாட்டேன். சொல்லுங்கள்'' என்றேன்.]

சாதாரணமாய் நாவல்கள் எப்படிப் பட்டவையென்பது உங்களுக்குத் தெரியுமே. எல்லாம் காதல் மயம். நமது வாழ்வுக்குச் சற்றும் பொருந்தாதவை. ஆனல் நான் அப்போது பதினெட்டு வயது வாலிபன். இவ்வளவு தூரம் பகுத்தறியும் சக்தி எனக்கில்லை. ஆகவே மேற்படி நாவல்களைப் படித்த தன் பயனுகக் காதலைப் பற்றியும், விவாகத்தைப் பற்றியும், வருங்கால வாழ்வைப் பற்றியும் ஏதேதோ மனோராஜ்யம் செய்யத் தொடங்கினேன்.

எங்கள் கிராமத்தில் அப்பொழுது பெரிய பணக்காரர் அப்புக்குட்டி முதலியார். அவர்தான் கிராம முனிசிப்பு கூட. அவருக்கு ஒரு பெண் இருந்தாள். அவள் பெயர் தெய்வயானை. இப்பொழுது நினைத்துப் பார்த்தால் அவள் சர்வ சாதாரணமான ஒரு பெண் என்றே தோன்றுகிறது. ஆனல் அப்போது ''நாவல்'' கண்ணுடன் பார்த்த எனக்கு அவள் ஒரு அப்ஸர ஸ்திரீயைப் போல் காணப்பட்டாள். புத்தகத்தில் படித்த கதாநாயகர்களைப் போலவே நானும் அவளைக் கலியாணம் செய்துகொள்ளா விட்டால் உயிர் பிழைத்திருக்க முடியாதென்று உறுதி கொண்டேன்.

இதுவரையில் நாவல் படிப்பு பயன்பட்டது. இதற்கு மேல் என்ன செய்வதென்பதற்கு நாவல்களில் உதவி கிடைக்கவில்லை. நானே தன்னந் தனியனை வாலிபன்; தகப்பனற்றவன்; ஏழை; அப்புக்குட்டி முதலியாரோ பெரும் பணக்காரர். ஊருக்கு எஜமானர். அவரிடம் போய் ''உன் பெண்ணைக் கொடு'' என்று கேட்டால் கட்டி வைத்து அடிப்பார். நாவல்களில் படித்ததுபோல் பெண்ணை நேரில் பார்த்து என் காதலை வெளியிடுவதற்கு வேண்டிய தைரியம் இல்லை. கடைசியாக ஒரு யுக்தி தோன்றிற்று. அந்த ஊரில் சமீபத்தில் கள்ளு, சாராயக் கடைகள் ஏலம் போட இருந்தார்கள். அந்தக் கடைகளை நான் ஏலம் எடுத்துப் பணஞ் சம்பாதித்து அப்புக்குட்டி முதலியாருக்குச் சமமாவது என்று தீர்மானித்தேன்.

** ** **

தன் நகைகளை விற்றும் பத்துப் பன்னிரண்டு வருஷங்களில் கொஞ்சம் கொஞ்சமாகச் சேர்த்தும் என் தாயார் இருநூறு ரூபாய் வரையில் பணம் வைத்திருந்தாள். ஏலப்பணம் கட்டுவதற்கு அத்தொகையைக் கொடுக்கும்படி கேட்டேன். தாயார் ''குழந்தாய்! நம்முடைய குடும்ப சொத்தெல்லாம் எப்படி அழிந்தது தெரியுமா?'' என்று கேட்டாள். ''தெரியாதே! எப்படி!'' என்றேன். ''எல்லாம் உன் தகப்பன் குடித்தே ஒழித்துப் போட்டான். அந்தப் பாவம் என்னத்துக்கு!'' என்ருள். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. இதுவரையில் அந்த விஷயம் எனக்குத் தெரியாது. ஆனல் தெய்வயானையை நினைத்துக் கொண்டேன். தாயார் சொன்ன செய்தியிலிருந்து என்னுடைய தீர்மானம் உறுதிப் பட்டதேயல்லாது வேறில்லை. ''அம்மா! கள்ளுக்கடையில் போன சொத்தைக் கள்ளுக்கடை மூலமாகவே திரும்பச் சம்பாதித்துத் தீருவேன்'' என்றேன்.

கள்ளுக்கடைக்குப் போட்டி அதிகம். எடுக்க முடியவில்லை. சாராயக் கடை மட்டும் எடுத்தேன். வியாபாரம் நன்ருய் நடந்தது. உத்தியோகஸ்தர்களுக்கு அதிக பணம் கொடுத்தேன். ஆனல் என் கையிலும் பணம் அதி வேகமாகச் சேர்ந்து கொண்டு வந்தது. அடுத்த வருஷம் கள்ளுக்கடை, சாராயக் கடை இரண்டையும் எடுத்தேன். அப்புக்குட்டி முதலியா





ருடைய பெண்ணுக்காகச் செய்த இவையெல்லாம் அவர் மனத்தில் பொறாமையைத்தான் உண்டாக்கின. ஏனெனில் அப்போது அவருடைய கை இறங்கி வந்தது. கடன் அதிகமாயிற்று. என் எண்ணம் நிறைவேறுவதற்கான ஒரு சம்பவம் விரைவிலேயே நடந்தது.

["ஐயோ! கடவுளே எத்தனை யெத்தனை இழிவான காரியங்களுக்கெல்லாம் நாம் உடந்தையாகுகிறோம்!" என்றார் நண்பர் இடையில். "கதையைச் சொல்லுங்கள்" என்றேன்.]

ஒரு சமயம் அப்புக்குட்டி முதலியார் தமது குடும்பத்துடன் ஏதோ வியாதி சொஸ்தப் படுத்திக் கொள்ளப் பட்டணத்துக்கு வந்து ஆறு மாதமிருந்தார். அவர் திரும்ப ஊருக்கு வந்த அன்று அவருடைய ஆள் ஒருவன் சாராயக் கடைக்கு வந்து ஒரு புட்டி சரக்கு வாங்கிக் கொண்டு போனான். எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருந்தது. மூன்று நாள் கழித்து மறுபடியும் ஆள் வந்து ஒரு புட்டி வாங்கிப் போனான். அப்போது எனக்குண்டான சந்தோஷத்தை அளவிட முடியாது. "சரி, முதலியார் நமது வலையில் வீழ்ந்தார். அவர் கர்வம் ஒழிந்தது. இந்த ஊரில் நம்மைத் தவிரக் கடன் கொடுப்பார் யாருமில்லை. தெய்வயானை நம்மைத் தப்பி எங்கே போகிறாள்!" என்று ஆகாசக் கோட்டை கட்டினேன்.

** ** **

எல்லாம் நான் எண்ணியபடியே நடந்து வந்தது. ஒரு வருஷத்துக்குள் அப்புக்குட்டி முதலியார் ஊரறிந்த பெருங் குடிகாரர் ஆனார். கடன் விஷம் போல ஏறி வந்தது. ஒரு கோர்ட் வாரண்ட் அவர் மீது பிறந்தது. வாரண்டில் தப்புவதற்காகக் கையிலிருந்த சர்க்கார் டிஸ்ட்ரிக்ட் பணத்தைக் கொடுத்து விட்டார். இவர் குடிகாரரென்றும், கடன்காரரென்றும் மொட்டை விண்ணப்பத்தின் மூலம் அதிகாரிகளுக்குத் தெரிந்து சோதனைக்கு வந்து விட்டார்கள். முதலியார் தம் கர்வத்தை யெல்லாம் விட்டு என்னிடம் ஓடி வந்தார். கெஞ்சாத கெஞ்சக் கெஞ்சினார். காலில் விழாத தோஷந்தான். எண்ணூறு ரூபாய் கடன் கொடுத்து அவரைத் தப்புவித்தேன்.

நான் கொஞ்சம் குறிப்புக் காட்டியதுதான் தாமதம், முதலியார் தெய்வயானையை எனக்குக் கல்யாணம் செய்து கொடுப்பதற்குத் தம் பூரண சம்மதத்தைத் தெரிவித்தார். விவாகத்துக்கு நாள் குறிப்பிடுவதுதான் பாக்கி. இந்தச் சமயத்தில் அப்புக்குட்டி முதலியார் ஒரு நாள் திடீரென்று மரணமடைந்தார். நல்ல திடதேகியாயிருந்த அவர் இப்படி அகால மரண மடைந்ததற்கு மிதமிஞ்சிய குடிதான் காரணமாய் இருக்க வேண்டும். இந்தத் துக்க சம்பவத்தினால் என்னுடைய உத்தேசங்களைப்பற்றிப் புனராலோசனை செய்ய வேண்டியதாயிருந்தது. இப்பொழுது நான் தெய்வயானையை விவாகம் செய்து கொண்டால் அவளுடைய குடும்பப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக் கொள்ள வேண்டி வரும். ஏனெனில் அவர்கள் வீட்டில் வயது வந்த ஆண் மக்கள் யாரும் இல்லை. அப்புக்குட்டி முதலியாருடைய இரண்டாம் தாரம் சிறு பெண். அவளும் அவளுடைய கைக் குழந்தையும், தெய்வயானையும்தான் வீட்டிலுள்ளவர்கள். இவர்களைக் காப்பாற்றும் பொறுப்பையும், குடும்பத்தின் கடனைத் தீர்த்துச் சீர்ப்படுத்தும் பொறுப்பையும் நானே வகிக்க வேண்டியவனாவேன். இப்படியெல்லாம் மனத்தில் சந்தேகங்கள் உண்டாயின. ஆனாலும் தெய்வயானையை மணந்து தான் தீரவேண்டும் என்று தீர்மானித்தேன்.

இப்போதெல்லாம் கள்ளு, சாராயக் கடைகளுக்கு நானே நேரில் போவதில்லை. சம்பள ஆள்கள் வைத்திருந்தேன். அன்றாடம் சாயங்காலத்தில் மட்டும் சென்று கூடுமுதல் தொகையை வாங்கிக்கொண்டு வருவேன். ஒரு நாள் அவ்வாறு சென்ற போது கிராம முனிசிப்பு வீட்டு வேலைக்காரன் அப்பொழுதுதான் கையில் புட்டியுடன் கடையிலிருந்து வெளியே வருவதைக் கண்டேன். என்னைப் பார்த்ததும் அவன் சாலையோரமாய்ப் பதுங்கிக் கொண்டு சென்றான். "இவன் இப்போது யாருக்குச் சாராயம் வாங்கிப் போகிறான்!" என்று தெரிந்து கொள்ள அவனுக்குத் தெரியாமல் அவனைப் பின்தொடர்ந்து சென்றேன். அவன் ஊர்த் தெருவின் கொல்லைப்புறமாய்ச் சென்று அப்புக்குட்டி முதலியாரின் கொல்லை வாயிற்படி வழியாய் நுழைந்தான். இதை முற்றும் ஆராய வேண்டுமென்றெண்ணி, தெரு வீதிக்குச் சென்று முதலியார் வீட்டுக்குள் நுழைந்தேன். கடைக்குச் சென்றதும் சிறிது தயங்கி உள்ளே எட்டிப் பார்த்தேன். அப்போது நான் கண்ட காட்சி இடி விழுந்தாற் போல் என்னைத் திகைக்கச் செய்து விட்டது.

தெய்வயானையும் அவளுடைய சிறிய தாயாரும் ஊஞ்சல் பலகையில் உட்கார்ந்திருந்தார்கள். முதலியார் மனைவி கையில் சாராயப் புட்டி. இரண்டு டம்ளர்களில் ஊற்றி ஒன்றைத் தெய்வயானையிடம் கொடுத்து மற்றொன்றைத் தான் அருந்த ஆரம்பித்தாள். பல வருஷ காலமாக என் உள்ளத்தில் வளர்ந்து வந்த காதல் அத்தனையும் அந்த ஒரு கண நேரத்தில் விஷமாகி விட்டது.

என் மனோரதத்தில் இடி விழுந்தது. என் ஆசையெல்லாம் நிராசையாயிற்று. முதலில் அப்பு முதலியார் வீட்டில் சாராயப் புட்டி புகுந்ததைப் பார்த்த போது நான் ஆசைப்பட்ட பழம் கிட்டி விட்டது என்று சந்தோஷப் பட்டேன். வீட்டுக்குள் சென்ற அந்தச் சாராயப் புட்டி பின்னால் செய்த வேலை, அந்தப் பழம் விஷமாய்ப் போவதற்குக் காரணமாயிற்று. அளவிலாத துக்கத்துடன் அன்று படுத்தேன். பாட்டன் சொன்ன பழங் கதைகளெல்லாம் நினைவுக்கு வந்தன. நாவல்கள் எல்லாம் ஆபாசமாய்த் தோன்றின.

அதற்குப் பிறகு ஒரு வாரத்துக்குள் கள்ளு சாராயக் கடைகளைத் தொலைத்துத் தலை முழுகினேன். அக்கடைகளில் சம்பாதித்த சொத்தையெல்லாம் அந்த ஊர்க் கோவிலுக்கும், பஜனை மடத்துக்கும், பள்ளிக்கூடத்துக்குமாகப் பகிர்ந்து எழுதி வைத்தேன். இந்த தர்மங்கள் சரிவர நடப்பதற்கு ஏற்பாடு செய்தேன். கையில் கொஞ்ச ரூபாய் எடுத்துக் கொண்டு தாயாரும் நானும் இந்தச் சென்னை நகருக்கு வந்து சேர்ந்தோம்—என்று கூறி நண்பர் கதையை முடித்தார்.

அட்டைப்பட விளக்கம்

அமரதாரா தொடர் கதையில் வரப் போகும் விஜயராம பட்டினத்துக் கடற்காட்சியை இந்த வாரத்து அட்டைப்படம் சித்திரிக்கிறது.



தேனாம்பேட்டையில் தேசீயத் திருவிழா



சபாஷ்!

தமிழ் நாடு ஜமாய்த்து விட்டது!

ஜமாய்க்காமல் என்ன செய்யும்! இதுவரையில் தமிழ்நாடு எந்த நல்ல காரியத்தில்தான் பின் வாங்கி இருக்கிறது!

கல்வியிலும், கலாசாரத்திலும், கைத்தொழிலும், தேசியத் திருப்பணியிலும், தியாகத்திலும் தமிழ்நாடு முன்னணியில் நின்று வந்திருப்பது சரித்திரப் பிரசித்தமான விஷயம்.

எந்த விஷயத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, தமிழ்நாடு மற்ற மாகாணங்களுக்கு வழி காட்டியாக இருந்திருக்கிறது என்று கூறுவது சிறிதும் மிகையாகாது.

எனவே ஆவடியில் நடந்த அறுபதாவது காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தை எல்லா வகையிலும் சிறப்பாகக் கொண்டாடி வெற்றி முழக்கம் செய்ததிலும் ஆச்சரியமில்லை.

முக்கியமாக, ஆவடியில் காங்கிரஸ் மகாசபை நடந்தபோது அங்கு கண்ட காட்சிகளை எப்படி வர்ணிப்பது என்றே தெரியவில்லை.

கவிஞர்களும் ஆசிரியர்களும் கற்பனை செய்யும் அற்புதங்கள் எல்லாவற்றையும் விடப் பெரிய அற்புதமாக ஆவடி என்னும் சின்னஞ்சிறு கிராமத்தில் நடைபெற்றது.

காங்கிரஸ் மகாசபை நடந்த ஜனவரி 21, 22, 23 ஆகிய மூன்று தினங்களிலும் கற்பனைக்கு எட்டாத அற்புதத்தைப் பார்த்தேன். ஆறு பேர் நெருக்கி அடித்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் காரில் பன்னிரண்டு பேர் சந்தோஷமாக உட்கார்ந்திருந்ததைக் கண்டேன். மோட்டார் காரே செல்லாத பொட்டை வெளியில் ஆயிரமாயிரம் மோட்டார்கள் ஓடிக் கொண்டிருந்ததைப் பார்த்தேன். மனிதர்களையே காணமுடியாத ஆவடியில் ஐந்து லக்ஷம் ஜனங்களுக்கு மேல் குதூகலமாகக் கூடி யிருந்ததையும் பார்த்தேன்.

மணிக்கு அறுபது மைல் வேகம் போகக் கூடிய கார்கள் மூன்று மணி நேரத்தில் அரை மைல் கூடப் போக முடியாமல் அங்குலம் அங்குலமாக நகர்ந்து கொண்டிருந்ததைக் கண்டேன்! மந்திரிமார்களும், பெரிய பெரிய தலைவர்களும் கூட்டத்தில் அகப்பட்டுக் கொண்டு காங்கிரஸ் விழாப் பந்தலுக்குப் போக முடியாமல் திண்டாடிக் கொண்டிருந்ததைக் கண்டேன்!

இந்தச் சம்பவங்களை இப்பொழுது நினைத்துப் பார்த்தால் ஏதோ கனவுத் தோற்றமாக, கற்பனை போலத்தான் இருக்கிறது.

இருநூறு வருஷம் அடிமை வாழ்வில் உழன்ற பாரத நாட்டுக்குச் சுதந்திரம் வாங்கித் தந்த காங்கிரஸ் மகாசபையின் அறுபதாவது விழாவை மக்கள் ஆனந்தத் திருவிழாவாகக் கொண்டாடுவது இயல்புதான். ஆனாலும் தமிழ் நாட்டில் அறுபதாவது காங்கிரஸ் மகாசபை நடந்த அற்புதத்தின் மகிமையை உணர வேண்டுமானால் அதை யொட்டித் தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் ஆரம்பித்து அமோகமாக நடந்து வரும் காங்கிரஸ் பொருட் காட்சியைப் போய்ப் பார்த்தாலே நன்றாக விளங்கும்.

ஆவடியில் காங்கிரஸ் மகாசபை நடந்த இடத்துக்கு "சத்தியமூர்த்தி நகர்" என்று திருநாமம் சூட்டிப் பெருமைப் பட்டார்கள் அல்லவா! அந்தத் தீரர் சத்தியமூர்த்தி அவர்கள் 1931–ம் வருஷம் இந்த அகில இந்திய காங்கிரஸ் பொருட் காட்சியை ஆரம்பித்து வைத்தார்கள். ஆண்டு தோறும் டிசம்பர் மாதத்தில் காங்கிரஸ் பொருட் காட்சி நடக்கும். இந்த ஆண்டு ஆவடியில் நடந்த அறுபதாவது காங்கிரஸ் விழாவுக்காக மேற்படி பொருட் காட்சியை டிசம்பர் மாதத்தில் நடத்தாமல் ஜனவரி மாதம் காங்கிரஸ் மகாசபை ஆரம்பமாகப் போகும் நாலு தினங்களுக்கு முன்பாக ஆரம்பித்தார்கள். ஸ்ரீ சத்தியமூர்த்தி ஆரம்பித்து வைத்த இந்தப் பொருட் காட்சி இன்று உன்னதமாக வளர்ந்து இந்தியாவிலே சிறந்த பொருட் காட்சியாக விளங்குகிறது. இப் பொருட் காட்சியைப் பார்த்த அகில இந்திய காங்கிரஸ் தலைவர்கள் எல்லாம் அப்படியே மலைத்துப் போய் விட்டார்கள். "இதைப் போன்ற கலைப் பொருட் காட்சியைப் பார்த்ததே

"இல்லை" என்று வாய் விட்டுச் சொன்னார்கள். இப்படி ஜவாஹர்லால் நேருவிலிருந்து சாதாரண மனிதர்கள் வரையில் புகழும் பொருட்காட்சியை ஆவடி காங்கிரஸ் முடிந்த பிறகு போய்ப் பார்த்தேன். அவர்கள் ஒன்றும் மிகைப்படுத்திக் கூறவில்லை என்பதைக் கண்டேன்.

காங்கிரஸ் பொருட்காட்சி ஒரு தேசியத் திருவிழாவாகக் கோலாகலமாக நடந்து வருகிறது.

முப்பது ஏக்கர் நிலப்பரப்பில் பொருட்காட்சியை அமைத்திருக்கிறார்கள். ஆயிரத்துக்கு மேற்பட்ட ஸ்டால்கள் பொருட்காட்சியில் இருக்கின்றன. இதில் ஐந்நூறுக்கு மேற்பட்ட ஸ்டால்களை இந்திய சர்க்கார், சென்னை சர்க்கார், இன்னும் பாரத நாட்டில் உள்ள பதினைந்து ராஜ்ய சர்க்கார்கள் எடுத்துக் கொண்டிருக்கின்றனர். இன்னும் இந்தியாவில் உள்ள மிகப் பெரிய தொழில் ஸ்தாபனங்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன. டாட்டா, ஏ. ஸி. ஸி. ஸிமெண்டு கம்பெனி, சேஷசாயி குரூப், டி. ஐ. சைக்கிள் கம்பெனி, டீ. போர்டு முதலிய பிரபலமான தொழில் ஸ்தாபனங்கள் தங்கள் ஸ்தாபனங்களை வெறும் வியாபார நோக்கத்தின் விளம்பரத்துக்காக மட்டுமில்லாமல், பொது மக்களின் அறிவை வளர்க்கும் உயர்ந்த நோக்கத்தைக் கொண்டும் அமைத்திருக்கிறார்கள். அந்த ஸ்டால்களைப் பார்க்கும்போது நமது நாட்டின் தொழிற் செல்வத்தை ஒரு மாதிரி புரிந்து கொள்ள முடிகிறது. இன்னும் மகாத்மா காந்திக் காட்சி, பாரதி கலைக் காட்சி, கலாசாரப் பகுதி, புராதனப் பொருள்களைக் கொண்டு பழங்கால நாகரிகத்தை விளக்கும் பகுதி, நாடக மேடை, கேளிக்கைகள் முதலிய பலதரப்பட்ட விஷயங்களும் ஏராளமாக இருக்கின்றன.

இவ் விவரங்களை எல்லாம் தெரிந்து கொண்ட போது இந்தப் பொருட் காட்சியை நடத்துபவர்களை என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

நாலு அணா கொடுத்து டிக்கட் வாங்கிக் கொண்டுதான் பொருட் காட்சிக்குள் சென்றேன். உள்ளே நான் பார்த்த காட்சிகளை நினைக்கும்போது இதற்கு நாலு அணா என்ன, வசதியும் மனமும் இருந்தால் நாற்பது ரூபாய்கூடக் கொடுக்கலாம் என்றுதான் தோன்றியது.

பௌண்ட் ரோடில் உள்ள பொருட்காட்சி வாசல் வழியாக உள்ளே போவதற்கு முன்னால் பொருட்காட்சி வாசலை அண்ணாந்து பார்த்தேன். அந்த வாசலின் அமைப்பு, கலை அழகுடன் கம்பீரமாகக் காட்சி தருகிறது. காந்தி மகானின் சாந்த உருவமும் அதைச் சுற்றித் தமிழ்நாட்டின் கிராமக் காட்சிகளும் பார்த்துப் பார்த்து அனுபவிக்க வேண்டிய அருமையான காட்சி.

அந்தக் கலை மணம் கமழும் வாசலின் அற்புதத் தோற்றத்தில் மனத்தைப் பறிகொடுத்து விட்டுப் பொருட் காட்சிக்குள்ளே புகுந்தேன். பொருட் காட்சிக்குள் கூட்டம் அபரிமிதம். இவ்வளவு பெரிய கூட்டம் எந்த வருஷத்துப் பொருட்காட்சியிலும் கூடியதில்லையாம். மக்களின் உற்சாகமோ அதைவிடப் பிரமாதம். ஒலிபெருக்கியின் மூலம் அருமையான கான விருந்து கிடைத்துக் கொண்டிருந்தது. மக்கள் கூட்டம் கூட்டமாகப் பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் சென்று கொண்டிருந்தனர். இத்தனைக்கும் மத்தியில் நாதஸ்வர கீதமும், சங்கீதமும், தமிழ்ப் பாடலும் அமளி துமளிப் பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் புளகாங்கிதமும் பரவசமும் அடையாமல் யாரும் இருக்க முடியாது.


இந்த உணர்ச்சி எனக்குப் பொருட்காட்சியை விட்டு வெளியில் வந்த பிறகு இன்னமும் பசுமையாக இருக்கிறது.

பொருட் காட்சியில் என் அருகில் இருந்த சிலர் "அதோ பார்த்தீர்களா! நமது சென்னை சர்க்கார் பகுதி" என்று சொல்லிக்கொண்டு சென்றனர். நானும் அவர்களுடன் சேர்ந்து ஜனப் பிரளயத்தில் இறங்கி நீந்திச் சென்றேன்.

ஆகா! கண்காட்சியில் உள்ள இதர ராஜ்ய சர்க்கார் பகுதிகள் எல்லாம் சென்னை சர்க்கார் பகுதிக்கு ஈடு ஆகுமா! பொருட் காட்சியில் சென்னை அரசாங்கப் பகுதியே முக்கியமானபகுதி! அது எத்தனை நீளம்! எத்தனை அகலம்! எத்தனை விஸ்தாரம்! எத்தனை இலாகாக்கள்! அந்த இலாகாக்களில் எத்தனை எத்தனை ஸ்டால்கள்! அந்த ஸ்டால்களில் எத்தகைய வேலைப்பாடுகள்!

ஒவ்வொரு ஆண்டிலும்தான் சென்னை சர்க்கார் காங்கிரஸ் பொருட்காட்சியில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். ஆனால் இந்த ஆண்டைப்போல் எந்த ஆண்டும் சென்னை சர்க்கார் பகுதி இவ்வளவு சிறப்பாக இருந்ததில்லை.

சென்னை சர்க்காரின் எல்லா இலாகாக்களும் இதில் பங்கெடுத்துச் சிறப்பித்திருக்கின்றன. சுமார் பதினைந்து இலாக்காக்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கின்றன.



களைப்புத் தீரத் தேனீர் அருந்துகிறார்கள்!

ஆரம்பத்தில் செய்தி விளக்க மண்டபம் இருக்கிறது. அதில் சென்னை ராஜ்யத்தைப் பற்றிய பொது விவரங்கள், ஜனத்தொகை, ஆட்சி அமைப்பு, அரசாங்கத்தின் வருமானம், ஐந்து வருஷத் திட்டம், தேசிய வளர்ச்சித் திட்டம், சமுதாய நலத் திட்டம் ஆகியவற்றை விளக்கும் படங்களும் விவரங்களும் இருக்கின்றன. ஒவ்வொருவரும் பார்த்துத் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயங்கள். இவற்றை யெல்லாம் பார்த்துக் கொண்டு வருவதற்குள் "இதோ பாருங்கள், குதிரை மேல் போலீஸ்காரர் உட்கார்ந்திருக்கிறார்" என்று என்னைத் தள்ளிக் கொண்டு சென்றனர், கூட்டத்தில் இருந்த சில உற்சாகிகள். அவர்களோடு சென்றேன்.

சென்னை அரசாங்கப் போலீஸ், மக்களுக்குச் செய்து வரும் சமூக ஊழியத்தை

விளக்கும் பல விஷயங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லு கிருர்கள் போலீஸ் அதிகாரிகள்.

அந்த இலாக்காவுக்குள் நுழையும் போதே போலீஸ் பாண்டு வாத்தியம் முழங்க, குதிரைகள் மீது இரண்டு போலீஸ்காரர்கள் அமர்ந்து மரியாதை செய்ய, ஒரு போலீஸ்காரர் நிமிர்ந்து நின்று நமக்கு சலாம் போட்டு வரவேற்கிருர். அவ்வரவேற்பை ஏற்றுக்கொண்டு உள்ளே சென் ரால் போலீஸ் இலாகா மக்க ளுக்கு எவ்வளவு பெரிய தொண் டாற்றுகிறது என்பதை ஒவ் வொரு இடத்திலும் நன்கு தெரிந்து கொள்ள முடிகிறது. திருட்டுக் குற்றங்களைக் கண்டு பிடிப்பதற்குப் போலீஸ் கை யாளுகின்ற நுட்ப முறைகளைக் கேட்கும்போது ஒரே வியப் பாக இருக்கிறது. கள்ள நாண யம் போடுபவர்கள் உபயோகிக் கும் கருவிகள், அவர்களைப் பிடித்த முறை எல்லாவற்றை யும் விளக்கி, கள்ள நாணயம் எப்படி இருக்கும் என்பதையும் காண்பிக்கிருர்கள்.

திருடர்கள் ஒரு இடத்திலே யிருந்து தப்பித்துக் கொண்டு போய் விட்டால் அவர்கள் அடிச் சுவட்டின் அமைப்பைக் கொண்டே அவர்கள் திருடர்கள் என்பதை போலீஸ் நிபுணர்கள் கண்டு பிடித்து விடுகிருர்கள். இதைத் தத்ரூபமாகக் காட்டு கிருர்கள். திருட்டுப் போன வீட்டில் உள்ள சாமான்கள் இருந்த பெட்டி முதலியவைகளைத் திருடர்கள் தொட்டுத்தானே இருப்பார்கள். அப் பொழுது அவர்கள் கைரேகை அதில் படத் தானே செய்யும். அதைக்கொண்டு தஞ்சாவூரில் ஒரு பெரிய திருட்டைத் துப்பு துலக்கி யிருக் கிருர்கள் நமது போலீஸ் நிபுணர்கள். இதைக் கண்டு பிடித்த விதத்தையும் அழகாக விளக்கிக் காட்டி யிருக்கிருர்கள். இன்னும் போலீஸார் உபயோகித்து வரும் விதம் விதமான ரிவால் வர்கள், பிஸ்டல்கள், துப்பாக்கிகள் எல்லாம் காட்சிப் பொருளாக வைத்து மக்களுக்கு எடுத்து விளக்கிச் சொல்லப்படுகின்றன.

முன்பெல்லாம் இவைபோன்ற விஷயங்களைப் பெரிய மூடுமந்திரமாக வைத்திருப்பார்களாம். சுதந்திரம் பெற்ற நாட்டில் எல்லா மக்களும் எல்லா விஷயங்களையும் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் அல்லவா! அதற்காகவே இதைக் கண்காட்சியில் வைத்துக் காண்பிக்கிருர்கள்.

அடுத்த மண்டபத்தைப் பார்த்துத் திரும்பும் போது "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்ற பெரியோர் வாக்கு எவ்வளவு அனுபவம் நிறைந்த உயர்ந்த வாக்கு என்பதை உணர்ந்தேன். அந்தச் செல்வத்தைப் பெறச் சுகாதாரம் எவ் வளவு அவசியமானது என்பதையும், இதை உணராமல் நாம் நடந்து கொள்ளும் முறையை யும் எண்ணிப் பார்த்தேன். எனக்கு ஒரே வெட்கமாகப் போய் விட்டது. எத்தனையோ புத்தகங்களும், பள்ளிக்கூடமும் நமக்கு அளிக்க முடியாத சுகாதார அறிவை அந்தச் சுகாதாரத் துறை மண்டபத்தில் உள்ள பொருள்களும், அதை விளக்கிக் கூறும் சிப்பந்திகளும் நமக்கு ஒரு சில நிமிஷ நேரத்தில் கற்பித்து விடுகிருர்கள்.

இந்த இலாகாவின் கோடியில் இந்திய வைத்திய மூலிகைகள் அபிவிருத்தி அடைந்து வருவதை அற்புதமாகக் காட்டி யிருக்கிருர்கள்.

இதைப் பார்த்து விட்டுத் தொழில் வர்த்தக இலாகாவுக்குள் நுழைந்தேன். அடாடா! விஞ் ஞானத்தின் அற்புதத்தைக் கண்டு வியந்தேன். ரேடியோ ஒலி அலைகளின் மூலம் எங்கோ ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்டு எங்கோ ஒரு இடத்தில் தண்ணீரில் மிதக்கும் படகை நினைத்த படி எல்லாம் ஓடவிட்டுக் காட்டுகிருர்கள். இது போல இன்னும் எத்தனை எத்தனையோ மின்சார விந்தைகள் அங்கு இருந்தன.


இதற்குப் பிறகு சென்னை சர்க்கார் பஸ் இலாகா, மாதர் நல இலாகா, சென்னைக் கூட் டுறவு இலாகா, கல்வி இலாகா முதலியவைகளைப் பார்த்துக் கொண்டே வந்தேன்.

ஒரு இடத்தில் சிறு குழந்தைகள் ஒருவர் பின் ஒருவராக நின்று ரயில் வண்டி விளையாடுகிருர் களே, அதுபோல ஆண்களும் பெண்களுமாக 'க்யூ'வில் நின்று கொண்டிருந்தார்கள்.

"ஏன் அப்படி நிற்கிருர்கள்?" என்றேன்.

"அரசாங்க மின்சார இலாகாவைப் பார்த்துக் களிப்பதற்காகத்தான்" என்ருர் அருகில் இருந்தவர்.

விழுந்தடித்துக் கொண்டு ஓடி 'க்யூ'வின் கடைசியைக் கண்டு பிடிக்க முயன்றேன். வளைந்து வளைந்து சென்று கடைசியில் 'க்யூ'வின் ஆரம்பத்தைக் கண்டு பிடித்து நின்றேன். கால் கடுக்க நின்று எறும்பு ஊர்வது போல ஊர்ந்து சென்று மின்சார இலாகாவின் உள்ளே நுழைந்தேன்.



சென்னையில் காங்கிரஸ் வைர விழா நடந்தபோது பண்டித நேரு. எத்தனையோ வேலைகளுக்கிடையில் நேரும்பேட்டை காங்கிரஸ் பொருட்காட்சியைப் பார்க்கவும் சமயம் ஏற்படுத்திக் கொண்டார். ஸ்ரீ டி. எம். எஸ். மணி ஐ.ஸி.எஸ். அவர்களும், மின்சார இலாகா சீப் இன்ஜினீர் ஸ்ரீ அப்பாதுரை அவர்களும் நேருஜியை மின்சார இலாகாப் பகுதியில் அழைத்துக் காண்பிப்பதை மேலே காணலாம்.

அடாடா! அற்புதம் போங்கள்! இந்தியாவிலேயே நமது சென்னை ராஜ்ய மின்சார இலாகா தான் சிறப்பாக முன்னேறி உயர்ந்திருக்கிறதாம். பல ராஜ்யத்தாரும் நமது மின்சார இலாகாவின் அபிவிருத்தியையும் சாதனைகளையும் பார்த்து வியந்து போகிறார்களாம். இதைக் கேள்விப்பட்டதும் நிமிர்ந்த மார்புடன் கம்பீரமாக நமது மின்சார இலாகாவின் சாதனைகளை ஒவ்வொன்றாகப் பார்க்க ஆரம்பித்தேன்.

சுதந்திரம் பெற்றபிறகு நமது சர்க்கார் என்ன சாதித்து விட்டார்கள் என்று சிறிதும் யோசிக்காமல் சொல்கிறார்களே, அவர்கள் இந்த மின்சார இலாகாவை ஒருதரம் சுற்றிப் பார்த்தார்களானால் அப்படிச் சொல்லவே மாட்டார்கள். உலகத்தில் சுதந்திரம் பெற்ற பின் எந்த நாட்டிலும் இவ்வளவு குறைந்த வசதியில் ஒரு சில வருஷங்களில் இந்த அபிவிருத்தி ஏற்பட்டதில்லையாம். அவ்வளவு தூரம் நமது ராஜ்யத்தில் மின்சார அபிவிருத்தியும் அதைக் கொண்டு ஆக்க வேலைகளும், உணவு உற்பத்தியும் நடந்து வருவதைப் படித்தவரும், பாமரரும் தெளிவாக உணர்ந்து அநுபவிக்கும்படி காண்பிக்கிறார்கள்.

உதக மண்டலத்துக்குப் போகாமலே அதன் இன்பத்தையும் அழகையும் அநுபவிக்கலாம். பைக்காராவைப் பார்க்கலாம். மேட்டூர் அணையைக் கண்டுகளிக்கலாம். இன்னும் புதிது புதிதாக எங்கெங்கு என்னென்ன செய்யப் போகிறார்கள் என்பதைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாம். சென்னை நகருக்கு மின்சாரம் சப்ளை செய்யும் பவர் ஸ்டேஷன்களையும் தனித்தனியாகப் பார்க்கலாம்.

அடுத்தாற் போல் இந்த ஆண்டு எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்து இழுத்து வியப்படையச் செய்யும் புது இலாகா "ஹைவேஸ் இலாகா"—அதாவது பெரிய சாலைகள் அமைக்கும் இலாகா. இந்த இலாகாவுக்குள் நுழைந்தவுடனே நல்ல சாலைகள் அமைப்பதிலும், ஏராளமான புதுப் பாலங்கள் கட்டியிருப்பதிலும் நம் சென்னை ராஜ்யம்தான் இந்தியாவிலேயே முதன்மை ஸ்தானம் வகித்து வருகிறது என்ற உண்மையைத் தெரிந்து கொண்டேன்.

மணல் சாலையில் ஒரு வண்டியை இழுக்க ஆறு ஆட்களின் பலம் வேண்டியிருக்கிறது. அதே வண்டியை ஐந்து ஆட்கள் கஷ்டமில்லாமல் களிமண் சாலையில் இழுத்து விடுகிறார்கள். தார் ரோட்டிலோ இரண்டே ஆள் இழுத்து விடுகின்றனர். இதைத் தத்ரூபமாக நமக்கு விளங்கும்படி சிறு சிறு மாதிரிச் சிற்ப வண்டி ஆள்களின் மூலம் காட்டுகிறார்கள். கிராமத்துச் சாலையில் கஷ்டப்பட்டு வண்டி இழுத்துக் கொண்டு வரும் ஒரு மாடு பட்டணத்து 'ஹைவேஸ்' சாலையில் ஏறியவுடனே "ஆகா! பட்டணத்துச் சாலையே சாலை!" என்று சொல்லிக்கொண்டு குதூகலமாக ஓடுகிறது!

ஆற்றில் பாலம் கட்டுவதற்கு முன் அந்தப் பாலத்துக்கு எப்படி எவ்வளவு ஆழமாக அஸ்திவாரம் போடுகிறார்கள், அந்த அஸ்திவாரத்தை எப்படி அமைக்கிறார்கள், பிறகு பூமி மட்டத்துக்கு மேலே அதை எவ்வாறு கட்டுகிறார்கள் என்பதையும் ஒவ்வொரு நிலையிலும் அது எப்படி இருக்கும் என்பதையும் மிக நன்றாக எல்லோருக்கும் விளங்கும்படி மாதிரிப் பாலமே செய்து வைத்திருக்கிறார்கள். நவீன இயந்திர சாதனங்களைக் கொண்டு புதிய சாலைகள் போடுவதைச் சின்ன மாதிரி இயந்திரங்களைக் கொண்டே புதிய சாலைகளைப் போட்டுக் காண்பிக்கிறார்கள்.

அந்தந்த ஊர் மண்ணுக்குத் தகுந்தபடி சாலை அமைக்கும் முறையை விஞ்ஞான முறையில் கண்டு பிடிப்பதற்காக 'ஹைவேஸ்' இலாகா ஒரு ஊர் சுற்றும் மோட்டார் வண்டியை வைத்திருக்கிறது. அந்த வண்டிக்குள் ஒரு பெரிய விஞ்ஞானக்கூடமே இருக்கிறது. இந்த வண்டி ஒவ்வொரு கிராமத்துக்கும் சென்று அந்த ஊர் மண்ணின் தரத்தையும் அதன் பலத்தையும் கண்டு பிடித்து அதற்கு ஏற்ற முறையில் குறைந்த செலவில் சாலை அமைக்கும் முறைகளைச் செய்து வருவதைக் காண்பிக்கிறார்கள். இதையெல்லாம் பார்க்கும்போது ஔவைப் பிராட்டி, "கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு" என்று சொன்னாரே, அது எவ்வளவு உண்மை என்று எண்ணி வியக்க வேண்டியிருக்கிறது.

சென்னை நகரில் இருப்பவர்களுக்குத் தெரியும், சென்ட்ரல் ஸ்டேஷனுக்கு எதிரில் மோட்டார் கார்களும், பஸ்களும், லாரிகளும், சைக்கிள்களும் அப்படி அப்படியே தேங்கி நின்று காலதாமதம் ஆகும் கஷ்டத்தைப் பற்றி. அந்தத் தொல்லையை எப்படி நிவர்த்திக்கலாம் என்பதை விளக்கி ஒரு புதிய மாதிரிச் சாலையைச் சிற்பமாக அமைத்துக் காண்பித்திருக்கிறார்கள். இந்த மாதிரிச் சிற்பத்தைப் பார்க்கும்போது இப்படிச் செய்தால் நிச்சயம் நெருக்கடி குறையும் என்றுதான் தோன்றுகிறது. ஆனால் இதை எப்பொழுது காரியத்தில் நிறைவேற்றுவார்களோ!

அடுத்தாற்போல் மராமத்து இலாகாவுக்குள் நுழைந்தேன். மராமத்து இலாகாவுக்குள் ஒரு புது ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதன் வாசலில்

பிப்ரவரி 11உ முதல்

சென்னை **வெலிங்டன், பிரபாத், சரஸ்வதி** மூன்று தியேட்டர்களிலும்

மற்றும் தமிழ்நாடெங்கும்



லலிதா • சகஸ்ரநாமம் • சுந்தரிபாய் • எஸ்.வி.சுப்பய்யா

வனஜா • ஆர். கணேசன் • டி. எஸ். துரைராஜ் • பி.எஸ். ஞானம் நடித்தது

டைரக்ஷன்: கொத்தமங்கலம் சுப்பு

ஸ்டுடியோ: ஜெமினி • ஜெமினி ரிலீஸ்

இதுவரை எத்தனை பேர் வந்திருக்கிறார்கள் என்பதைக் காட்டும் கருவி ஒன்றை அமைத்திருக்கிறார்கள். ஒருவர் உள்ளே போனதும் அந்தக் கருவியில் ஒரு எண்ணிக்கை அதிகமாகிறது. நான் உள்ளே போனதும் அந்த எண்ணிக்கையைப் பார்த்தேன். ஒரு லட்சத்துப் பத்தாயிரத்து இருபத்து மூன்று என்று இருந்தது. எனக்கு முன் ஒரு லட்சத்துப் பத்தாயிரத்து இருபத்து இரண்டு பேர் பார்த்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொண்டதும் எனக்கு ஒரே ஆச்சரியமாகத்தான் இருந்தது. அந்த இலாகாவில் முதன் முதலில் கரிகால் சோழர் அணை கட்டியதிலிருந்து இராஜராஜ சோழன் வரையில் சுமார் பத்துக்கு மேற்பட்ட தமிழ் நாட்டு அரசர்கள் கட்டிய அணைகளையும் ஏரிகளையும், அவை கட்டிய காலத்தைக் காட்டும் பூகோளப் படமும் அந்தந்த மன்னன் கட்டிய அணைகளையும் ஏரிகளையும் காட்டும் மின்விளக்கமும் எழுத்தறிவில்லாத ஒரு பாமரனுக்குக் கூடத் தமிழ் நாட்டுச் சரித்திரத்தை ஒரு சில நிமிஷங்களில் புரியும்படி செய்து விடுகின்றன.

உலகில் முதன்முதலில் நீரைத்தேக்கி அணையைக் கட்டியவன் தமிழன் என்று நினைத்துப் பெருமைப் படுவதற்கும் அந்தப் பெருமையிலேயே மேலும் பல அணைகளை அமைப்பதற்கும் இந்தக் காட்சியை மிகச் சிறந்த முறையில் அமைத்திருக்கிறார்கள். அப்படி அணை கட்டும் என்ஜினியர்களுக்குத் தமிழில் 'ஜலசூத்ரதாரர்' என்று அந்தக் காலத்தில் பெயர் வழங்கி வந்திருக்கிறது.

இதை யெல்லாம் சுற்றிப் பார்த்து விட்டுத் திரும்பும்போது நான் களைத்துப் போய்விட்டேன்.

"என்ன, ஒருமாதிரியாக இருக்கிறீர்களே!" என்று கேட்டுக் கொண்டே பூமியிலிருந்து திடீர் என்று தோன்றியவர் போல வந்தார் என் நண்பர்.

"எனக்கு ஒரே களைப்பாக இருக்கிறது. கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொண்டால்தான் மேலே போகலாம் போலிருக்கிறது" என்றேன்.


என் கையைப் பிடித்துக் 'கர கர' வென்று இழுத்துக் கொண்டு ஜனக் கூட்டத்தில் புகுந்து சென்றார். சற்று தூரத்துக்கு அப்பால் "புருக் பாண்ட் டீ" கம்பெனியார் டீ ஸ்டால் வைத்திருந்தனர். அங்கு முதல்தரமான டீ சாப்பிட்டோம். அடுத்த கணத்தில் என்னுடைய களைப்பெல்லாம் பறந்து போய் விட்டது.

இன்னும் பொருட் காட்சியில் பல வேடிக்கைக் காட்சிகளைப் பார்த்தோம். விசித்திரக் காட்சிகளையும் பார்த்தோம். இதற்குள் என் நண்பர் கூட்டத்தில் எப்படியோ காணமற் போய் விட்டார். அவரை எப்படி இந்த ஜன சமுத்திரத்தில் தேடிப் பிடிப்பது என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போதே, "ஹலோ! மிஸ்டர் பகீரதன்! உடனே இந்திய சர்க்கார் பகுதிக்கு வாருங்கள்; உங்களுக்காக உங்கள் நண்பர் அங்கு காத்துக் கொண் டிருக்கிறார்!" என்று ஒலி பெருக்கியிலிருந்து சத்தம் வந்தது. இதைக் கேட்டதும் எனக்கு ஆச்சரியமாகப் போய் விட்டது. பிறகு அதைப் பற்றி விசாரித்தேன்.

"யாராவது கூட்டத்தில் காணமற் போனால் கவலைப்பட வேண்டியதில்லை. இங்குள்ள சேவாதள காரியாலயத்தில் சொன்னால் போதும். அவர்கள் ஒலிபெருக்கி மூலம் கூப்பிட்டு விடுவார்கள்" என்று சொன்னார்கள்.

எவ்வளவு அருமையான ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டே இந்திய சர்க்காரின் எழில் மிக்க பகுதியைப் பார்க்கலாம் என்று கிளம்பினேன். (அடுத்த இதழில் முடியும்)

நோயின் வகை!



"காமன்வெல்த் மந்திரிகள் மகாநாடு லண்டனில் கூடியிருக்கிறது." —செய்தி



நீரைத் தேக்குவோம்! நிலத்தைப் பெறுவோம்!

எஸ். வி. எஸ்

'சேலம்' என்று சொன்னவுடனேயே அது நமது ராஜாஜி ஊரல்லவா என்று யாருக்கும் நினைவு வரும். பழைய காங்கிரஸ் சரித்திரம் அறிந்தவர்களுக்குச் சேலம் விஜயராகவாச்சாரியார் நிரச் செயல் புரிந்த ஊரல்லவா என்பதும் நினைவுக்கு வரும். மாம்பழ ரஸிகர்களுக்கு, 'ஆகா! சேலம் மாம்பழத்தின் ருசியே, ருசியே' என்று நினைவுக்கு வந்து நாக்கைச் சப்புக்கொட்ட ஆரம்பித்து விடுவார்கள்.

ஆனால் கிருஷ்ணகிரி — ஒசூர் தொகுதியின் டில்லி மக்கள் சபை அங்கத்தினர் ஸ்ரீ ஸி. ஆர். நரஸிம்மனோ, எப்பொழுதும், "எங்கள் ஜில்லாதான் எவ்வளவு பிற்பட்ட ஜில்லா, அதிலும் எங்கள் தொகுதி எவ்வளவு பிற்பட்ட தொகுதி. நீர் வசதி கிடையாததினால் நன்செய் நிலங்கள் கிடையாது. உணவுப் பொருளுக்குப் பிற ஜில்லாக்களை எதிர்பார்க்க வேண்டும். பெரிய ஆலைகள் கிடையாது, ஏரிகள் கிடையாது, கிணறுகளில் தண்ணீர் ரொம்ப ஆழத்தில் இருப்பதும் சந்தேகம்" என்று ஓயாமல் சொல்லிக் கொண்டிருப்பார்.

மனசுக்கு உற்சாகமளிக்கக் கூடிய விஷயமாக ஒரு நாளாவது இவர் சொல்ல மாட்டாரா என்று எத்தனையோ நாள் எண்ணி ஏங்கி யிருக்கிறேன்.

ஆனாலும் அவர் அப்படிச் சதா எண்ணிக் கொண்டிருந்தது நல்லதாகப் போயிற்று. யாருக்கு? எனக்கல்ல—சேலம் வாசிகளுக்கு, அதிலும் கிருஷ்ணகிரி ஒசூர் தாலூக்கா வாசிகளுக்கு!

ஏனெனில் கிருஷ்ணகிரிக்கு அருகில் பெரிய நீர்த் தேக்கம் ஏற்படுத்தி ஏராளமான நிலங்களைப் பண்படுத்திப் பயிர் செய்ய சென்ற ஜனவரி 3ந் தேதி அஸ்திவார விழா நடத்தப்பட்டது.

* * *

'காவிரி தென் பெண்ணை பாலாறு' என்று மகாகவி பாரதியார் பாடினார் அல்லவா! தமிழகத்தின் மக்களை வாழ வைக்கும் நதிகளில் தென்பெண்ணையாறும் ஒன்று. இந்தத் தென் பெண்ணை மைசூரில் தக்ஷிண பிநாகினி என்ற பெயருடன் பாய்கிறது. ஒசூர் தாலூக்காவுக்கருகில் தமிழ் ஜில்லாவில் பிரவேசிக்கிறது. தமிழ் நாட்டில் தென் பெண்ணை என்றும், பெண்ணை என்றும் வழங்குகிறது. இந்தப் பெண்ணை யாற்றில்தான் கிருஷ்ணகிரிக்கு ஆறரைமைல் தூரத்தில் ஓர் அணை கட்ட சென்ற ஜனவரி மாதம் ராஜ்ய முதன் மந்திரி காமராஜ் ஆரம்ப விழா நடத்தி வைத்தார்.


இந்த விழாவுக்குச் சுற்றுப்புற கிராமங்களிலிருந்து மக்கள்–பாமர மக்கள்–வண்டி கட்டிக் கொண்டும், நடந்தும் ஆயிரக் கணக்கில் ஏதோ கோவில் திருவிழாவுக்குப் போவது போல் வந்திருந்தனர். அவர்கள் முகத்தில் ததும்பிய மகிழ்ச்சி பாவத்தைப் பார்த்த போதுதான், கங்கையைக் கொணர்ந்த பகீரதன் எப்படிக் குதூகலமடைந்திருப்பான் என்பதை உணர முடிந்தது. அன்று மாலை விழாப் பந்தலில்—அந்த மலை சூழ்ந்த பிரதேசத்தில் பத்தாயிரம் பேருக்குமேல் கூடி யிருந்தது, இவ்வணையை பெரிய வரப்பிரசாதமாக மக்கள் கருதுகின்றனர் என்பதை வெகு தெளிவாக எடுத்துக் காட்டியது.

விழாவின் போது சென்னை ராஜ்யத்தின் ராமத்து இலாக்காவின் பிரதம இன்ஜினீயர் நிகழ்த்திய அறிமுகவுரை பல ருசிகரமான தகவல்களைக் கொடுப்பதாக இருந்தது. ஆனால் அவர் அடிக்கடி 'பொன்னியாறு' என்றே குறிப்பிட்டு வந்தார். 'பொன்னி' என்பது காவேரி யாற்றின் மற்றொரு பெயராயிற்றே. ஒரு வேளை இது காவேரிதானோ என்று சந்தேகப்பட்டு ஸ்ரீ ஸி. ஆர். நரசிம்மன் அவர்களை, இது பற்றிக் கேட்டேன். அதற்கு அவர் "வடக்கேயுள்ள பெண்ணை யாற்றை ஆங்கிலேயர்கள் 'பெண்ணாறு' என்று குறிப்பிட்டுச் சர்க்கார் தஸ்தாவேஜிகளில் எழுதினார்கள். பிறகு தெற்கேயுள்ள இந்தப் பெண்ணையை அதினின்று வித்தியாசப்படுத்த 'பொன்னியாறு' என்று சற்று மாற்றிக் குறிப்பிடலானார்கள். தஞ்சாவூர் ஜில்லாவிலுள்ள குற்றாலத்திலிருந்து வேறு படுத்திச் சொல்ல, திருநெல்வேலி ஜில்லாக் குற்றாலத்தை 'கோர்ட்டாலம்' என்று குறிப்பிட்டார்கள் அல்லவா! அதைப் போலத்தான் இதுவும்!" என்று எனக்கு விளக்கினார்.

முதல் ஐந்தாண்டு திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரிக்கு அருகில் கட்டப்படும் இந்த நீர்த் தேக்கத்தினால் 7500 ஏக்கரா நிலம் நீர்ப்பாசனம் பெறும். ஏற்கெனவே 2460 ஏக்கரா சாகுபடியிலிருக்கிறது. இது தவிர 5040 ஏக்கரா அதிகப்படி நிலம், இந்தத் தேக்கம் பூர்த்தியானால் சாகுபடிக்கு வரும் என்று கூறினார். இதன் பயனாக அந்தப் பகுதியில் உணவுப் பற்றாக்குறைப் பிரச்னை தீர்ந்து போகும். இந்தத் தேக்கம் முடிய ஒரு கோடியே எண்பத்துநாலு லட்ச ரூபாய் ஆகும் என்று மதிப்பிடப் பட்டிருக்கிறது. இது கட்டி முடிய மூன்றரை வருஷம் ஆகும் என்றும் சொன்னார் இன்ஜினீயர் அவர்கள். அதாவது மூன்றரை வருஷ காலத்துக்கு அப் பக்கத்து ஏழைத் தொழிலாளிகளுக்குப் பாரத சர்க்கார் இந்த அரும்பணி மூலம் தொழில் நல்கி யிருக்கிறார்கள்.

அன்று விழாவுக்குப் பிறகு நடந்த பொதுக் கூட்டத்தில் ஸ்ரீ ஸி. ஆர். நரஸிம்மன், "முன்னாட்களில் பேர் அரசர்கள் பெரும் கோயில்கள் எழுப்பித்து மக்களுக்குச் சேவை புரிந்தார்கள். இன்றைய பாரத சர்க்கார் இம் மாபெரும் பணிகள் புரிந்து வருவதும் அதற்கு ஒப்பாகவே மக்கள் கருத வேண்டும்" என்றார்.

இந்த நீர்த் தேக்கத்தின் காரணமாக நான்கு கிராமங்கள் பாதிக்கப்படும் என்று எண்ணுகிறார்கள். நஷ்டப்பட்ட கிராமவாசிகளுக்குத் தக்க பரிகாரமும், நிலமும் வழங்கப்படும் என்று முதன் மந்திரி வாக்களித்தார். பாதிக்கப்பட்ட கிராம வாசிகள் முதன் மந்திரி மொழிகளைக் கேட்டுப்



1. ஒசூர் கால்நடை ஆராய்ச்சிப் பண்ணைக்குச் சென்னை ராஜ்ய முதன் மந்திரி விஜயம் செய்து இயந்திரங்களைப் பார்வையிடுகிறார். 2. கிருஷ்ணகிரி நீர்த்தேக்க ஆரம்ப விழாவில் சென்னை மராமத்து இலாகா மந்திரி பேசுகிறார். 3. ஒசூர் கால்நடைப் பண்ணை.

பரவசமடைந்தனர். அதற்கேற்ப விண் அதிரும்படி மகிழ்ச்சிக் குதூகல வேட்டுகள் விடப்பட்டன!

• • •

இந்த விழா நடந்த அன்று காலை கிருஷ்ணகிரியிலிருந்து முப்பது மைல் தூரத்திலுள்ள ஒசூர் கிராமத்துக்குச் சென்றோம். மேடும் பள்ளமுமான அந்தப் பாதையில், மலைகள் சூழ்ந்த அப்பிரதேசத்தில் செய்த பிரயாணம் மிக ரம்மியமாக இருந்தது. ஒசூர் பஞ்சாயத்துப் போர்டார் முதன் மந்திரி ஸ்ரீ காமராஜுக்கு நல்வரவு கூறி வரவேற்று வாழ்த்துப் பத்திரம் வாசித்தனர்.

ஒசூரில்தான் நமது சென்னை ராஜ்யத்தின் பெரிய கால்நடை ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது. சுமார் ஆயிரத்து அறுநூறு ஏக்கருக்கு மேல் விஸ்தீரணமுள்ள இடத்தில் நல்ல உயர் ரக மாடுகள், ஆடுகள், கோழிகள் இவற்றை வளர்ப்பது எப்படி என்று ஆராய்ச்சி நடத்தி வருகிறார்கள்.

கால்நடை இலாக்கா அதிகாரி டாக்டர் பி. பட்டாபிராமன் முதன் மந்திரியையும் மற்றவர்களையும் வரவேற்றுப் பண்ணையைச் சுற்றி அழைத்துப் போய் அங்கே நிகழும் பலப்பல வேலைகளைக் காண்பித்தார். அங்கே தற்சமயம் ஆயிரத்துக்கு மேற்பட்ட மாடுகள் இருக்கின்றன.

இந்த ஆராய்ச்சிப் பண்ணையில் உள்ள சிறந்த பொலி காளைகள் நன்கு பயன் தருகின்றன.

செயற்கை முறையில் சினைப்படுத்தும் முறையும் கையாளுவதால் அந்தப் பக்கத்துக் கிராமங்களில் நல்ல ரக மாடுகளைப் பேணிவர வசதிசெய்து கொடுத்துவருகிறார்கள். மேலும் அந்த ஆராய்ச்சிப் பண்ணையில் இருபத்தைந்து ஆண்டு இடைவிடா உழைப்பின் பயனாக நல்ல உயர்ந்த ரக மாடுகளைப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள். ஒரே மாதிரியான நிறம், சாயல், நிறை, மற்ற எல்லாக் குணங்களும் கொண்ட ஒரு நல்ல வம்சத்தைச் சிருஷ்டித்து வைத்திருக்கிறார்கள். அந்த மாடுகளில் முக்கியமான வகை மூன்று—சிந்தி, காங்கேயம், கீர். சுமார் முப்பது கீர் மாடுகள் தற்சமயம் ஒசூர் பண்ணையில் இன்று இருக்கின்றன. இவை நமது பழைய கவர்னர் ஸ்ரீ பவநகர் ராஜா அவர்களிடமிருந்து வாங்கப் பட்டவையாகும்.

இவற்றைக் கொண்டு நம் ராஜ்யத்தில் இன்னும் மற்ற ஜில்லாக்களிலும், நோயினாலும் கொடியினாலும், சரியான தீவனமின்மையாலும் அழிந்து வரும் கால்நடையைப் புத்துயிர் ஊட்டி வளர்த்துக் கொள்ளலாம்.

இந்தப் பண்ணையில் கோழி வளர்ப்பும் ஆடு வளர்ப்பும் நடந்து வருகிறது.

அதில் ஆட்டுப் பண்ணையில், பிக்கானிர்—பெல்லாரி வகை ஆடுகள் அடர்த்தியாக ரோமம் வளர்ந்து செழிப்பாகக் காணப்பட்டன. தொட்டுப் பார்த்தால் பட்டுத் தோற்றது. அவ்வளவு மிருதுவாகவும் சுகமாகவும் இருந்தது. இந்த ரோமத்தைக் கொண்டுதான் பட்டுப் போன்ற உயர் ரக சால்வைகள் செய்கிறார்கள் என்று அறிந்தேன்!

'பட்டு' என்றதும் ஞாபகம் வருகிறது. அங்கேயே கால்நடைப் பண்ணையிலிருந்து கொஞ்ச தூரத்திலேயே பட்டுப் பூச்சி வளர்க்கும் ஆராய்ச்சிப் பண்ணை இருக்கிறது.

அங்கே பட்டுப்பூச்சி எப்படியெல்லாம் வளர்க்க வேண்டும், அந்தப் பூச்சிகளின் முக்கிய ஆகாரமான முசுக்கொட்டை மரம் (மல்பெர்ரி மரம்) எப்படி வளர்க்க வேண்டும், அதற்கு எப்படிப் பதியன் போட வேண்டும், பிறகு பூச்சிகள் எப்படி வளர்கின்றன, நல்ல உயர் ரக பட்டு நூல் எப்படி எடுக்கலாம்—முதலியவை யெல்லாம் பற்றி அங்கிருந்த அதிகாரி வெகு ரஸமாகச் சொன்னார்.

இப்படி அன்று முழுதும் அன்பும் தேசபக்தியும் கொண்ட கிருஷ்ணகிரி—ஒசூர் மக்களிடையே கழித்து மிக்க இன்ப நினைவுகளுடன் ஜோலார்ப்பேட்டைக்கு வந்து ரயில் ஏறினோம்!



அத்தியாயம் 38

தங்கபாண்டியன் வந்தார்!

மறுநாள் முழுதும் ரங்கதுரையின் கடிதத்தைப் படித்துப் படித்துப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அதற்கு அடுத்த நாள் வந்தது. ரங்கதுரை இன்று பம்பாய்க்கு ரயிலேறி விடுவார் என்று எண்ணிக் கொண்டே இருந்தேன். அதற்கு அடுத்த நாள் இன்று ரங்கதுரை ரயிலில் பிரயாணம் செய்து கொண்டிருப்பார் என்று எண்ணினேன். இப்படி அவர் நினைவாகவே இருந்த போது, திடீரென்று தங்க பாண்டியன் வீட்டிற்குள் வருவதைக் கண்டேன். அவரைக் கண்டதும் எனக்கு ஒரே கலவரமாகப் போய் விட்டது.

'தங்க பாண்டியன் திடீரென்று இங்கு எதற்காக வருகிறார்? ஏதேனும் கேட்பாரோ? பிள்ளையார் உன்னுடையதா என்று கேட்டு விடுவாரோ?' இவ்வாறெல்லாம் என் மனத்தில் பல குழப்பமான எண்ணங்கள் எழவே, 'வாருங்கள்' என்றுகூடச் சொல்ல முடியாமல் ஸ்தம்பித்து நின்றேன்.

நல்லவேளையாக என் தந்தை வீட்டில் இருந்தார். அவர் வந்து தங்க பாண்டியனை வரவேற்று ஊஞ்சல் பலகையில் உட்காரச் சொன்னார்.

"நானே நேரில் வந்து துக்கம் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் இந்துமதிக்கு உடம்பு சரியில்லாமல் போய் விட்டதனால் வருவதற்கு நேரமே இல்லாமல் போய் விட்டது" என்றார் என் தந்தை.

"அதனால் என்ன? பரவாயில்லை. நான் இரண்டு நாட்களுக்கு முன்னால் சென்னைக்குப் போனேன். இன்றுதான் இங்கு வந்து சேர்ந்தேன். ரங்கதுரையை வழியனுப்பப் பம்பாய் வரையிலாவது போய் விட்டு வரவேண்டுமென்று எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் இங்கு ஏற்பட்ட அசௌகரியங்களால் சென்னை வரையில்தான் போக முடிந்தது. அதைச் சொல்லி விட்டுப் போவதற்காகவே இங்கு வந்தேன்" என்றார் தங்க பாண்டியன்.

அதற்குப் பிறகுதான் எனக்குத் தாராளமாக மூச்சு விட முடிந்தது. இருந்தாலும் பேசுவதற்குத் தயக்கமாகவே இருந்தது. ரங்கதுரையைப் பற்றி அவரிடம் எப்படி விசாரிப்பது என்று தெரியாமல் விழித்தேன்.

என் தந்தை, "ரங்கதுரை ஏதேனும் சொன்னாரா? சௌக்கியமாக ரயிலேறினாரா?" என்று விசாரித்தார்.

"ரங்க துரை உங்களை ரொம்ப விசாரித்ததாகச் சொல்லச் சொன்னார். சௌக்கியமாக இருக்கிறார். அவரோடு இன்னும் ஐந்தாறு மாணவர்கள் போகி

னார்கள். ஒருவர்தான் ரங்கதுரையுடனேயே சென்னையில் ரயிலேறினார். மற்றவர்கள் பம்பாயில் வந்து சேர்ந்து கொள்வார்கள். ரங்க துரைக்குத் துணையில்லையே என்று கவலைப்பட வேண்டிய அவசிய மில்லை" என்றார்.

பிறகு என்னைப் பார்த்து முதல் தடவையாகப் பேசினார். "என்ன இந்துமதி! இப்படி இளைத்து விட்டாயே!" என்றார் அவர்.


என் தந்தை என்னிடம் ஜாடையாகக் காப்பி போட்டுக் கொண்டு வரச் சொன்னார். எனக்கு இத்தனை நேரம் தோன்றாமலிருந்ததற்காக வெட்கப் பட்டுக் கொண்டே போய்க் காப்பி போட்டுக் கொண்டு வந்து கொடுத்தேன்.

தங்கபாண்டியன் அதைச் சாப்பிட்டுக் கொண்டே, "ரங்கதுரை எல்லா விதத்திலும் கொடுத்து வைத்தவன்தான். இவ்வளவு நன்றாகக் காப்பி போடும் மனைவியை அடையத் தவம்தான் செய்ய வேண்டும்" என்றார்.

என் தந்தை சிரித்தார். எனக்கு ஒரே வெட்கமாகப் போய் விட்டது.

"ரங்கதுரை இந்துவுக்குக் கடிதம் எழுதி யிருக்கிறார். குறைந்தது இருபது பக்கம் இருக்கும் போல இருக்கிறது."

"உங்களுக்குத் தெரியாதா, மாமா? ரங்கதுரை நல்ல எழுத்தாளன். கல்லூரியில் நடந்த கட்டுரைப் போட்டிகளில் பரிசுகள் வாங்கி யிருக்கிறான். அடிக்கடி பத்திரிகைகளுக்கு எழுதுவான். இந்துமதிக்கு இருபது பக்கம் எழுதி யிருக்கிறான் என்றால் அதிசயமே இல்லை. எனக்கே எழுதுவானே. இன்னும் பாருங்கள். அவனுடைய கடிதங்கள் இனிமேல்தான் ரொம்பப் பிரமாதமாக இருக்கும். சிமையிலிருந்து எழுத ஆரம்பித்து விட்டானானால் நாமும் அவனுடனேயே இருப்பதுபோல் தோன்றும். அவ்வளவு அழகாகத் தான் கண்டவைகளை யெல்லாம் சித்திரித்து விடுவான்."



தங்கபாண்டியனுக்கு ரங்கதுரையிடம் இருந்த மதிப்பு எனக்கு ரொம்ப ஆச்சரியத்தை அளித்தது. இத்தனை பணக்காரர் ஒன்றும் இல்லாத மனிதரிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்! அப்படிப்பட்டவர் என்னுடையவராக இருக்கிறாரே. இதைவிட எனக்கு என்ன பெருமை வேண்டும்? ரங்கதுரையின் கடிதத்தில் "உன் ரங்கதுரை" என்று எழுதி யிருந்ததுதான் என்னை மிகவும் கவர்ந்தது.

பேச்சு மறுபடியும் சொக்கையாவின் மரணத்தைப் பற்றித் திரும்பியது. எனக்குத் திக் திக் கென்று அடித்துக் கொண்டாலும் என்ன பேசுகிறார்கள் என்று தெரிந்து கொள்ள வேண்டு மென்ற ஆவலால் அங்கேயே நின்றேன்.

"டாக்டர் ராவ் கூறினார், இரவு ஒன்பது மணிக்கு முன்பாகவே அது நடந்திருக்க வேண்டும் என்று. உங்களுக்குக் காலை வரை தெரியாதாமே!"

"ஆமாம்! நான் ரங்க துரையுடன் ஒரு முக்கியமான காரியத்துக்காக வக்கீல் வீட்டுக்குப் போனேன். போகும் போதெல்லாம் ரங்கதுரை என்னைக் கரித்துக் கொட்டி விட்டான். 'உன்னால்தான் எனக்குப் பண்ணையாரிடம் சொல்லிக் கொண்டு வர முடிய வில்லை' என்று வைதான். நானும், 'வேலை முடிந்ததும் திரும்பி ஊருக்குப் போய்ப் பண்ணையாரைப் பார்த்து விட்டு ரயிலுக்கு வர நேரமிருக்கும். கவலைப் படாதே!' என்று சொல்லி யிருந்தேன். ஆனால் எதிர்பாராத விதமாக நாங்கள் போயிருந்த வக்கீல் வீட்டில் நேரமாகி விட்டது. பிறகு ரங்கதுரையை ரயிலேற்றி விட்டுத்தான் நான் திரும்பினேன். வந்த உடனே என் அறைக்குப் போய்ப் படுத்துத் தூங்கி விட்டேன். பிறகு காலையில்தான் தெரியும். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. என்ன செய்வதென்றே தெரிய வில்லை."

"நாம் என்ன செய்வது? சிலசமயம் இப்படியெல்லாம் எதிர்பாராத விபரீதங்கள் நடந்து விடுகின்றன. பிறகு என்ன செய்தீர்கள்?"

"எனக்கு ஒன்றுமே தோன்ற வில்லை. ஒருவாறு சமாளித்துக் கொண்டு டாக்டருக்குச் சொல்லி யனுப்பினேன். டாக்டர்தான் போலீசுக்குச் சொல்லி யனுப்பச் சொன்னார். அவர் சொன்ன பிறகுதான் எனக்கு மூளையில் உறைத்தது. பிறகு போலீஸார் வந்தார்கள். பரிசோதனை செய்தார்கள். ஒரு பிள்ளையார் கிடைத்து


விட்டது. அதை வைத்துக் கொண்டு கூத்தடிக்கிறார்கள். எனக்கென்னமோ ஒன்றுமே பிடிக்க வில்லை, போங்கள். டாக்டர் ராவ் அவர்கள் சொன்னது போல், ஒரு பாவமும் அறியாத யாரையேனும் பிடித்துத் துன்புறுத்தப் போகிறார்களே என்று வருத்தமாக இருக்கிறது. இதை யெல்லாம் ரங்கதுரையிடம் சொன்ன போது ரொம்ப வருத்தப்பட்டான். 'நீ ஜாக்கிரதையாக இரு, அப்பனே! உன்னையே குற்றவாளி என்று சொன்னாலும் சொல்லி விடுவார்கள்' என்றான். அவன் சொன்னது ரொம்ப உண்மை. இந்த முட்டாள்கள் என்னை என்னவெல்லாம் கேட்கிறார்கள், தெரியுமா? நல்லவேளையாக நான் அந்த சமயத்தில் திருநந்திபுரத்தில் இருந்தேன் என்பதற்கு வக்கீல் சாட்சி இருக்கிறார். இல்லாவிட்டால் என் பாடும் திண்டாட்டம் தான். நல்ல போலீஸ்காரர்கள்!"



" என்ன அநியாயம்? இப்படிக்கூட உண்டா?" என்றார் என் தந்தை.

" ஆமாம்! என்ன செய்வது? இப்படி ஒன்று நடந்திருக்க வேண்டாம். சரி நான் வருகிறேன்" என்று விடை பெற்றுக் கொண்டார் தங்கபாண்டியன்.

தங்கபாண்டியன் இருந்த போது நல்ல வேளையாக அய்யாக் குட்டி வீட்டில் இல்லை. சொக்கையாவைப் பற்றிப் பேசிய போதெல்லாம் அவர் இல்லாமலிருந்ததே நல்லதாயிற்று.



தங்கபாண்டியன் சென்று சிறிது நேரத்துக்கெல்லாம் அய்யாக்குட்டி நிறைய புஷ்பமும் பழமும் வாங்கி எடுத்துக் கொண்டே உள்ளே வந்தார்.

"இந்து, உனக்காக நான் நல்ல வாசனைக் கதம்பம் வாங்கிக் கொண்டு வந்

திருக்கிறேன். நீ சந்தோஷமாக முன்னைப் போல இருக்க வேண்டுமென்று எனக்கு ஆசை. ஏன் எப்போதும் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார்.



எனக்கு ஒரு பக்கம் எரிச்சலாக இருந்தது. ஆனால் அய்யாக் குட்டி, நான் அன்றைய சம்பவத்துக்குப் பிறகு இப்படி இருக்கிறேனென்று தெரிந்து, என்னை உற்சாகப்படுத்த நினைக்கிறார் என்று தெரிந்து ஒரு பக்கம் ஆறுதலாகவும் இருந்தது. அவர் அந்த புஷ்பச் சரத்திலிருந்து கொஞ்சம் எடுத்து என் அன்னையின் படத்துக்கு அணிவித்ததும் எரிச்சல் எங்கேயோ போய் விட்டது. போட்டோ ஆல்பத்திலிருந்த படம் ஒன்றை எடுத்து என் தந்தை கண்ணாடி போட்டு மாட்டியிருந்தார். அதில் நானும் என் அன்னையும் மாத்திரம் இருக்கிறோம். என் அன்னை சந்திரமணி அதில் சிரித்துக் கொண்டு குதூகலமாக இருக்கிறாள். எனக்கு அந்தப் படத்தைப் பார்த்த போது மனம் ரொம்ப வேதனைப் பட்டது. என் அன்னை இருந்திருந்தால் இந்த விபரீதமெல்லாம் நடந்திருக்குமா? என்னை வெளியே தனியாக அனுப்பியிருப்பாளா? ரங்கதுரையுடன் நான் சந்தோஷமாக இருப்பதைப் பார்த்து விட்டாவது அவள் போயிருக்கக்கூடாதா? என்றெல்லாம் நினைத்தேன்.

அய்யாக்குட்டி என் மனத்தில் ஓடிய எண்ணங்களை அறிந்து கொண்டவர் போல், "இந்துமதி! உன் தாயாரின் உடல் இங்கு இல்லையே தவிர, அவர் ஆத்மா இங்குதான் இருக்கும். உன்னை விட்டுப் போக அவருக்கு மனம் வந்திருக்காது. உன் சந்தோஷத்தைப் பார்த்து விட்டுத்தான் அவர் அமரருலகத்துக்கே செல்வார்" என்றார்.

அய்யாக்குட்டிக்கு இப்படி வாசாலகமாய்ப் பேசத் தெரிந்ததைக் குறித்து நான் அதிசயித்த போதிலும், என் மனத்துக்கு அவருடைய வார்த்தைகள் இதமாக இருந்தன.

"ரங்கதுரையையும் நீ தெய்வமாக இருந்து கவனித்துக் கொள், அம்மா!" என்று மனத்திற்குள் வேண்டிக் கொண்டேன்.

அத்தியாயம் 39

பண்ணையாரின் கவலை

என் தந்தை ஒரு நாள் கவலை தோய்ந்த முகத்துடன் வீட்டுக்கு வந்தார். நானும் நிலத்தை விற்கும் விஷயம் பற்றி அவரிடம் கேட்க வேண்டுமென்று சமயம் பார்த்துக் கொண்டிருந்தேன். சூடாகக் காப்பியைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு மெள்ளப் பேச்சை ஆரம்பித்தேன்.

"ஏன் அப்பா கவலையாக இருக்கிறீர்கள்?"

"ஒன்றுமில்லை, அம்மா!"

"ஒன்றுமில்லாததற்கு எங்கேனும் கவலைப் படுவார்களா? உங்கள் முகத்தில்தான் 'கவலை' என்று எழுதி ஒட்டியிருக்கிறதே!"

"நீ எதற்காக இதிலெல்லாம் தலையிட்டுக் கொள்கிறாய்? குழந்தையாய் லட்சணமாய் இரேன். தெரிந்து உனக்கு என்ன ஆகப் போகிறது? நீயும் வேண்டுமானால் சேர்ந்து கவலைப் படலாம். அதனால் என்ன பயன்?"

"அப்படிச் சொல்லாதீர்கள், அப்பா! உங்களுக்குத்தான் என்னைத் தவிர யார் இருக்கிறார்கள்? நான் இன்னும் பச்சைக் குழந்தை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களா? எதுவாக இருந்தாலும் என்னிடம் சொல்லி விடுவதே நல்லது. எப்படி இருந்தாலும் ஒரு நாள் தெரியத்தானே வேண்டும்?" என்றேன்.

"சொல்லுவதற்குப் பிரமாதமாக ஒன்றும் இல்லை, இந்து. கோர்ட் விவகாரங்களில் ஏகப்பட்ட பணம் செலவாயிற்று அல்லவா? அதற்கெல்லாம் வாங்கிய கடனை அடைக்க வேண்டும். திருநந்திபுரம் சின்னக் கருப்பன் செட்டியாரிடம், அருவிக்கரை பங்களா, இந்த பங்களா இரண்டையும் அடமானம் வைத்துக் கடன் வாங்கியிருந்தேன். அவர் பணத்தைக் கேட்கிறார். இல்லாவிட்டால் வீட்டை ஏலம் போடுகிறேன் என்று பயமுறுத்துகிறார். சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வரும்? என்னிடம்


பணம் ஏது? அதற்காக அந்த இரண்டு வேலி நஞ்சையையும் சொக்கையாவிடம் விற்க ஏற்பாடு செய்திருந்தேன். அதற்குள் அவர் செத்துப் போய் விட்டார். இன்று சின்னக் கருப்பன் செட்டியார் இந்த ஊருக்கு வந்திருக்கிறாராம். நம் வீட்டுக்கு வந்து பணம் கேட்டால் என்ன செய்வதென்று கவலையாக இருக்கிறது. இவர் வீட்டை ஏலம் போட்டால் என் மானம் போய் விடும். அதற்கு முன்னால் நானே எப்படியாவது விற்றுவிட வேண்டும், அல்லது நம்முடைய நஞ்சை நிலம் இரண்டு வேலியையும் விற்க வேண்டும்" என்று கவலையுடன் கூறினார் என் அருமைத் தந்தை.

அப்பா இவ்வளவு கவலையோடு இருந்த போது என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற துயரம் என் மனத்தைச் சூழ்ந்தது. கூடவே 'ரங்கதுரை இங்கிருந்தால் இதற்கு ஒரு யோசனை கூறுவார் அல்லவா? நானும் அவரைப் போல் பிள்ளையாய்ப் பிறந்திருக்கக் கூடாதா? எதற்காக இந்த மாதிரி என்றும் இன்னொருவருக்குப் பாரமாக இருக்கும் பெண் ஜன்மம் எடுத்தோம்?' என்று எண்ணி வருந்தினேன்.

ஆனால் சமாளித்துக் கொண்டு, "ஒன்றும் கவலைப் படாதீர்கள், அப்பா! இந்தத் தடவை எப்படியாவது சின்னக் கருப்பன் செட்டியாரை அனுப்பி விடுங்கள். ஏதேனும் வழி செய்யலாம்" என்றேன்.

இந்த ஆறு வருஷ காலத்துக்குள் மந்திர மூர்த்திப் பண்ணையாருக்கு நஷ்டத்துக்கு மேல் நஷ்டமாக ஏற்பட்டு வந்தது. சொக்கையா இழுத்த வலுச் சண்டைகளினால் கோர்ட் விவகாரங்கள் மிக அதிகமாகியிருந்தன. அதிலும் அநேகமாக, சொக்கையா பக்கமே தீர்ப்பு ஆகும். அதனால்தான் அவருக்கு உலக விவகாரங்களில் மிக வெறுப்பு ஏற்பட்டிருந்தது. நான் ஒருத்திதான் அவருடைய பந்தத்திற்குக் காரணமாக இருந்தேன்.

மூன்று வருஷங்களுக்கு முன்னால் அடித்த பெரிய புயலில் ஊருக்கு நடுவே இருந்த பங்களா விழுந்து விட்டது. அதைச் செப்பனிடவே முடியாது என்று கூறி விட்டார்கள்.



அருவிக்கரை பங்களாவும் வெகு நாட்களாகப் பழுது பார்க்கப் படாமல் மிகமோசமான நிலையில் இருந்தது. நல்ல விலைக்குக் கூடப் போகாது. கோர்ட்டு விவகாரங்கள் நடந்த போது கொஞ்சம் கொஞ்சமாக நஞ்சை புஞ்சை நிலங்களின் பெரும் பகுதி சொக்கையாவுக்குச் சொந்தமாகி விட்டிருந்தது. இனிமேல் அதைப் பற்றி நினைக்கவே இடமில்லை. மீதியிருந்தது அந்த இரண்டு வேலி நிலம்தான். அதையும் விற்று விட்டால் வருமானத்துக்கே ஒன்றும் வழியில்லாமல் போய் விடும். அதையெல்லாம் எண்ணினால் யாருக்குத்தான் கவலையில்லாமல் இருக்கும்?

அப்பா நினைத்தது போலவே பிற்பகலில் சின்னக் கருப்பன் செட்டியார் வந்தார். நான் அவசர அவசரமாகச் சிற்றுண்டிகளும், காப்பியும் கொண்டு போய்க் கொடுத்தேன். பிறகு அவர்கள் பேசுவதைக் கவனித்தேன்.

"என்ன, பண்ணையார்வாள்! எனக்கு இப்போது ரொம்ப சிரமமான சமயம். என் குழந்தைக்குக் கலியாணம் வருகிறது. செலவுக்குப் பணம் அத்தியாவசியமாக இருக்கிறது. ரொக்கம் இருபதினாயிரத்தையும் உடனே கொடுத்து விட்டால் சௌகரியமாக இருக்கும். இல்லாவிட்டால் இரண்டு தவணையாகக் கொடுத்து விடுங்கள்" என்று கண்டிப்பான குரலில் கூறினார் செட்டியார்.

"ஆகட்டும், செட்டியார்வாள்! நஞ்சை நிலத்தையாவது, வீட்டையாவது விற்று உங்களுக்கு ஒரே மாதத்தில் பணத்தைக் கொடுத்து விடுகிறேன். நீங்கள் சிறிதும் கவலைப்பட வேண்டாம்" என்றார் என் அருமைத் தந்தை.

"மூன்று தவணைகளாக இருபதினாயிரம் வாங்கியிருக்கிறீர்கள். அதற்குக் கணக்குப் பிரகாரம் வட்டி முதலியன எவ்வளவு ஆயிற்று என்பதற்கும் இதோ கணக்கு இருக்கிறது. சரியாக இருக்கிறதா என்று பார்த்து விடுங்கள்."

"ஓ, சரியாக இருக்கிறது. இன்னும் ஒரே மாதத்தில் நானே அனுப்பி விடுகிறேன்" என்று சொல்லிச் செட்டியாருக்கு விடை கொடுத்தனுப்பினார் என் தந்தை.

செட்டியார் சென்ற பிறகு என் தந்தையின் முகத்தைப் பார்த்த போது என் நெஞ்சு விண்டு போயிற்று. அத்தனை கவலை அவர் முகத்தில் தேங்கியிருந்தது.

"ஏன் அப்பா! தங்கபாண்டியனிடம் உதவி கேட்டால் என்ன? அவர்தான் ரொம்ப நல்லமாதிரியாக இருக்கிறாரே."

அவருக்கு ரொம்பக் கோபம் வந்து விட்டது. "எதையாவது பிதற்றாதே, இந்துமதி. தங்கபாண்டியன் சிறு பையன். இப்போதுதான் அவன் ஜமீனைப் பற்றித் தெரிந்து கொள்ள ஆரம்பித்திருக்கிறான். அதில் எத்தனையோ தகராறுகள் இருக்கின்றன. பார்க்கப் போனால் நான் அவனுக்கு உதவி செய்வதாகச் சொல்ல வேண்டும். அதை விட்டு விட்டு, அவனிடம் போய் என்னைக் கடன் கேட்டுக் கொண்டு நிற்கச் சொல்கிறாயா? மானக் கேடுதான். ரங்கதுரைதான் என்ன நினைப்பார்? ஏதாவது பைத்தியக்கார யோசனை சொல்லாதே" என்றார்.

ரங்கதுரையிடமிருந்து கடிதம் வந்து பதினைந்து நாட்கள் ஆகிவிட்டிருந்தன. மறுபடியும் கடிதம் வராதது எனக்கு ஏமாற்றமாக இருந்தது. 'பம்பாயிலிருந்து எழுத நேரம் கிடைக்கவில்லையோ என்னவோ? கப்பலில் போகும்போது எழுதி எங்கேனும் துறைமுகத்தில் போஸ்ட் செய்து விடுவார்' என்று நினைத்தேன். நாம் எப்படி நினைத்தாலும் நடப்பது தானே நடக்கும்? எந்த விலாசத்துக்கு எழுதுவது என்று தெரியாதபடியால், நானும் எழுத முடியவில்லை. செய்வது அறியாது திகைத்துக் கொண்டிருந்தேன். தங்க பாண்டியன் வரமாட்டாரா? வந்தால் அவரையாவது விசாரிக்கலாமே என்று மனம் ஏங்கும். ஆனால் அவரும் வரவில்லை.



ஒருவாறு என் தந்தை அந்த மாதக் கடைசிக்குள்ளாக ஒரு வேலி நிலத்தையும் அருவிக்கரை பங்களாவையும் விற்றுவிட்டார். ஆனாலும் பதினையாயிரம் ரூபாய்தான் தேறிற்று. ரொக்கம் இருபதினாயிரமும், வட்டி மூவாயிரமும் சேர்த்து மொத்தம் இருபத்தி மூவாயிரம் வேண்டியிருந்தது. பாவம்! அவர் என்ன செய்வார்? பணத்தை அப்படியே சின்னக் கருப்பன் செட்டியாருக்குக் கொண்டு போய்க் கொடுத்து விட்டார். மீதியை இன்னும் ஒரு மாதத்தில் அடைத்து விடுவதாகக் கூறிவிட்டு வந்தார்.

அய்யாக்குட்டி நடுவில் ரொம்ப சகஜமாக இருந்தார் அல்லவா? வரவர மறுபடியும் கொஞ்சம் விறைத்துக் கொள்ள ஆரம்பித்தார். தினமும் புஷ்பம் பழம் முதலியன எனக்கு வாங்கிக் கொடுத்துக் கொண்டிருந்தார். பிறகு எல்லாம் நின்றுவிட்டது. நிமிஷத்துக்கு நிமிஷம் மாறுதலடையும் அய்யாக்குட்டியின் விசித்திரமான பச்சோந்தி சுபாவத்தை எண்ணி நான் வியக்காத நாளில்லை.

நாட்கள் பறந்தன. ரங்கதுரையிடமிருந்து தகவலே இல்லை. தங்கபாண்டியன் கூறியது போல் இருபது பக்கம் எழுதா விட்டாலும் இரண்டு வரிகளாவது எழுதக் கூடாதா என்றெல்லாம் ஏங்கித் தவித்தேன். விவரிக்க ஒண்ணாத பயமெல்லாம் மனத்தில் வந்து துன்புறுத்தின. அவர் சென்று கொண்டிருந்த கப்பல் ஒருவேளை மூழ்கி விட்டிருக்குமோ? அல்லது அவருக்கு ஏதேனும் உடம்பு சரியில்லாமல் இருக்குமோ? என்றெல்லாம் எண்ணி வருந்தினேன்.

பிறகு நானாகவே என்னைத் தேற்றிக் கொண்டேன். 'ஒருகாலும் அந்த மாதிரி விபரீதங்கள் நிகழ்ந்திராது. அப்படி ஏதேனும் நடந்தால் தங்க பாண்டியனுக்குத் தெரியாமலிருக்குமா? அவர் கூறாமல் இருப்பாரா?' என்று எண்ணிக் கொண்டேன்.

ஒருநாள் தங்க பாண்டியன் ஏதோ ரண சிகிச்சைக்காகச் சென்னையில் ஆஸ்பத்திரிக்குப் போயிருக்கிறார் என்று கேள்விப் பட்டதும் திடுக்கிட்டேன். இதைக் கூறியதும் அய்யாக்குட்டிதான். அய்யாக்குட்டியை ஒரு செய்தி ஸ்தாபனம் என்று கூறலாம். எங்கிருந்து தான் அவர் சமாசாரம் சேகரிப்பாரோ தெரியாது. தினந்தோறும் புதிது புதிதாக ஏதேனும் செய்தி கூறுவார். பாதிக்கு மேல் சரடாக இருக்கும் என்று நான் நினைப்பதுண்டு.

ஆனால் இந்த விவரம் நம்ப வேண்டியதாகத்தான் இருந்தது. இரண்டு மாதங்களுக்கு முன் ஒருநாள் வந்திருந்தபோதே தங்க பாண்டியன் மெலிந்து இருந்தார். அவர் மறுபடியும் வராமலிருந்ததற்கு உடல் நலக் குறைவுதான் காரணமாக இருந்திருக்க வேண்டும்.

அய்யாக் குட்டியிடம், "ரண சிகிச்சை பெறும் படியாக அவருக்கு என்ன உடம்பு?" என்று விசாரித்தேன்.

"என்னமோ 'அப்பெண்டிஸைடிஸ்' என்று கூறினார்கள். பாவம்! ஆனால் தங்கபாண்டியனுக்கு மனோ வியாதிதான் அதிகம்" என்றார் அய்யாக்குட்டி.

"அப்படி என்ன கஷ்டம் அவருக்கு?"

"எத்தனையோ கஷ்டம். சொக்கையா செய்த அக்கிரமங்களினால் ஜமீன் ஒரே கடனில் மூழ்கி விட்டிருக்கிறது. தங்கை லக்ஷ்மிக்குக் கல்யாணம் செய்ய வேண்டும். மாமனை இவனே கொன்று விட்டதாக ஒரு வதந்தி இருப்பதால் யாரும் துணிந்து லக்ஷ்மியைக் கலியாணம் செய்து கொள்ள மாட்டார்கள். தங்கபாண்டியன் தன் தாயாரையும், தங்கையையும் அழைத்துக் கொண்டு சென்னைக்கே போய் விட்டானாம். தங்கையைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்திருப்பதாகக் கூடக் கேள்வி."

"உங்களுக்கு எப்படி இதெல்லாம் தெரிந்தது?"

"தங்கபாண்டியன் சென்னை போகும்போது இங்கே இருக்கிற காரியங்களைக் கவனித்துக்கொள்ள ஒரு புது காரியஸ்தரை நியமித் திருக்கிறார். அவருக்கு ஒரு நாள் சினிமா பார்க்க ஓசி டிக்கட் கொடுத்தேன். அதிலிருந்து அவர் என்னிடம் சிநேகமாயிருக்கிறார். அவர் மூலம்தான் தெரிந்து கொண்டேன்."



"அட, ராகவா! எப்படியெல்லாம் செல்வபோகத்தில் வாழவேண்டியவர்கள் இப்படியெல்லாம் கஷ்டப்படும்படியாகி விட்டதே! என்ன கொடுமை?"

"ஆமாம்! காலம் மாறுவது இயற்கை தானே? செல்வத்தில் வாழ வேண்டியவர்கள் வறுமையில் வாடுவார்கள். சில சமயம் வறுமையில் திண்டாடுபவர்களுக்குப் பெரிய அதிர்ஷ்டம் அடித்தாலும் அடிக்கும். உனக்குக் கூடத் திடீரென்று பெரிய அதிர்ஷ்டம் வரலாம்."

ரங்கதுரையையும் என்னையும் நினைத்துச் சொல்கிறார் என்று நான் நினைத்தேன். ரங்கதுரை கடிதம் எழுதாமலிருந்த ஏமாற்றத்தினால், "ஆமாம்! எனக்கெங்கே அதிர்ஷ்டம் வரப் போகிறது? அதிர்ஷ்டத்தின் லட்சணம்தான் தெரிந்திருக்கிறதே. நான் பிறந்ததும் இந்த ஊர் ஜமீன்தார் செத்துப் போனார். என் தந்தை ஜெயிலுக்குப் போனார்; பிறகு ஓடியே போய் விட்டார். என் தாயார் போனாள்! பிறகு சொக்கையா! என் தந்தைக்கு இருந்த செல்வமெல்லாம் போயிற்று." இதைச் சொல்லும்போதே, "ஐயையோ! இவரிடம் என்ன இப்படி உளறுகிறோம்?" என்று தோன்றியது. உதட்டைக் கடித்துக் கொண்டேன்.

"யார் இறந்து போவதற்கும் நீ காரணமாக இருக்க வில்லை. அதெல்லாம் அர்த்தமில்லாத பேச்சு. இப்பொழுது கூட நீ மனம் வைத்தால் ரொம்ப சுகமாக வாழலாம்."

அய்யாக் குட்டி என்ன சொல்லப் போகிறாரென்று என் உள் மனத்துக்குத் தெரிந்து விட்டது. எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. அந்த இடத்தை விட்டுப் போய்விட வேண்டுமென்று எண்ணி இரண்டு அடிகள் எடுத்து வைத்தேன்.

"இந்து! ஏன் ஓடுகிறாய்? உன் மனத்தைத் திறந்து சொல்லி விட்டுப் போயேன்" என்றார் அய்யாக் குட்டி.

அந்த சமயத்தில் ஏதோ பொத்தென்று கீழே விழுந்த சப்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். ஒரு கருந்தேள் வேகமாக ஓடியது. "ஐயோ!" என்று கத்தினேன். அய்யாக் குட்டி அதை அடிப்பதற்குக் கழியை எடுத்தார். இதுதான் சந்தர்ப்பம் என்று ஒரே ஓட்டமாக ஓடி விட்டேன். எங்கு போகிறோம் என்ற சிந்தனையே இல்லாமல் நடந்துகொண்டே போனேன். எதிரே என் தந்தை வயலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்துகொண்டிருந்தார்.

"என்னம்மா! நான் வர நேரமாகி விட்டதே என்று தேடிக் கொண்டு வந்தாயா?" என்றார்.

"ஆமாம் அப்பா!" என்றேன். பிறகு, "அப்பா! அய்யாக் குட்டி ஏதாவது உளறிக் கொண்டே இருக்கிறார். எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. இனி மேல் உங்களோடு நானும் தினமும் வந்து விடுகிறேன்!" என்றேன்.

என் தந்தை மிகவும் வருத்தத்துடன், "இந்து, எனக்கே உன்னைப் பற்றி ரொம்பக் கவலையாக இருக்கிறது. உனக்கும் பதினைந்து வயது முடிந்து விட்டது. ரங்கதுரை சீமையிலிருந்து திரும்பி வரும் வரை உன் கல்யாணத்துக்குக் காத்திருக்க வேண்டுமே என்று நினைத்தாலே பயமாக இருக்கிறது. என்ன செய்யப் போகிறேனோ ஒன்றும் புரியவில்லை.

உன்னைக் கல்யாணம் செய்து கொடுத்த பிறகுதான் என் மனத்தில் அமைதி ஏற்படப்போகிறது. உன் அன்னையாவது இருந்திருந்தால் என் கவலையைப் பகிர்ந்து கொள்வாள். நான் தனியாக இருப்பதால் எப்போதும் வேதனையாக இருக்கிறது, அம்மா!" என்றார்.

"நீங்கள் கவலைப்படாதீர்கள், அப்பா! ரங்கதுரை மிகவும் நல்லவர். அதனால் என் கலியாணத்தைப் பற்றியும், செலவைப் பற்றியும் உங்களுக்குக் கவலையே வேண்டாம். எல்லா சொத்தும் போய் விட்டால் கூட ரங்கதுரை என்னை ஏற்றுக்கொள்ளத் தயங்க மாட்டார் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது."

"சீமைக்குப் புறப்பட்டு மூன்று மாதம் ஆகிவிட்டது. முதலில் எழுதிய கடிதத்துக்குப் பிறகு ஒன்றையும் காணவில்லையே!" என்றார் அவர்.

என் மனத்தையும் அதே கேள்வி உறுத்திக் கொண்டிருந்த படியால் நான் மௌனமாக நடந்தேன்.

"அப்படி ஒன்றும் பிரமாதமாகக் கவலைப்படும்படி நேர்ந்து விடவில்லை. ஏதேனும் அசௌகரியத்தினால் எழுதாமலிருந்திருக்கலாம். வழியில் தவறிப் போயும் இருக்கலாம். அதனால் நீ ரொம்பக் கவலைப்படாதே. சீக்கிரத்தில் கடிதம் வரும் என்று நினைக்கிறேன்" என்று அவரே எனக்கு ஆறுதல் கூறினார்.

• • •

அய்யாக்குட்டி மறுபடியும் என்னை ஏதும் கேட்பதற்கு முடியாதபடி இருக்க முயற்சித்து வந்தேன். இது அவருடைய ஆத்திரத்தைக் கிளப்பி விட்டிருக்க வேண்டும். ஆகவே அவர் என் தந்தையிடம் ரங்கதுரையைப் பற்றி ஜாடையாக இழிவாகப் பேசத் தொடங்கினார்.

ஒருநாள் அப்பா களைப்பாறுவதற்காகச் சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார். தபால்காரன் சில கடிதங்களைக் கொடுத்து விட்டுப் போனான். நான் ஆவலுடன் ஓடிச் சென்று அவைகளை வாங்கிப் பார்த்தேன். அய்யாக்குட்டிக்கு இரண்டு கடிதங்களும், 'ஹாஸ்ய விருந்து' புதிய இதழும் வந்திருந்தன. எனக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது. நான் சலிப்போடு அந்த இதழை ஒரு நாற்காலியில் எறிந்து விட்டு, கடிதங்களை அய்யாக்குட்டியிடம் கொடுத்தேன். அய்யாக்குட்டி என் ஏமாற்றத்தைக் கவனித்தார். அப்பாவைப் பார்த்து, "இந்த ரங்கதுரையைப் பாருங்கள், மாமா. சீமை சென்று ஒரு கடிதமாவது போட்டானா? சே! என்ன மனிதர்கள்?" என்றார்.

"என்ன அய்யாக்குட்டி உளறுகிறாய்? ரங்கதுரைக்குப் போன இடத்தில் என்ன அசௌகரியமோ? கடிதம் எழுதினால் தானா என்ன? அவரைப் போன்ற தங்கமான மனிதர்கள் உலகத்தில் அபூர்வம். உனக்கு யாரைப் பற்றியாவது குறை சொல்வதே வேலை" என்று அவரைக் கடிந்து கொண்டார்.

"ஆமாம்! நான் சொன்னால் அப்படித்தான் இருக்கும். ரங்கதுரையைப் பற்றி ஊரே சிரிக்கிறதாம். சென்னையில் நல்ல பெயரே கிடையாதாம். தாய் தகப்பனார் வளர்த்த பிள்ளையா என்ன? தானாக வளர்ந்த பிள்ளை இப்படித்தான் இருப்பான். இவர்களை நம்பக் கூடாது."

"நிஜம்தான். நீங்கள் உங்கள் சொந்த அனுபவத்திலிருந்து சொல்கிறீர்கள் என்று தெரிகிறது" என்று நான் கூறி விட்டேன்.

அய்யாக்குட்டிக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்து விட்டது. "இந்து! என்னைப் பார்த்தா இப்படிச் சொன்னாய்? இத்தனை நாட்கள் பழகியும் என் குணம் உனக்குத் தெரியவில்லையே? ஒரு மாதம் பழகின ஒரு நாடோடிப் பயலைவிட நான் உனக்கு மட்டமாகப் போய் விட்டேனா? என்னை என்னவென்று நினைத்துக் கொண்டிருக்கிறாய்? இளக்காரம் என்று நினைத்தாயா? அதிகமாகப் பேசாதே!" என்று சத்தம் போட்டார்.

என் தந்தை அவரை அடக்கினார். "அய்யாக்குட்டி! நீ இந்துவோடு சண்டை போடுவது எனக்குப் பிடிக்கவேயில்லை. இது சிறிதும் சரியல்ல. அவள் சிறு பெண்தானே. மேலும் அவள் கூறியதில் என்ன தவறு இருக்கிறது? நீ

வினோபாவின் கருத்துக்கள்

தருமம் தினசரி வாழ்க்கையுடன் ஒன்றுபட்டிருக்க வேண்டும். செய்யும் ஒவ்வொரு செயலிலும் தரும வழி காணப்பட வேண்டும்.

எதற்காக ரங்கதுரையைப் பற்றி இழிவாகப் பேசுகிறாய்? வார்த்தையைக் கொடுத்து வார்த்தையை வாங்கிக் கொண்டாய். உன் மேல்தான் தவறு. இதோடு முடித்து விடுங்கள். மேலே ஒன்றும் பேச வேண்டாம்" என்றார்.

"ஆமாம்! ரொம்ப யோக்கியன். அதனால்தான் மெட்ராஸ் வக்கீலின் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்வதாகச் சொல்லி நிச்சயம் செய்து விட்டுப் போயிருக்கிறான். இதைச் சொன்னால் நீங்கள் வருத்தப்படுவீர்களே என்று இத்தனை நாள் பேசாமலிருந்தேன்."

திடீரென்று என் தலையில் இடி இடிந்து விழுந்து விட்டது போலிருந்தது. என் தந்தை மிகக் கோபமாக, "அய்யாக்குட்டி! இதைப் பற்றி இனிமேல் பேசுவதாக இருந்தால் வீட்டை விட்டுப் போய் விடு" என்று கூறினார்.

அய்யாக்குட்டியும் வேகமாக வெளியேறினார். அவர் சென்ற வேகத்தைப் பார்த்தால் திரும்பிவரமாட்டார் என்றே தோன்றியது. நல்லதாய்ப் போயிற்று என்று நினைத்துக் கொண்டேன்.

அப்பா என்னிடம், "இந்த முட்டாள் உளறினான் என்பதற்காக நீ வருத்தப் படாதே அம்மா! ரங்கதுரை அப்படிப் பட்டவன் என்று எனக்குத் தோன்றவில்லை. அய்யாக் குட்டிக்கு யாரைப் பற்றியாவது ஏதேனும் வம்பு பேசாவிட்டால் பொழுது போகாது. இதற்கெல்லாம் நீ வருத்தப்பட வேண்டியது இல்லை" என்றார்.

"அய்யாக்குட்டி சொல்வதிலும் ஒரு உண்மை இருக்கத்தானே செய்கிறது? சீமைக்குப் புறப்பட்டுப் போய் நான்கு மாதங்களாகிறதே. ஒரு கடிதமாவது எழுதினாரா? ஏன் அய்யாக்குட்டி சொல்வது நிஜமாக இருக்கக் கூடாது? பெரிய பணக்கார வக்கீல் யாராவது பெண்ணைக் கொடுப்பதாகக் கூறியிருக்கலாம் அல்லவா? நெருப்பில்லாமல் புகையுமா, அப்பா?" என்றேன் நான்.

"இந்து! இந்த மடையன் சொன்னதை வைத்துக் கொண்டு நீ மனம் கலங்கக் கூடாது. நமக்குச் சரியாகத் தெரியாத விஷயங்களைக் காதிலேயே வாங்கிக் கொள்ளக் கூடாது. சிலர் பொறாமையினால் இப்படித்தான் ஏதாவது சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இதையெல்லாம் பொருட்படுத்தாமலிருப்பதுதான் புத்திசாலித்தனம், அம்மா!"

நான் என் வேலையைப் பார்க்கப் போனேன். ஆனால் மனம் சிறிதும் சமாதானமடையவில்லை. ஏன் உண்மையாக இருக்கக் கூடாது? அவரோ நல்ல அறிவும், அழகும், குணமும் பொருந்தியவர். அவருக்குப் பெண்ணைக் கொடுக்க எத்தனையோ பேர் விரும்பலாம். நல்ல பணக்கார இடத்திலிருந்து பெண் கிடைத்தால் வேண்டாமென்று அவர் எப்படிச் சொல்ல முடியும்? சொன்னால் தான் பெண்ணைப் பெற்றவர்கள் விடுவார்களா? அவரை நச்சரித்து விட மாட்டார்களா?

ஒருவேளை அன்பு காதல் என்பதெல்லாம் பொய்தானோ? வீண் பிரமையோ? ஈசுவரா! அவருக்கு என் நினைவு இருக்குமா? நான் அவரை ஒவ்வொரு கணமும் நினைக்கிறேனே. அது அவருடைய உள்ளுணர்வுக்குத் தெரியுமா? இதுபோல் நூற்றில் ஒரு பங்காவது என்னைப் பற்றி அவர் நினைப்பாரா? இவ்வாறெல்லாம் எண்ணித் தத்தளித்துத் தவித்தேன். (தொடரும்)

38. உயிர் தப்பியது!



தந்தை விண்ணுலகு எய்திய பிறகு ராதாவின் ஆலோசனைப்படி வத்ஸராஜ் விவசாயத்தில் மனத்தைச் செலுத்தினன். இரண்டு மணங்குகூட விளையாத வயலில் அவனது உழைப்பின் பலனாகப் பன்னிரண்டு மணங்குக்கு மேலாகத் தானியம் விளையத் தொடங்கிற்று. அவன் தந்தை இருந்த காலத்தில் மாடு கன்றுகளைப் பார்த்துப் பராமரிக்கும் பொறுப்பு அண்டிப் பிழைக்கும் வேலையாட்களிடம் விடப்பட்டிருந்தது. அவர்களது சிரத்தைக் குறைவால் அவை இளைத்து எலும்பும் தோலுமாய்க் காட்சி யளித்தன. ராதாவின் நேர்ப் பார்வையில் வந்த சில தினங்களுக்கெல்லாம் அவை நன்கு கொழுகொழு வென்று வளர்ந்து ஆரோக்கிய முள்ளவையாகக் காணப்பட்டன. ஆட்களை மடக்கி ஐம்பது ரூபாய் பொருளைக் கொள்ளையடித்துக் கொண்டு வருவதைக் காட்டிலும் நிலத்தில் வேலை செய்து ஐம்பது ரூபாய்ப் பொருளை உற்பத்தி செய்வது சுலபமான காரியம், ஆபத்தும் குறைவான காரியம் என்பது வத்ஸராஜுக்கு நாளடைவில் நன்ருகத் தெரிந்து விட்டது. நிலத்தில் எத்தனைக் கெத்தனை அதிகமாக உழைக்கிறேமோ, அத்தனைக்கத்தனை அதிகமான பலனை அது தரும் என்பதையும் அவன் அநுபவ வாயிலாகக் கண்டறிந்தான்.

அதோடு விவசாயத்தில் வரும்படி அதிகரிக்க அதிகரிக்க இல்லாத பல பொறுப்புகள் தன் தலையில் வந்து சுமருவதையும் அவன் கண்டான். தான் அம்மாதிரி பிறருக்குப் பதில் சொல்ல வேண்டி வரும் என்பதை அவன் கனவில் கூட நினைக்கவில்லை.

இத்தனை நாட்களும் பயங்கர வாணிபம் விவசாயத்தை எப்படி யெப்படி யெல்லாமோ அட்டையாக உறிஞ்சி வந்திருக்கிறது.

வத்ஸராஜுக்குப் பன்னிரண்டு மணங்கு தான்யம் விளைந்திருக்கிறது என்பது தெரிய வேண்டியதுதான் தாமதம்: கிரிதர ஸேட் பழைய காகிதக் குப்பைகளைக் கிளறிக் கடன் பத்திரங்களை எடுத்து வந்து அந்தப் பன்னிரண்டு மணங்கு தான்யத்தையும் தம் வசப்படுத்திக் கொண்டு விடுவார். தன் வீட்டு எருமை தரும் பாலை நெய்யாக்கிச் சந்தையில் கொண்டு போய் விற்று வரச் செய்யலாம் என்று ராதா எண்ணுவாள். அதற்குள்ளாகக் கிரிதர ஸேட்டுக்குக் குருவிக்கு மூக்கில் வியர்த்த கதையாகத் தெரிந்து விடும். அப்புறம் என்ன? அந்த நெய்யும் கிரிதர ஸேட்டினிடம் அடகு வைக்கப்பட்ட பொருள், அதை விற்கும் உரிமை நமக்குக் கிடையாது என்பதை அத் தம்பதிகள் உணர்வார்கள்.

அதோடு அவ் விஷயம் நின்று விட்டால் தான் எவ்வளவோ நன்ருயிருக்குமே! வட்டி, வட்டிக்கு வட்டி என்று முதலும் குட்டி போட்டு ஏறி வந்தது. போகும் போக்கைப் பார்த்தால் வத்ஸராஜ் எத்தனை பிறவிகள் எடுத்தாலும் கடனைத் தீர்க்க முடியாது என்றுதான் தோன்றியது. அனுமார் வால் என்பார்களே, அதுபோல் அவன் தீர்க்கத் தீர்க்கக் கடன் வளர்ந்து கொண்டே வந்தது. இக் கடன் விஷயத்தில் யார் கணக்குச் சரி, யார் கணக்குச் சரியானதல்ல என்பதை ஒருவர் எப்படிச் சொல்ல முடியும்? வத்ஸராஜ் ஏதாவது முரண்டு பிடித்தாலோ, அவனுக்காக யாராவது வக்காலத்து வாங்கிக் கொண்டு பேசினலோ, கிரிதர ஸேட் கொண்டு வந்து போடும் பத்திரங்கள் உண்மையானவையென்று ருசுவாகி விடும்.

வத்ஸராஜ் விவசாயத்தின் மூலம் தன் செலவைச் சரிக்கட்டிக் கொண்டு போய் விடுவான், அது அவன் கையை வலுப்படுத்தி நம் கையைப் பலவீனப்படுத்தி விடக்கூடும் என்பதை அறிந்த கிரிதர ஸேட், அவன் தலைதூக்கக் கூடாது என்பதற்காக அடிக்கடி ஏதாவது வீண் வழக்குகளிலே அவனைச் சிக்க வைத்து வந்தார். யாருக்கும் தெரியாமல் கொஞ்ச நஞ்சம் சேமித்து வைத்திருக்கும் காசும் அவனிடம் தங்கக் கூடாது என்ற நல்லெண்ணம்தான் அவருக்கு அந்தப் புத்தியைக் கொடுத்திருந்தது.

ஒரு காலத்தில் குதிரை சவாரியிலும், புல்லாங்குழல் வாசிப்பதிலும் குஷியாகப் பொழு

தைப் போக்கிக் கொண்டிருந்த வத்ஸராஜ் உடலுழைப்பின் மூலம் சாகுபடியில் சிறந்தவனானான். கொள்ளையில் கைதேர்ந்தவனாயிருந்தாலும் கோணல் பாதையில் சென்று அவனுக்குச் சிறிதும் பழக்கமில்லை. எதிலுமே துணிச்சலுடன் நேர் பாதையில் சென்றுதான் அவன் பழகியிருந்தான். வட்டி, வட்டிக்கு வட்டி, பணம் காசு, ரூபாய், அணா, பைசா, வாய்தா, சம்மன், அப்பீல், மனு, விசாரணை, வக்கீல், குமாஸ்தா, அமீனா, முன்சீப், வாரண்டு, வழக்கு என்பது போன்ற விஷயங்களில் அவனுக்குக் கொஞ்சமும் பழக்கமே இல்லை. ஏன்? அந்தப் பெயர்களைக்கூட அவன் சரியாகக் கேட்டதில்லை; கேட்டிருந்தாலும் புரிந்து கொண்டதில்லை. அவையெல்லாம் மிக மிகச் சிக்கல் நிறைந்த சிருஷ்டியாக, பிரும்ம சிருஷ்டியைக் காட்டிலும் பிரமையில் ஆழ்த்தக் கூடிய சிருஷ்டியாக அவனுக்குத் தோன்றின. திசைப் பூண்டை மிதித்தவன் திசை தெரியாமல் சுற்றிச் சுற்றி யலைவதைப் போல் அவன் மூளையைச் சுழல வைத்தன. கொள்ளையும் களவும் கூட அவனுக்குப் பெரிதாகப் படவில்லை. வழக்கில் உழல வைத்து வாழ வகை தெரியாமல் திணற அடித்து விடும் நாகரிக வாழ்க்கை பயங்கரங்களிலெல்லாம் பயங்கரமானதாகத் தோன்றியது.

நள்ளிரவில் சிங்கம் புலி போன்ற துஷ்ட மிருகங்கள் வாழும் காட்டில் தன்னந் தனியனாகச் சுற்றுவதில் அவனுக்கு அச்சம் ஏற்பட்டதில்லை. ஆனால் பட்டப் பகலில் போலீஸார் புடை சூழ்ந்து நிற்கும் நீதி மன்றத்தில் பகட்டான ஆடை உடுத்திப் பிரமாதமாகப் பொரிந்து தள்ளும் வக்கீல்களும் காம்பீர்யமே உருவான நீதிபதிகளும் வீற்றிருக்கும் பொழுது குற்றவாளிக் கூண்டில் ஏறி நிற்க நேரிட்டால் அவன் கால்கள் தடுமாறித் துவண்டன; தணதணவென்று தந்தி பேசின.

தனக்குச் சொந்தமான நிலத்திலும் நீச்சிலும் கிரிதர ஸேட் உரிமை கொண்டாடுவதையும், அதை நீதி மன்றம் நியாயமானது என்று நிலைநாட்டுவதையும், தன் சொத்தை அவரிடம் சேர்ப்பிக்க அது நடவடிக்கை எடுத்துக் கொள்வதையும் கண்ட வத்ஸராஜ் வியப்பில் ஆழ்ந்தான். யோசிக்க யோசிக்க அது எப்படி என்பது அவனுக்கு விளங்கவேயில்லை. அது மட்டுமா? வத்ஸராஜ் வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே கிரிதர ஸேட் அவற்றைத் தமது சுவாதீனப்படுத்திக் கொண்டிருந்தார். அதை அவன் கைகட்டி வாய் புதைத்துப் பார்த்துக் கொண்டிருந்தான். என்ன வேடிக்கை!

இருந்தாலும் அவன் மனத்தை அது உறுத்தி வெகுவாகப் பாதித்தது. பட்டப் பகலில் சென்று கிரிதர ஸேட்டை மிரட்டி அவர் சொத்து முழுவதையும் சூறையாடிக் கொண்டு வந்து விட்டால் என்ன என்று கூட அவன் எண்ணினான். ஆனால் ராதா தான் அத்தகைய செய்கைகள் கூடாது என்று தடுத்து அவனை வயல் வேலைகளில் கவனத்தைச் செலுத்துமாறு தூண்டினாள்.

“தம்பிடிகூடப் பாக்கி வைக்காமல் ஸேட்டின் கணக்கை நாம் தீர்த்து விட வேண்டும், தெரிந்ததா?” என்பாள் ராதா தினமும். வத்ஸராஜும் அவள் பேச்சைப் பூர்த்தி செய்து விடவேண்டும் என்றுதான் ஒவ்வொரு நாளும் பாடுபட்டுக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் கிரிதரஸேட் அவனைப் பார்க்க வந்தவர், “வீடு பந்தகம் வைத்து அந்தக் கெடு முடிந்து விட்டது. ஒன்று கடனைத் தீர்த்துவிட வழி செய். இல்லாவிட்டால் புதிய பத்திரம் எழுதிக் கொடு!” என்றார்.

“இதுவரை அப்பா வீட்டைப் பந்தகம் வைத்திருப்பதாக என்னிடம் சொல்லவே இல்லையே! நீங்கள் என்னடா வென்றால் இப்படித் திடுதிப்பென்று புதிதாக ஒரு கல்லைத் தூக்கிப் போடுகிறீர்களே! எனக்கு ஒன்றும் வயணம் விளங்க வில்லையே!” என்றான் வத்ஸராஜ்.

“என்ன சொன்னாய்? நான் புதிதாகக் கல்லைத் தூக்கிப் போடுகிறேனா? இதோ, பார்! இந்தப் பத்திரம் புதியதா, பழையதா?” என்று கேட்டவாறே கிரிதரஸேட் ஒரு பழங்காலத்து உறையை எடுத்தார்.

“இங்கே கொடுங்கள், பார்ப்போம், எங்கள் அப்பாவின் கையெழுத்துத்தானா என்று?”. என்று கேட்டவாறே வத்ஸராஜ் பத்திரத்தை வாங்குவதற்காகக் கையை நீட்டினான்.

“கையெழுத்தைப் பார்த்து என்ன செய்யப் போகிறாய்? உன் அப்பன் கையெழுத்துப் போடவில்லை. கட்டை விரல் அடையாளம்தான் வைத்திருக்கிறான். அவன் படுத்த படுக்கையாக நோய்வாய்ப்பட்டுக் கிடந்த பொழுது வீட்டைப் பந்தகம் வைத்தான். இதோ பார், சாட்சிகூட இருக்கிறது. அவனால் கையெழுத்துப் போட முடியாததனால் இடது கைக் கட்டை விரலின் ரேகையை வாங்கியிருக்கிறோம். இரண்டு சாட்சிகள் எதிரே இருந்த பொழுதுதான் இந்தக் காரியம் நடந்ததாக்கும்!” என்றார் கிரிதரஸேட்.

வத்ஸராஜ் உண்மையாகவே பெருத்த யோசனையில் ஆழ்ந்தான். கிரிதர ஸேட்டின் இளைய சகோதரரான லால்ஜி ஸேட் நகரத்தில் வசித்து வந்தார். கிரிதர ஸேட்டைக் காட்டிலும் அவர் உதார குணம் படைத்தவர் என்று அவன் கேள்விப்பட்டிருந்தான்.

லால்ஜி ஸேட்டை வண்டி கொண்டுபோய் அழைத்து வருமாறு கிரிதர ஸேட் சொல்லவே, வத்ஸராஜ் வண்டி கொண்டு போனான். வழியில் லால்ஜி ஸேட்டுக்குத் தன் நிலைமையை விரிவாக விளக்கிக் கூறினான். அவன் வீட்டு வழியாகத்தான் லால்ஜி ஸேட்டை அழைத்துப் போக வேண்டியிருந்தது. தன் வீட்டு வாசலருகே வண்டி வந்ததும், விரலால் சுட்டிக் காட்டி, “எசமான்! இதுதான் என் வீடு. குந்தியிருக்க இந்தக் குடிசையாவது எசமான் தயவிலே இந்த ஏழைக்கு

பிச்சம் இருக்கட்டுங்க!" என்று கெஞ்ச மாட்டாக் குறையாகக் கூறினான்.

"நான் அண்ணாவிடம் சொல்கிறேன். நீ கவலைப்படாதே!—ஆமாம், உன் வீட்டுக்கு எதிரில் யாரோ நிற்கிறார்களே, யார் அது?" என்று கேட்டார் லால்ஜி ஸேட்.

தண்ணிலவைத் தேடிப் பிடிப்பதில் சகோர பட்சியின் விழிகள் அபாரத் திறமை வாய்ந்தவை என்பார்கள். தமக்கு விருப்பமான பொருளைத் தேடிக் கண்டு கொள்வதில் லால்ஜி ஸேட்டின் கண்கள் சகோர பட்சியையும் தூக்கியடிப்பதாக அமைந்திருந்தன.

வத்ஸராஜின் வீட்டு வாசலில் கருத்தைக் கவரும் அழகு வாய்ந்த ஒரு பெண் நின்று கொண்டிருந்தாள். அவளைப் பார்த்துத்தான் லால்ஜி ஸேட் மேற்கூறிய கேள்வியைக் கேட்டு வைத்தார். சற்று வெட்கத்துடன் "அதுவா? அது என் பெண்சாதியிங்க!" என்று பதில் அளித்தான் வத்ஸராஜ்.

"சரிதான், சரிதான்! முன்பே ஒரு தடவை நீ என்னிடம் இவளைப் பற்றிச் சொல்லியிருக்கிறாய். ஒரு பெண்ணைக் கடத்தி வந்து கல்யாணம் கட்டிக் கொண்டேன் என்று சொன்னாயே, அவள் தானே இவள்!" என்றார், வத்ஸராஜுக்கு அந்தக் காலத்தில் கிட்டிய வெற்றியைத் தாம் இன்னும் மறக்கவில்லை என்பதைக் காட்டிக் கொள்பவர் போல.

இலேசாகச் சிரித்துத் தலையசைத்தான் வத்ஸராஜ். பழைய இன்பகரமான நிகழ்ச்சியை ஒப்புக் கொண்ட பெருமிதம் அவன் முகத்திலே பளிச்சிட்டுப் பாவோடியது.

"ஏன் வத்ஸராஜ்! நீ ஒரு முரட்டுப் பையன் ஆயிற்றே! இவளை அடிக்கிறது-இடிக்கிறது இல்லையே?" என்று கேட்டார் லால்ஜி ஸேட். பெண்களைப் பற்றிப் பேசுவதென்றால் அவருக்கு ஆர்வமும் ஆசையும் அத்தனை அதிகம்.

"என்ன, எசமான்! இப்படிக் கேட்கிறீர்களே! நான் தொடுவேனா? எதற்காக நான் அவளை அடிக்கணுமுங்க?" என்றான் வத்ஸராஜ்.

"என்ன அப்பா இது? புருஷன் பெண்சாதிகளுக்குள்ளே ஒற்றுமை இல்லாவிட்டால், இப்படி நடக்கிறது சகஜம்தானே? ஆனால் உன் பேச்சிலிருந்து உங்கள் இருவருக்கும் இடையே இருக்கும் ஒற்றுமை அபாரம் என்று நன்றாகத் தெரிகிறது. உங்களுக்குள் சண்டை-சச்சரவு வருகிறதற்கு நியாயமே இல்லை. ஏனெனில் உனக்கு வாய்த்திருக்கிற பெண்டாட்டி பார்ப்பதற்கும் அழகாயிருக்கிறாள்; கெட்டிக்காரியாகவும் தோன்றுகிறாள். என்ன, நான் சொல்வது? உண்மைதானே?" என்றார் லால்ஜி ஸேட். பெண்ணைப் பற்றிய பேச்சாக இருந்துவிட்டதனால் அவர் வாய் அப்படிப் பிரமாதமாகத் துளிர்த்து விட்டது. சிலரது சுபாவத்தில் இத்தகைய குணம் இழையோடியிருப்பது இயல்பு தானே? தெரிந்த விஷயந்தானே?

நம் நாடும் நாளுக்கு நாள் நாகரிகத்தில் முற்றி முன்னேறி



வருகிறது என்பதில் ஆட்சேபணை யில்லை. ஆயினும் பிற மாதர்களின் ரூபலாவண்யத்தைப் பற்றி ஒருவர் புகழ்ந்து பேசினால் யாரும் நல்ல முறையில் எடுத்துக் கொள்வதில்லை. குறிப்பாகக் கிராமத்தார்கள் அத்தகைய பேச்சை அணுவளவு கூட விரும்புவதில்லை. அப்படி யிருக்கும்பொழுது ஒருவன் மனைவியைப் பற்றி அவனுக்கெதிரிலேயே பேசினால் விரும்பி ஏற்பார்களா? லால்ஜியின் அந்தப் பேச்சைக் கேட்ட வத்ஸ ராஜுக்கு உள்ளம் கொதித்தது. இருந்தாலும் உள்ளத்து உணர்ச்சிக்குப் பலமாக அணைகோலி விட்டுப் பேசாமல் உட்கார்ந்திருந்தான். அதை லால்ஜி ஸேட் தமக்குச் சாதகமாக எண்ணினார். அந்தப் பேச்சை மறுபடியும் சந்தர்ப்பம் வாய்க்கும் பொழுது, தாம் சௌகரியமாகத் தொடர முடியும் என்ற மகிழ்ச்சியில் மிதந்தவாறே அவர் தம் வீட்டை அடைந்தார்.

என்னதான் ஏழையாக இருந்தாலும் வத்ஸ ராஜுக்கு அவனது சமூகத்தில் ஒரு தனி அந்தஸ்து இருக்கத்தானே செய்தது? அதனால் அவன் வண்டி ஓட்டுவதில்லை. அதற்கென்று ஒரு ஆள் போட்டிருந்தான்.

வீட்டு வாசலை அடைந்ததும் லால்ஜி ஸேட் வண்டியிலிருந்து இறங்கி வீட்டுக்குள் சென்றார். வண்டிக்காரன் பெட்டி படுக்கைகளுடன் அவரைப் பின் தொடர்ந்தான். வத்ஸராஜ் வண்டியிலேயே இருந்தான்.

வேலைக்காரர்களுக் கெதிரே தன் மனத்துக்குப் பிடித்த விஷயத்தைப் பற்றி ஒருவன் எத்தனையோ ரசமாகவும் விரசமாகவும் பேசலாம். எத்தனை அஜாக்கிரதையாகப் பேசினாலும், அலட்சியமே உருவாகப் பேசினாலும், விபரீத பலன் ஏற்படக் கூடிய நிலைமை ஏற்பட்டு விட்டால், அந்த வேலையாளின் தலையில் அந்தக் குற்றத்தைக் கட்டி விட்டு, தான் வெகு சுலபமாகத் தட்டிக் கழித்துக் கொண்டு வெளி வந்து விடலாம். 'வேலைக்காரக் கழுதை பொய்யைத் திரித்து விடுகிறது!' என்று வேலைக்காரனின் தலையில் போட்டு விட்டால் யாரும் நம்பித்தானே ஆகவேண்டும்? அதோடு ஒரு காரியம் தனக்குச் சாதகமாகக் கூடும் என்று தோன்றினால் அதை அவன் மூலம் பரவச் செய்வதில் மாபெரும் சௌகரியம் இருக்கத்தானே செய்கிறது? இதை யெல்லாம் நன்கு அறிந்திருந்த லால்ஜி ஸேட் அந்த வண்டிக்காரனுக் கெதிரிலேயே, தம் தமையனைப் பார்த்து, "வத்ஸ ராஜின் வீட்டைப் பொறுத்த வரையில் ஏதாவது தகவல் இருக்கிறதோ?" என்றார்.

"அவனுக்குத் தகவலை விட்டால் வேறு ஏதாவது தெரிந்தால் தானே? தினம் பொழுது விடிந்தால், பொழுது போனால் ஏதாவது தகவலைத்தான் கிளப்பி விட்டுக் கொண்டிருக்கிறான்!" என்றார் கிரிதர ஸேட்.

"வீடு பந்தகத்தில் இருக்கிறது. அதை மீட்க அவனிடம் பணம் இல்லை என்று கேள்விப் பட்டேன். இது உண்மைதானா?"

"பணம் இல்லா விட்டால் பிச்சை எடுக்கட்டுமே!" என்று வெகு சுலபமாக வழி சொன்னார் கிரிதர ஸேட்.

"அதற்கு மனம் இல்லாவிட்டால் மனைவியைப் பந்தகம் வைக்கட்டுமே!"—வெகு நாகரிகத் திருத்தம் செய்து விட்டோம் என்ற மகிழ்ச்சியில் லால்ஜி ஸேட் 'கடகட'வென்று அறை அதிரும்படி நகைத்தார்.

கடன் கொடுத்து உதவும் காசு உள்ளவன் கடன் வாங்கும் குடியானவனை என்ன வேண்டுமானாலும் பரிகாசம் செய்யலாம். இளக்காரமாகப் பேசலாம். அவனை ஏன் அப்படி என்று அதட்டிக் கேட்பவர் யாரும் இருக்க முடியாது. குடியானவன் கெட்டிக்காரனாகிப் பரிகாசத்தில் உள்ள புதைபொருளைப் புரிந்து கொண்டு அதற்கு ஈடுகொடுத்து நடக்கக் கற்றுக் கொண்டால் கொடுக்கல்—வாங்கலில் எவ்வித சிரமமும் இருப்பதில்லை. ஆனால் அத்தகைய கெட்டிக்காரனாக ஆக யாருக்குமேதான் மனம் வருவதில்லையே!

வண்டிக்காரன் பெட்டி படுக்கைகளை உள்ளே வைத்து விட்டு வெளியே வந்தவன் அங்கே நடந்த பேச்சை ஒரு வார்த்தைகூட விடாமல் வத்ஸராஜிடம் சொன்னான். வண்டிக்காரன் வயோதிகன். ஆனால் வத்ஸராஜின் வம்ச பரம்பரையையும் பெருமையையும் நன்கு உணர்ந்தவன். அந்தக் குடும்பத்துக்கு உழைத்து உழைத்து அவனுக்கு அந்தக் குடும்பமே தன் குடும்பமாகத் தோன்றியது. அந்தக் குடும்பத்தின் பெருமையையே தன் குடும்பத்தின் பெருமையாக எண்ணினான். அவனுடைய கிழட்டு மீசையே ஆத்திரத்தில் துடித்தது. அப்படியிருக்கும் பொழுது வத்ஸ ராஜைப் பற்றிக் கேட்க வேறு வேண்டுமா? வழி வழியே வந்த வீர ரத்தம் கொதித்தெழுந்தது. அந்தக் கொதிப்பில் கண்கள் ரத்தமாகச் சிவந்தன. வண்டியில் இருந்த கோடரியைக் கையில் எடுத்துக் கொண்டு 'விடு விடு' என்று வீட்டுக்குள் நுழைந்தான்.

கிரிதர ஸேட்டும் லால்ஜி ஸேட்டும் ஒரே மெத்தையில் தலையணையில் சொகுசாகச் சாய்ந்தவாறு உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். வத்ஸராஜ் உள்ளே நுழையும் பொழுது, "ஏன், லால்ஜி ஸேட், நீ என்ன சொன்னாய்? என் மனைவியை அடகு வைக்கவா சொன்னாய்?" என்று கேட்டுக் கொண்டே ரௌத்திராகாரமாக அவர்களை நோக்கி முன்னேறினான்.

சமீபத்தில்தான் வத்ஸராஜுக்கு எதிராக ஒரு வழக்குத் தொடர்ந்து அதில் கிரிதர ஸேட் வெற்றி கண்டிருந்தார். அந்தத் தைரியம் அவரை நிர்ப்பயமானவராக்கி யிருந்தது. தம்பியின் கட்சியை ஆதரிப்பது என்ற தீர்மானத்துடன் வத்ஸராஜைப் பார்த்தார். "ஆமாம், சொன்னான். அவன் சொன்னதில் தவறு என்ன? அதற்காகப் பயமுறுத்த வந்து விட்டாயோ? பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியா விட்டால், மனைவியைக் கூட அடகு வைக்க வேண்டியதுதான். அ

வும் முடியாவிட்டால் அவனை விற்றாவது கடனை அடைக்க வேண்டியதுதான்!" என்று சீற்றம் பொங்கச் சொன்னார்.

அதைச் செவியுற்றதும் வத்ஸராஜ் தன் நிலை மறந்தான். கையோடு கொண்டு வந்திருந்த கோடரியைத் தூக்கிக் கிரிதர ஸேட்டின் கழுத்தைக் குறிபார்த்து ஓங்கிப் போட்டான். கோடரியைத் தூக்குவதைக் கண்டதும் கிரிதர ஸேட் கதிகலங்கி விட்டார். கோடரியின் வீச்சிலிருந்து தப்புவதற்காகத் தலையணைக்குக் கீழே தம்மை மறைத்துக் கொண்டார். அவர் அப்படியே உட்கார்ந்திருந்தால் ஒரே வீச்சில் அவர் தலை தனியாக உருண்டிருந்திருக்கும். திண்டை யொத்த தலையணை சரியான சமயத்தில் உபயோகப்படவே, கோடரி வீச்சின் வேகத்தை அவர் ஒருவாறு பொறுத்துக் கொள்ள முடிந்தது. இருந்தாலும் தலையணை துண்டாகி மெத்தை மீது கிடந்த அவர் கை வரையில் கோடரி இறங்கி விட்டது. அதனால் அவர் கை நரம்பு வெட்டுண்டு விட்டது. பேனாவையும் காகிதத்தையும் கொண்டு பிரமாதமாகப் போர் புரியும் கிரிதர ஸேட்டினால் கோடரியின் வேகத்தைத் தாள முடியவில்லை. பயந்து போய் வீறிட்டு உரக்கக் கூச்சலிட்டார். அந்தக் கூச்சலோடு அவர் மூளையும் தன் நிலை பிறழ்ந்து விட்டது.

இன்னொரு வெட்டுப் போட்டால்தான் ஆள் தீருவான் என்று தோன்றியது வத்ஸராஜுக்கு. அதனால் மறுபடியும் தனது முழு வேகத்துடன் கோடரியைத் தூக்கினான். தூக்கிய கோடரி கீழே இறங்குவதற்கு முன்னால் வண்டிக்காரக் கிழவன் ஓடிவந்து அவன் கையைப் பிடித்துக் கொண்டு விட்டான். அதன் பலனாகக் கிரிதர ஸேட் படுகொலையுறாமல் பிழைத்தார்.

கிரிதரஸேட்டை வேண்டுமானாலும் ஒருவேளை வத்ஸராஜ் விட்டிருப்பான். ஆனால் லால்ஜியை விட்டிருக்க மாட்டான். அவனைத் தொலைத்துத் தலை முழுகிவிட்டுத்தான் மறு காரியம் பார்த்திருப்பான். ஆனால் சாதுரியமே உருவான லால்ஜி ஸேட் தமையன் மீது விழப்போகும் கோடரியைக் கண்டதும் பயந்து ஒரே பாய்ச்சலில் வெளியே ஓடிவிட்டார். தெருவில் போய் நின்று கொண்டு லால்ஜி ஸேட் போட்ட கூச்சலில் ஊர் கூடி விட்டது. செய்தி கேட்ட அனைவரும் பறந்து விழுந்து கொண்டு ஓடிவந்தனர். தன்னைச் சூழ்ந்து ஏராளமானவர்கள் நிற்பதைக் கண்ட வத்ஸராஜ் பயந்து அங்கிருந்து ஓட முயற்சிக்கவில்லை. அஞ்சா நெஞ்சம் படைத்த சிங்கம் போல் அசையாமல் நின்றான். பலர் கூடி அவனைப் பிடித்துக் கொண்டார்கள். வத்ஸராஜ் எல்லாருக்கும் மத்தியில் தன் தவறை ஒப்புக் கொண்டான்.

"லால்ஜி ஸேட்டைக் கொன்று போடுவதென்றேதான் நான் இந்த வீட்டுக்குள் நுழைந்தேன். இத்தகைய விபரீதச் செயல் நேர்ந்ததற்குக் காரணம் கிரிதர ஸேட்டே தான். இவர் நடுவில் குறுக்கிட்டார். இவர் பேச்சு எனக்குப் பிடிக்காமற் போகவே, லால்ஜி ஸேட்மீது கொண்டிருந்த ஆத்திரம் திரும்பியது. லால்ஜி ஸேட்மீது வீச வேண்டிய கோடரியை இவர்மீது வீசினேன். தம்பிக்குக் கிடைக்கவேண்டியது அண்ணனுக்குக் கிடைத்தது. என் மனைவியைப் பற்றிக் காது கொண்டு கேட்கச் சகியாத வார்த்தைகளையெல்லாம் திமிர் பிடித்த இந்த ஸேட் பேசினான். ஆனால் அண்ணனை அதற்குப் பலி கொடுத்து இன்று இவன் தப்பி விட்டான். இருந்தாலும் இவன் என் கையிலிருந்து தப்புவது என்பது நடவாத காரியம். என்றைக்காவது ஒரு நாள் இவன் என் கையால் சாகத்தான் போகிறான். நான் இவனை விடப்போவதில்லை!" என்று கட்டுண்டிருந்த பொழுதிலும் வத்ஸராஜ் சினங்கொண்டு நிற்கும் சிங்கம் போலச் சீறினான். நேர்மையே உருவான அவனுக்குத் தன் உள்ளத்தில் உள்ளதை மறைத்துப் பேசவேண்டும் என்று தோன்றவில்லை. தான் நினைத்ததையும் நடத்தியதையும் தைரியமாகச் சொல்லி விட்டான்.

இம்மாதிரி உண்மையை ஒளிவு மறைவின்றிக் கூறும் குற்றவாளி, கூண்டில் ஏறி நீதிபதியின் தயவைப் பெற்றால், அதை அவனுடைய பெரும் பாக்கியம் என்றுதான் சொல்ல வேண்டும். அந்தப் பாக்கியம் எல்லாருக்குமே கிட்டிவிடக் கூடியதா?

'வத்ஸராஜின் மனைவியை லால்ஜி ஸேட்டும், கிரிதர ஸேட்டும் பரிகசித்தார்கள். மனத்தைப் புண்படுத்தும் அந்தப் பரிகாசத்தைப் பொறுக்க மாட்டாமல் அவன் அந்த கைய செயலில் இறங்கினான்' என்பது நீதி மன்றத்தில் ருசுவாகவில்லை. காரணம், அவனுக்குச் சாட்சியாக இருந்தவன் வண்டிக்காரக் கிழவன் மட்டுமேதான். அந்தச் சாட்சியத்தின் மீது நீதி மன்றத்துக்கு நம்பிக்கை விழவில்லை. அவன் என்ன உண்மையைச் சொல்லியும் வேண்டியவன் என்கிற முறையில் அவன் சாட்சியத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்று தள்ளி விட்டது.

எதிர்த் தரப்பிலிருந்து இந்தக் கொலை முயற்சிக்குக் காரணம் கொடுத்த பணத்தைத் திருப்பிக் கேட்டதுதான் என்று வாதிக்கப்பட்டது. கடைசியில் அதுவே உண்மையென்றும் ருசுவாகியது. அப்புறம் அவனுக்கு நீண்ட கடுந் தண்டனை விதிக்கப்படுவதைப் பற்றிக் கேட்கவும் வேண்டுமா?

கணவன் சிறை சென்று விட்டானே என்பதற்காக ராதா தன் பிறந்த வீட்டுக்குப் போய்விடவில்லை. தன் சின்னஞ் சிறு புதல்வனுடன் கணவன் வீட்டிலேயே இருந்தாள். எப்படியும் கணவன் சிறையிலிருந்து விடுபட்டுச் சீக்கிரமே வந்துவிடுவான் என்ற நம்பிக்கையில் குடும்பம் நடத்துவதில் ஏற்பட்ட சிரமங்களையெல்லாம் பொறுத்துக் கொண்டு

நாட்களை ஓட்டி வந்தாள். அவளோ பெண். தனியாக எப்படிச் சாகுபடி செய்ய முடியும்? எனவே, எருமை–பசுவைக் கொண்டு எப்படியோ தன் ஜீவனத்தை நடத்தி வந்தாள்.

வீட்டைப் பிடுங்கிக் கொண்டு விடுவேன் என்று லால்ஜி ஸேட் அடிக்கடி பயம் காட்டி வந்தார். ஆனால் ராதாவின் உடன் பிறந்த சகோதரன் அடிக்கடி அவளைப் பார்த்துப் போவதற்காக வருவான். லால்ஜி ஸேட்டின் கெட்ட எண்ணத்தையும் கெடுபிடியையும் அறிந்த அவன் ஒரு நாள் லால்ஜி ஸேட்டை நேரில் பார்த்து, "இனிமேல் வீட்டைப் பற்றிப் பேசினால் கிரிதர ஸேட்டை விட மோசமான நிலைமையை அடைந்து விடுவாய், ஜாக்கிரதை!" என்று எச்சரித்து வைத்தான்.

அவனுடைய அந்த எச்சரிக்கை நல்ல பலனையே அளித்தது. லால்ஜி ஸேட் அப்புறம் அந்தப் பேச்சை எடுப்பதையே நிறுத்திக் கொண்டார். அவருக்குக் கிராமத்துச் சொத்துச் சுதந்திரத்தைப் பற்றி அவ்வளவு அதிகமான அக்கறையும் எழவில்லை. கிரிதர ஸேட் தமக்கென்று நிச்சயம் செய்து வைத்திருந்த பெண்ணை தாமே மணந்து கொண்டு நகரத்தில் குடியேறித் தமது தொழில்–வியாபாரம் ஆகியவற்றைக் கவனிக்கலானார்.

* *

கோகிலாவுக்கு ஆசை வார்த்தைகள் காட்டி அதற்கு அவள் மசியாமற் போகவே, பலவந்தப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்ட லால்ஜி ஸேட் தம்மெதிரே அதே பழைய வத்ஸராஜ் நிற்பதைக் கண்டார். வத்ஸராஜ் முன் நடந்த அதே பழைய நிகழ்ச்சியைத் தான் நினைவுறுத்தினான். உடலும் உள்ளமும் ஒருங்கே உதறல் எடுத்து விட்ட லால்ஜி ஸேட் எப்படியாவது தம் வீட்டுக்கு ஓடிவிட வேண்டுமே என்று யோசனை செய்தார். அதற்காக ஒரு முறை தம் வீட்டுக்குப் போகும் பாதை வரைக்கும் வேகமாகத் தலை தெறிக்க ஓடவும் ஓடினார். வத்ஸராஜ் இலேசில் விட்டுவிடுவானா? ஓரே தாவாகத் தாவி அவரை மொட்டை மாடியின் மத்திக்குப் பிடித்து இழுத்து வந்தான். அடி விழுந்தால் என்ன ஆவது என்ற பயம் நல்ல நல்ல மனிதர்களின் கர்வத்தைக் கூடக் குலைத்து விடுகிறதல்லவா? இன்று செத்தோம் என்றே லால்ஜி ஸேட் தீர்மானம் செய்து விட்டார்.

அதே சமயம் பக்கத்து வீட்டில் போட்டுப் பூட்டியிருந்த கிரிதர ஸேட் இரும்புக் கிராதிகளின் வழியே எட்டிப் பார்த்துப் பயங்கரமாகச் சத்தமிட்டார். இதே போலத்தான் வத்ஸராஜின் கோடரிக்கு இலக்காக நேர்ந்த அன்றும் அவர் கூச்சலிட்டிருந்தார். அக் கூச்சலைக் கேட்ட வத்ஸராஜுக்கு அந்தப் பழைய சம்பவம் மீண்டும் ஒரு முறை நினைவு வந்தது. ஜகதீஷின் வீட்டுக்கு ராதா வந்த அன்றும் அவர் அதேமாதிரி கூச்சலிட்டிருந்தாராகையால், இந்த நினைவு ராதாவுக்கும் கோகிலாவுக்கும் ஏக காலத்தில் எழுந்தது. அவர் மறுபடியும் கூச்சலிடவே, எல்லோரும் சத்தம் வந்த திசையை நோக்கினார்கள்.

"வத்ஸராஜ்! அவனைக் கொன்று போடு. உயிரோடு விடாதே! இந்தக் காரியத்தைச் செய்தால், போதும் போதும் என்று சொல்லக்கூடிய அளவுக்கு உனக்குப் பணம் தருவேன். உன்மீது பண மழையாகவே பொழிவேன்!" என்றார் கிரிதர ஸேட்.

கிரிதர ஸேட்டுக்குப் பைத்தியம் பிடித்திருந்தது என்பதில் சந்தேகம் இல்லை. இத்தனை பைத்தியக்கார நிலைமையிலும் அவரிடம் ஒரு அறிவும் பொறுமைக் குணமும் நன்கு விகசித்திருந்தன. அவருக்குத் தம்பியிடம் எல்லையற்ற விரோத உணர்ச்சி உதயமாகி யிருந்தது. லால்ஜி ஸேட்தான் வத்ஸராஜுக்குப் பணம் கொடுத்துத் தம்மைத் தீர்த்துக் கட்டி விடுமாறு சொல்லியிருக்க வேண்டும் என்ற எண்ணம் அவருடைய இருதயத்திலே நிலையாக இடம் பற்றிக்கொண்டு விட்டது. அவர் மனத்தில் இடம் பெற்ற எண்ணத்துக்கு ஏற்றம் கொடுத்தாற்போல், அவர் மணந்து கொள்வதாகத் தீர்மானித்து வைத்திருந்த பெண்ணை லால்ஜி ஸேட் மணந்து கொண்டு விட்டார். அது மட்டும் அல்ல; லால்ஜி ஸேட் அவரிடம் நடந்து கொண்ட முறையும் அவர் எண்ணத்துக்கு ஆக்கம் அளிப்பதாக அமைந்து விட்டது. மறை கழன்று மூளை கெட்டு விட்ட பொழுதிலும் சகோதரனிடம் சத்துரு என்ற காய்ச்சல் நிலைபெற்று விட்டது. நல்ல நிலையில் இருப்பவர்களே ஒரு சந்தேகமோ சம்சயமோ உதித்து விட்டால் விடாப் பிடியாக விரோதம் பாராட்டத் தொடங்கி விடுவார்கள்.

பைத்தியம் பிடித்தவரின் மூளையில் ஒரு விஷயம் உறையேறி விட்டால் அப்புறம் அதை இலேசில் அகற்றிவிட முடியுமா?

லால்ஜி ஸேட்டுடன் வத்ஸராஜ் சண்டைக்குத் தயாராவதைக் கண்டதும் கிரிதர ஸேட்டுக்குப் பழைய சம்பவங்கள் பளிச்சென்று நினைவுக்கு வந்து விட்டன. வத்ஸராஜின் கோடரி வீச்சுக்கு இலக்கான சம்பவம் நினைவுத் திரையில் எழும்பொழுதெல்லாம் அவர் அம்மாதிரி கிறீச்சிட்டுக் கத்துவார். அப்பொழுதெல்லாம் தம் மீது வத்ஸராஜ் கோடரியை வீசுவது போன்ற பிரமை ஏற்படுவதுதான் அதற்குக் காரணம்.

ராதா அவரை இன்னார் என்று நன்கு புரிந்து கொண்டு விட்டாள். பைத்தியம் பிடித்த காரணமும் அவளுக்கு விளங்கி விட்டது. அவள் அவர் கண்களெதிரே அதிகமாகச் சென்றதில்லை. செல்ல வேண்டிய அவசியமும் அவளுக்கு இல்லையல்லவா?

அன்று வீறிட்டுக் கத்திய கத்தலோடு கிரிதர ஸேட்டின் பித்தமும் இறங்கி விட்டது. அதற்குப் பதிலாகப் பழி வாங்க வேண்டும் என்ற நோக்கம் பிரமாதமாக மூண்டு விட்டது. அப்பொழுது அவர் சொன்ன சொற்கள் அத்தனையும் வத்ஸராஜை நன்கு புரிந்து கொண்ட பின் சொல்லப்பட்டவைகளே. நினைவறிந்து பழிவாங்க வேண்டும் என்று எண்ணித்தான் அவர் அப்படிக் கூவினார். அச் சொற்கள் வத்ஸராஜின் ஆத்திரத்தை அதிகப்படுத்தின. (தொடரும்)



திருச்சி ஜில்லாவின் கோடியிலிருந்த என்னை மதுராந்தகம் ஸ்டேஷனுக்கு மாற்றி யிருப்பதாக உத்தரவு கிடைத்ததும், நான் மருண்டே விட்டேன். ஆறு வருஷங்களுக்கு முன்பு என் வாழ்க்கையில் பிரவேசித்த அந்த மதுராந்தகம் ஸ்டேஷன் என் மனத்தில் அழியாத கிலியின் சின்னமாகப் புதைந்து விட்டது. ஆனால், என் இஷ்டப்படியும், சௌகரியப்படியும் ரயில்வே இலாகாவினால் மாற்றிக் கொண்டிருக்க முடியுமா! ஒரு வழியாக, மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, மறு வாரமே மதுராந்தகம் வந்து சேர்ந்தேன். பழைய ஸ்டேஷன் மாஸ்டர் என்னை ரொம்பவும் கண்ணியத்துடன் வரவேற்றுப் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்தார். அன்று முதல்தான் எனக்கு வேலப்பனின் பரிச்சயம் ஏற்பட்டது.

வேலப்பன் முதன்முதலாக என்னைப் பார்த்ததும் ஏதோ ஒரு பேயைக் கண்டவன் போன்று திடுக்குற்றான். பின்னர், என் முகத்தின் அழகைக் கூர்ந்து நோக்கியபடியே, பழைய ஸ்டேஷன் மாஸ்டரின் முகத்தையும் ஏறிட்டு நோக்கினான். அவனது பார்வையின் அர்த்தம் புரியாமல் திகைத்தேன். 'பளபள' வென்று என்ஜினின் நிறத்தைப் போன்றிருக்கும் என் முகமும், அதனிடையில்—விநாயகமூர்த்தியின் தந்தம் போன்று, உதடுகளின் வெளி ஓரங்களிலுள்ள இரு பற்களையும் கண்டால் யாருமே சற்றுப் பிரமிக்கத்தான் செய்வார்கள்! இத்துடன் போதாதென்று, என் நெற்றியிலிருந்த நீளமான காயத்தின் வடு வேறு என் அழகின் பயங்கரத்தை மிகைப்படுத்துவதாக இருந்தது! இந்த நிலையில் வேலப்பனின் பார்வையைப் பற்றி நான் நினைப்பதற்கு என்னவிருக்கிறது!

"என்னடா விழிக்கிறாய்! இவர்தான் மிஸ்டர் ரகுபதி—இன்று முதல் இந்த ஸ்டேஷனுக்குச் சர்வாதிகாரி. உன் பாடு யோகம்தான்!"—இவ்வாறு ஹாஸ்யமான குரலுடன் கூறியபடியே பழைய ஸ்டேஷன் மாஸ்டர் அவன் முதுகிலும் ஒரு அடியைக் கொடுத்து வைத்தார்.


வேலப்பனைக் கூர்ந்து நோக்கினேன். ஏறக்குறைய நாற்பத்தைந்து வயதை யடைந்திருந்த போதிலும், அவன் முகத்தில் இன்னமும் இளமையின் களை படிந்திருந்தது. அவன் நெற்றியிலிருந்த விபூதிப் பட்டைகளும், சந்தனப் பொட்டும் அவனை ஒரு கோயில் பூசாரியாகவே எனக்கு அறிமுகம் செய்வித்தன.

பழைய ஸ்டேஷன் மாஸ்டர் என் புறமாகத் திரும்பினார். "இவன்தான் வேலப்பன். போர்ட்டர் வேலை, பாயிண்டிங் வேலை, எங்கள் குடும்பத்து வரவு செலவுக் கணக்கு வேலை—எல்லாவற்றையுமே இவன்தான் கவனித்துக் கொள்ளுகிறான். ஆனால், நடு நடுவில் 'வேலமரத்துப் பேய்' மட்டும் இவனைக் கூப்பிடாமலிருக்க வேண்டும்!" இவ்வாறு கண்களைச் சிமிட்டியபடியே கூறிக்கொண்டு, வேலப்பனை எனக்கு அறிமுகம் செய்வித்தார்.

நான் மதுராந்தகத்துக்கு வந்து சேர்ந்த மறு தினமே என் குடும்பத்தையும் வரவழைத்துக் கொண்டேன். வேலப்பன் எங்களிடமெல்லாம் நெடுநாள் பழகியவன் போல் பழகி, எங்கள் குடும்பத்தினரின் உள்ளங்களைக் கவர்ந்து விட்டான்.

வேலப்பனுக்குச் சொந்தத்தில் வீடு வாசல்களோ, உற்றார் உறவினர்களோ—ஒன்றுமில்லை. ஏறக்குறைய ஆறேழு வருஷங்களுக்கு முன்பு அவனுடைய மனைவி இறந்தது முதல் அவன் ஒண்டிக் கட்டையானான். ஆகவே, அவன் பணங்காசுகளைப் பற்றி இலட்சியமே செய்வதில்லை. யாருக்காவது கடன் கொடுத்திருந்தாலும், அதைத் திருப்பிக் கேட்கும் கெட்ட பழக்கமும் அவனிடமில்லை! இவைகள்தாம் — வேலப்பனைப் பற்றி நானறிந்த செய்திகள்.

மதுராந்தகம் ஸ்டேஷனில் காலை பத்தரை மணி வண்டி சென்ற பின், மாலை மூன்று மணி வரையில் ஓய்வுதான். இந்த இடைக் காலங்களில், அநேகமாக நான் வேலப்பனைக் காணவே முடியாது. அவன் எங்கே போகிறான், என்ன செய்கிறான் என்பது கூட எனக்குத் தெரியாது. ஆனால், மூன்று மணி சுமாருக்கு அவன் எதிர்ப்படும் போது, அவனது தோற்றமே அலாதியாக இருக்கும். நெற்றி முழுவதும் விபூதியும், அதன் நடுவில் சந்தனப் பொட்டும் குங்குமமும் பிரகாசித்த





வண்ணம் காட்சியளிப்பான். நான் கேட்கும் கேள்விகளுக்கு எதையாவது சொல்லி, சிரித்து மழுப்பி விட்டுப் போய் விடுவான்.

ஒரு தினம் வேலப்பனின் அலுவல்களை நோட்டமிட்டேன். வழக்கம் போல் காலை பத்தரை மணி வண்டி சென்ற பின், அவன் கையிலுள்ள துணி மூட்டையுடன் நாலாபுறங்களையும் நோக்கினான். பின்னர், எதிர்ப் பக்கங்களிலிருந்த அரளிப் புஷ்பங்களைக் கொய்து எடுத்துக் கொண்டு, இருப்புப் பாதையை யொட்டித் தெற்கே வெகு தூரம் சென்றான். ஒற்றைக் கைகாட்டி மரத்தையணுகும் பொழுது அவனது உருவம் மிகச் சிறியதாகவே தென்பட்டது. அவன் நாலா புறங்களையும் ஒரு முறை திரும்பிப் பார்த்து விட்டு, தண்டவாளத்தின் பாதையை விட்டுக் கீழே உள்ள பள்ளத்தாக்கில் இறங்கினான். அதன் பின்னர், அவனது உருவம் நாணற் காட்டுக்குள் மறைந்து விட்டது. வெகு நேரம் வரையில் நோக்கினேன்; அவனது உருவமே என் கண்களுக்குத் தெரியவில்லை. மீண்டும் மூன்று மணி சுமாருக்கு அவன் வழக்கம் போல் பூசாரிக் கோலத்துடன் ஸ்டேஷனுக்குள் நுழைந்தான்.

வேலப்பனின் நடவடிக்கைகள் என் ஆர்வத்தைத் தூண்டின. ஒரு நாள் அவனிடம், "நீ எந்தக் கோவிலுக்குத் தினமும் செல்லுகிறாய்! இன்று நானும்தான் உன்னுடன் வருகிறேனே!" என்றேன். அவன் இலேசாக நகைத்தான். பின்னர் பயங்கரத்தை விழிகளின் மூலம் அறிவித்தபடியே, "ஸார், வேண்டாம் ஸார்! அந்தச் சனி ரொம்பப் பொல்லாதது" என்றான். அவனது பதில் என் மனத்தை வலிவுடன் உலுப்பிற்று! அந்த வரலாற்றைத் தெரிவிக்குமாறு, மீண்டும் அவனைத் தூண்டினேன்.

வேலப்பன் சிறிது நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்தவன் போலிருந்தான். பின்னர், என் முகத்தின் இலட்சணங்களை ஒரு தரம் ஆராய்ந்து விட்டு, "நீங்களும் இங்கே வந்து மூன்று மாசம் ஆயிடுச்சுங்களே, வேல மரத்துப் பேயைப் பற்றி நீங்கள் கேட்டதில்லையா!" என்றான். அவனது கேள்வியினால் நான் கொஞ்சம் திடுக்குற்றேன். ஆனாலும் நான் மதுராந்தகத்துக்கு வந்த மறு தினமே ஸ்டேஷனிலிருந்த சில உள்ளூர்ப் பிரயாணிகள் வேலமரத்துப் பேயின் சில அதிசயங்களையும், கொடுமைகளையும் பற்றி விவாதித்துக் கொண்டிருந்ததெல்லாம் ஓரளவு என் செவியில் விழுந்திருந்தன.

நான் வேலப்பனை நோக்கித் தலையசைத்தேன். அவன் ஒரு தரம் கனைத்துக் கொண்டே, "சுமார் ஆறு வருஷத்துக்கு முந்தி இந்த ஸ்டேஷனிலே ரயில் விபத்து நேரிட்டதே, அது உங்களுக்குத் தெரியுங்களா!" என்ற கேள்வியைத் தொடங்கி என் முகத்தையே கூர்ந்து நோக்கினான். என் உடல் சிலிர்த்தது.

"அந்த விபத்துக்குக் காரணம் இந்தப் பேய் தானுங்க!" என்றான் வேலப்பன்.

அதைத் தொடர்ந்து என்னுடைய சரமாரியான கேள்விகளுக்குப் பின், அந்தப் பேயின் வரலாற்றையும், ரயில் விபத்து நேரிட்டதையும் குறித்து விவரமாகத் தெரிவித்தான்.

2

ஸ்டேஷனுக்குத் தெற்கே உள்ள ஒற்றைக் கை காட்டி மரம் ஏறக்குறைய முக்கால் மைல் தூரத்திலிருந்தது. அந்தக் கைகாட்டி மரத்தின்

கிழக்குப் புறத்தில் நாணற் காடும் அதையடுத்து ஒரு அகலமான குளமுமிருந்தன. அதன் ஓரத்தில் வானளாவியது போன்றிருந்த அந்த வேல மரத்தில்தான் பேய் இருந்தது. மூன்று புறங்களிலும், கண்ணுக் கெட்டிய தூரம் வரையில் வெறும் கூழாங்கற்கள் நிறைந்த பரந்த வெளி. சற்று தூரத்திற்கு அப்பாலிருந்த ஒரு மூங்கிற் தோப்பும், அதையடுத்திருந்த வளைவான வண்டிப் பாதையும்தான் அது பாலைவனமில்லை யென்பதை மெய்ப்பித்துக் கொண்டிருந்தன. ஜன சஞ்சாரமேயில்லாத அந்தப் பிரதேசத்துக்குச் சர்வாதிகாரியாக விருந்த அந்த வேலமரத்துப் பேய், தினமும் அந்தி வேளைகளில் கூவுவது பக்கத்துக் கிராமங்களுக்குக் கூடக் கேட்கும். சில சமயங்களில், இரவு வேளைகளில் சஞ்சார மிடவும் தொடங்கும். அப்பொழு தெல்லாம் ஊரிலுள்ள ஆடுகளுக்கோ, கோழிகளுக்கோ ஆபத்து நேர்ந்து விடும். வேலப்பன் அந்தி வேளைகளில், கைகாட்டி மரத்தின் மேல் விளக்கை வைத்து விட்டு வரும்போ தெல்லாம் கூட, அந்தப் பேயின் ஒலியைக் கேட்டிருக்கிறான்.

இந் நிலையில்தான், ஆறு வருஷங்களுக்கு முன்பு, ஒரு நாளிரவு பதினொன்றரை மணி வண்டி அசாத்திய வேகத்துடன் மதுராந்தகம் ஸ்டேஷனை நோக்கி வந்து கொண்டிருந்தது. அது அந்த ஸ்டேஷனில் நிற்பதில்லை. ஒற்றைக் கைகாட்டியின் சமீபமாக வந்த வண்டி, திடீரென்று இருப்புப் பாதையை விட்டு இறங்கியது. அடுத்த கணம், அந்த வேலமரத்துப் பேயின் இரத்தவெறி தாண்டவமாடிற்று. அதிலும் நல்ல வேளையாக என்ஜினின் சமீபத்திலிருந்த இரண்டு பெட்டிகள் மட்டும் நொறுங்கிச் சிதறின. எஞ்சியிருந்த ஆறு பெட்டிகளும் வெறும் அதிர்ச்சிக்கு மட்டும் உள்ளாயின. ஆறு பேர்கள் ஸ்தலத்திலேயே மாண்டனர். சுமார் இருபது பேர்கள் படுகாயமுற்று, சுயநினைவும் இழந்து விட்டனர். இச் செய்தி அறிந்ததுமே, ஸ்டேஷனிலிருந்த யாவரும் ஓட்டமாக ஓடி வந்து உதவிகள் செய்தனர். பின்னர் ஒரு ஸ்பெஷல் வண்டியைத் தருவித்து அதன் மூலம் எஞ்சி யிருந்தோரைச் சென்னை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய்ச் சேர்த்தனர்.

அன்று முதல், அந்தக் கைகாட்டி மரம் ஒரு பயங்கரப் பிரதேசமாகி விட்டது. அங்கு எவரும் போவதில்லை. விபத்தில் இறந்து போனவர்களின் ஆவிகள் அங்கு உலாவிக் கொண்டிருப்பதாக எல்லோரும் கூறிக் கொண்டார்கள். பகல் வேளைகளில் எப்பொழுதாவது மனிதர் அங்கு தென்பட்டாலும்கூட, வேலப்பன் அவர்களை விரட்டியடித்துக் கொண்டிருந்தான். ஆனால், அவன் மட்டில் தினசரி அந்த வேலமரத்தடிக்குச் சென்று அதற்குப் பூஜைகள் செய்துவிட்டு வருவான். இச் செய்கையின் மூலம் அந்தப் பேயைத் தடை கட்டி வருவதாகவும், அதனால் கடந்த இரண்டு வருஷங்களாக அதன் சஞ்சாரம் அதிகம் நேருவதில்லை யென்றும் பெருமையுடன் கூறினான் வேலப்பன்.

நான் அவன் முகத்தையே கூர்ந்து நோக்கிய வண்ணம் இருந்தேன். அவன் அடிக்கடி வேறு புறத்தை நோக்கிய வண்ணம் கூறும்போதெல்லாம், ஏதோ ஒருவித சங்கோசம் மட்டும் அவனது முகத்தில் பிரதிபலித்துக் கொண்டிருந்தது. என் உள்ளத்திலோ—அந்த நள்ளிரவில் நடந்த கோரக் காட்சிகள் உருவாகி நர்த்தனம் புரிய வாரம்பித்து விட்டன. ஏனெனில், அந்த ரயில் விபத்துக்குள்ளான பிரயாணிகளில் நானும் ஒருவன்.

ஆறு வருஷங்களுக்கு முன்பு, நான் சோளகம் பட்டி ஸ்டேஷனில் உதவி ஸ்டேஷன் மாஸ்டராக இருந்தேன். அப்பொழுது எனது அருந்தவப் புதல்வியான ஹேமா, பதினைந்தாம் வயதை எட்டிப் பிடித்திருந்தாள். அவளுக்கு வரன் தேடும் படலத்தை மேற்கொண்டிருந்த நான் அரும்பாடு பட்டு, ரயில்வே இலாகாவிலிருந்து இரண்டு மாத ரஜாவைப் பெற்று, வரன் வேட்டையைத் துவங்கி யிருந்தேன். பல இடங்களுக்கும் அலைந்த பின்னர் சென்னையிலிருந்த ஒரு வரன் எங்கள் கவனத்தைக் கவர்ந்தது. ஏறக்குறைய ஐயாயிரம் ரூபாய் செலவுடன் கலியாணத்தையே முடித்து விடலாமென்று என் உறவினர் கடிதம் எழுதி யிருந்தார். ஆகவே, மறுநாளே மூட்டை முடிச்சு களுடன் சென்னைக்குக் கிளம்பினேன். ஆனால் இந்த மதுராந்தகம் ஸ்டேஷனும், இதிலுள்ள சக்தி வாய்ந்த வேலமரத்துப் பேயும் என்னைப் பழி தீர்த்துக் கொண்டு விடுமென்பதை அப் பொழுது நான் எப்படி அறிய முடியும்!

அந்த நள்ளிரவில் எழுந்த பேயின் அட்ட காசக் குரல் இப்பொழுதுகூட என் வயிற் றைக் கலக்குகிறது! ஒரு கோர சப்தம் எழுந்தது. என்ஜினுக்குப் பக்கத்துப் பெட்டியிலிருந்த நான் எங்கோ தூக்கி யெறியப்பட்டு, நெற்றியில் பல மான அடியுடன் சுருண்டு விழுந்தேன். அதைத் தொடர்ந்து ஐந்து தினங்கள் வரையில் – என்னைப் பற்றிய நினைவே எனக்குத் தெரியாது. அடுத்த ஆறும் நாளன்றுதான் நான் சர்க்கார் ஆஸ்பத் திரிப் படுக்கையிலிருந்ததை ஒருவாறு உணர்ந் தேன். கடவுளின் சித்தப்படி, ஒரு மாத காலத் துக்குப் பின், உடல் நலத்துடன் எழுந்தேன். ஆனால், என் பெட்டியும், அதிலிருந்த எட்டாயிரம் ரூபாய் பெறுமானமுள்ள நகைகளும் விபத்துக் குப் பலியாகவே, எனது துரதிர்ஷ்டப் பெண்ணான ஹேமா இன்று வரையில் கன்னியாகவே இருந்து வருகிறாள். இதையெல்லாம் நான் வேலப்பனிடம் கூறவில்லை. கூறித்தான் என்ன பயன்!

3

வழக்கம்போல் அன்று காலை பத்தரை மணி வண்டி வந்து சென்றுவிட்டது. நான் நிம்மதியுடன் தலைப்பாகையையும், கோட்டையும் கழற்றி ஆணி யில் மாட்டிவிட்டு நாற்காலியில் சாய்ந்தேன். வேலப்பனும் சுற்று முற்றும் நோக்கி விட்டுப் பேய்ப் பூசைக்குச் செல்வதற்காக ஆயத்தம் செய்து கொண்டிருந்தான். சிறிது நேரத்துக் கெல்லாம், விடுதியிலிருந்து வந்த ஹேமா என்னைச் சாப்பிட அழைத்தாள். எனக்கு அப்பொழுது உணவு தேவையில்லை யென்பதைக் கூறி அவளை யனுப்பி விட்டு, மீண்டும் சிந்தனையிலாழ்ந்தேன். ஆனால், வேலப்பன் என்னை நோக்கி, "குழந்தைக் குக் கண்ணாலம் கட்டலீங்களா!" என்றான். அவனுடைய விசாரணைக்கு என்ன பதிலைச் சொல் வது! அசிரத்தையுடன், "செய்யணும்" என்று கூறியபடியே சுவர்ப்புறத்தை நோக்கினேன்.

என்னுடைய பதிலினால் வேலப்பன் திருப்தி யடையவில்லை. "ஐயாவுக்கு நிலம் நீச்சு—ஒண்ணும் இல்லீங்களா!" என்றான். நான் ஒருதரம் பெரு மூச்செறிந்து விட்டுத் தலையசைத்தேன். மீண்டும் அந்த விடாக்கண்டன் என்னை விடுவதாக இல்லை. பல கேள்விகளை அடுக்கினான். ஆகவே, என் னுடைய வரலாறு முழுவதையும் கூறி, இருபது வயதான ஹேமாவின் கன்னிக் கோலத்தின் கார ணத்தையும் விளக்கினேன். அடுத்த கணம் அவன் பரபரப்புடன் எழுந்து நின்று, "போனதெல்லாம் போகட்டும், ஸார்! நான் பூசை பண்ணுகிற கோயிலைப் பார்க்கணும் என்று சொன்னீங்களே, வாங்க, போகலாம்" என்றான்.

அவனது அழைப்பு என்னை ஒரு கணம் திடுக் குறச் செய்தது. "அட பாவி! நான் பிள்ளை குட்டிக்காரனடா; இந்த வேளையில் அந்த வேல மரத்துப் பேய் ஏதாவது—" என்று குழம்பிய வாறே கூறிவிட்டுக் கைகளை ஆட்டி மறுத்தேன். ஆனால், அவன் 'கலகல' வென்று நகைத்தபடியே, "அதெல்லாம் நான் கிட்டே நிற்கிற வரையில் ஒண்ணும் செய்ய முடியாதுங்க!—" என்று பெரு மையுடன் கூறி என் கையைப் பற்றி இழுத்தான்.

சுவரி லிருந்த கடிகாரத்தைப் பார்த்தேன். மணி பன்னிரண்டரைதான் ஆகியிருந்தது. அந்த வேளையில் எனக்கு எவ்வித அழைப்பும் நேராத வழக்கமானதால், ஆபீசைப் பூட்டிக் கொண்டு அவனைத் தொடர்ந்து சென்றேன். அவனது பேய்ப் பூசையின் மகிமையையும் நான் அறிந்து கொள்ளலாமல்லவா!

சற்று தூரம் சென்றதும், வேலப்பன் மீண்டும் திரும்பி வந்து பிளாட்பாரத்துக் குள்ளிருந்த ஒரு இரும்புக் கடப்பாறையைக் கையிலெடுத்துக் கொண்டான். நான் அதுபற்றி விசாரித்தபோது, "எதற்கும் இது கையிலே இருக்கிறது நல்ல துங்க!" என்றான். வேலப்பனின் நடையின் வேகத்தை என்னால் சமாளிக்க முடியாமல் அவ னுடன் ஓடிக் கொண்டிருந்தேன்! அவன் நடு வழியில் ஒன்றுமே பேசவில்லை. ஒற்றைக் கை காட்டியின் சமீபம் வந்ததும், அவன் பள்ளத் தாக்கில் இறங்கி நின்று கொண்டு என்னையும் ஜாக்கிரதையுடன் இறங்கி வருமாறு எச்சரித் தான். பின்னர், நாங்கள் நாணற் காட்டைக் கடந்து அந்த வேலமரத்தடிக்கு வந்துசேர்ந்தோம்.

வேலப்பன் நாலாபுறங்களையும் ஒரு தடவை ஆராய்ந்தான். சுற்றுப்புறம் முழுமையிலும் பயங் கரமான நிசப்தம் நிலவி யிருந்தது. பின்னர், மரத்தையும் அண்ணாந்து பார்த்து அதன் உச்சி வரையில் பார்வையைச் செலுத்தினான். பேயின் ஆட்சிக்குட் பட்டிருந்த அந்தப் பசுமையான மரத்தில் காக்கை கூட உட்கார அஞ்சி யிருந்தது போலும்! மரம் காற்றுக்குக் கூட

அசைவின்றி ஒய்யாரத்துடன் நின்றுகொண்டிருந்தது. மரத்தின் கீழே, அதன் வேரை ஒட்டினாற்போல் ஒரு பெரிய கருங்கல் கிடந்தது. எத்தகைய உருவமும் இல்லாத அந்தக் கல்லின்மேல் சந்தனப் பொட்டுக்களும், குங்குமப் பொட்டுக்களும் வரிசையாக இடப்பெற்று, பூக்களால் அலங்கரித்துப் பூசையும் செய்யப் பெற்றிருந்தது! வேலப்பன் என்னை விசித்திரமாகப் பார்த்தபடியே, "இது தானுங்க நான் தினசரி பூசை செய்யிற இடம்" என்று கூறிக்கொண்டே அந்தக் கல்லைச் சுட்டிக் காட்டினான். நான் ஒன்றுமே புரியாதவாறு திகைத்தேன். "ஏனுங்க இப்படிப் பயப்படுறீங்க!" என்று கூறி ஏளனமாக நகைத்தான்.

வேலப்பன் தன் இரு கைகளையும் கூப்பி அந்தக் கல்லை வணங்கி விட்டு, கடப்பாறையைக் கையில் எடுத்தான். அடுத்த கணம் அந்தக் கல்லின் கீழே அதைச் செருகி கெம்பிக் கொண்டு, அதைப் புரட்டுவதற்காக என் உதவியை வேண்டினான். அவனது செயலின் பொருள் விளங்காமல், நானும் அவனுக்கு உதவி செய்தேன். பெரும் பிரயாசைக்குப் பின், அந்தக் கல் இடத்தை விட்டுப் புரண்டது. அதன் கீழே அடுக்கி வைத்தாற் போலிருந்த கூழாங் கற்களைப் பொறுக்கி அப்பால் எறிந்து விட்டு, அவன் அந்தத் துவாரத்துக்குள் இரு கைகளையும் விட்டு மேலே தூக்கினான். பயமும், வியப்பும் சேர்ந்தபடி நான் அயர்ந்து நின்றேன்.

வேலப்பனின் கையில் பல கோணங்களாக நசுங்கி யிருந்த இரும்புப் பெட்டி யிருந்தது. அவன் அதை லாகவத்துடன் திறந்தபடியே, என்னிடம் நீட்டி, "இந்தாங்க! உங்கள் வீட்டு நகைகளெல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு, இந்த மாசமே குழந்தைக்குக் கல்யாணத்தைச் செய்து முடியுங்க!" என்றான். அப்பொழுது அவனது குரலில் சற்றே ஏளனமும் கூடப் பிரதிபலித்தது.

என் இதயத்துக்குள் ஒருவித மின்சாரம் தாக்கியது போன்றிருந்தது! நான் காண்பதெல்லாம் கனவுதானோ என்றுகூட எண்ணினேன். ஆனாலும் கையில் பளுவுடனிருந்த பெட்டியும், அதனுள் கண்களின் ஒளியைப் பறித்துக் கொண்டிருந்த நகைகளும் அக்காட்சியை ஊர்ஜிதம் செய்தன. நான் பாஷையின்றி ஆனந்தக் கூச்சலிட்டேன்! "வேலப்பா, நீ உண்மையிலேயே ஒரு தெய்வம் தானடா! இது எப்படி உனக்குக் கிடைத்தது!" என்றேன் பரபரப்பான குரலுடன்.

வேலப்பன் கூறிய வரலாறு முழுவதும் என்னை மீண்டும் திகைப்புக் கடலில் அழுக்கித் திணறச் செய்து விட்டது!


அந்த ரயில் விபத்து நடந்தபொழுது, நான் தூக்கியெறியப்பட்டுச் சுயநினைவே யின்றி இருந்து விட்டேனல்லவா! அதனால், நாணல் புதருக் கப்பால் நசுங்கிப் போய் விழுந்த எனது 'டிரங்கு'ப் பெட்டியைப் பற்றி யாருமே கவனிக்க முடியாத நிலைமை ஏற்பட்டு விட்டது. ஸ்டேஷனிலிருந்து உதவிக்கு வந்திருந்த நபர்களுள், வேலப்பனின் விழிகளுக்கு மட்டில் அது இருக்குமிடம் தெரிந்தது. அதை யெடுத்து வெளியிட்டாலோ, அது யாருடையது என்பதை எப்படி நிர்ணயிக்க முடியும்! என் நெற்றியிலிருந்த இரத்த வெள்ளத்தைத் துடைத்து, என் உடலைத் தூக்கி உதவி வண்டியில் கிடத்தினவனும் இதே வேலப்பன் தானென்றாலும், அந்தப் பெட்டி என்னுடையதுதானென்பதை அவன் எப்படி அறிந்து கொள்ள முடியும்!

வேலப்பனின் உதார குணம், அந்த உடைமையை, அதற்குரியவர்களிடமே கொடுத்துவிடத்தான் எண்ணியிருந்தது. இதற்காக, அவன் ஆறு வருஷங்களாகக் காத்திருந்தான். இன்று என்னுடைய வரலாற்றை யறிந்தவுடன்தான், அவன் மனத்தில் அரைகுறையாக இருந்த சந்தேகம் நீங்கியது. மூன்று மாதங்களுக்கு முன்பு, முதன் முதலாக அவன் என்னுடைய முகத்தின் அழகைக் கூர்ந்து ரசித்ததின் ரகசியமும் அப்பொழுதுதான் எனக்கு விளங்கியது.

தோளின் மீது கடப்பாறையும், மற்றொரு கரத்தில் பெட்டியுமாக வேலப்பன் என்னை அழைத்துக் கொண்டு ஸ்டேஷனை நோக்கி வந்து கொண்டிருந்தான். நான் அவனது உதார குணத்தைப் பற்றிச் சிலாகித்த வண்ணம் பின் தொடர்ந்தேன். பதிலே கூறாமல் வந்து கொண்டிருந்த அவன் வெகு நேரத்துக்குப் பின் என்னை நோக்கி ஒரு அலட்சியமான பார்வையை வீசினான். "இந்த ஆண்டிப் பயலுக்கு ஏனுங்க நகையும் நட்டும்! இது யாருடையதுன்னிறது தெரியா விட்டாலும், ஒரு சம்சாரி வீட்டுப் பொருள் என்பது தெரியாதுங்களா! ஏதோ, இந்தப் பூமியிலே இருக்கிற வரைக்கும் நாணயமாக இருந்து விட்டுப் போகணும். நான் சாவதற்குள்ளாக உடைமைக்காரங்களைக் கண்டு பிடிக்கணுமென்னு கவலைப்பட்டுக்கிட்டு இருந்தேன். இன்றுதான் முடிந்தது. எனக்கும் பளு நீங்கி, திருப்தியாப் போச்சு!" என்று மகிழ்ச்சியுடன் கூறி முடித்தான்.

நாங்கள் ஸ்டேஷனை யடைந்ததும், முடிவாக, "வேலப்பா! எல்லாமிருக்க, அந்த இரத்த வெறி பிடிச்ச வேலமரத்துப் பேய், அங்கே இருக்கிறதனால்தானே உன்னால் இதை வைத்துக் காப்பாற்ற முடிந்தது! நீ அதற்குப் பூசை செய்ய வேண்டியது அவசியம்தான்!" என்றேன்.

அடுத்த கணம் வேலப்பன் 'கலகல'வென்று வாய் விட்டு நகைத்து விட்டு, "என்னுங்க, நீங்களும் நம்பறீங்களா! அதெல்லாம் பேயாவது, பிசாசாவதுங்க! இந்தப் பாழும் சனத்துக்குப் பேய் பயம் உண்டாக்காட்டிப் போனால், அந்த அழகான குளத்தையும், மரத்தையும் இப்படியா உட்டுட்டு இருக்கும்! நானும்தான் இந்த ஆறு வருசமா எப்படிங்க நிம்மதியா இருக்க முடியும்! ஓங்ககையிலே இருக்கிற பெட்டிதான் எல்லாம்!" என்றான். அப்பொழுது அவனது முகத்தில் பெரிய கற்பனைக் கவிஞனின் வெற்றி ஒளி வீசிற்று!



வாட்டர்பரீஸ் காம்பவுண்ட்

உங்களுக்கு ஜீவாதார வீரியத்தை...

துரிதமாக அளிக்கிறது!




வாழ்நாளில் ஏற்படும் சகல இடையூறுகளையும் தவிர்க்கத் தயாராயிருங்கள்! வாட்டர்பரீஸ் காம்பவுண்டை உட்கொண்டு செளக்யமாயிருங்கள்...நல்ல யோசனை சக்தியைப் பெறுங்கள்...நன்ருக வேலை செய்யுங்கள்...நல்ல தோற்றத்தைப்பெறுங்கள்!

தினசரி அதிகப்படி ஆகாரமாக நாவிற்கினிய வாட்டர்பரீஸ் காம்பவுண்டை உட்கொள்ளுங்கள்....தினசரி வாழ்க்கைக்குத் தேவையான ஜீவாதார வீரியத்தைப் பெறுங்கள்!

வலிமை தரும் வாட்டர்பரீஸ் காம்பவுண்ட் ஓர் ருஜுவாக்கப்பட்ட ஆரோக்கிய டானிக். அது உங்களை சுறுசுறுப்புள்ளவர்களாகவும் கடின வேலைகளைச் செய்ய லாயக்குள்ளவர்களாகவும் செய்கிறது. தினசரி உட்கொண்டால், உங்கள் தேகத்துக்குத் தேவையான விசை வேகத்தை யளிக்கிறது. களைப்பு, இருமல், ஜலதோஷம் முதலியவைகளை எதிர்க்கும் வன்மையை அளிக்கிறது.

வாட்டர்பரீஸ் காம்பவுண்டை உட்கொண்டு புதிய மகிழ்வுறும் புருஷராயிருங்கள்...உங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் ஒரு ருஜுவான ஆரோக்கிய டானிக்காகும்



ஆரோக்கியத்தைத் தரும்

வாட்டர்பரீஸ் காம்பவுண்டை

உங்களை செளக்யமாக வைக்க உட்கொள்ளுங்கள்

272

பரிசுக் கதை



சட்டம் கொடுத்த தண்டனை

டி. எம். அப்துல்காதர்

“டம்டடாம், டம்டடாம், டம்டடாம்”

அந்தித் தொழுகைக்கு மசூதியில் நகரா தட்டியாய் விட்டது. மினராவில் கூடியிருந்த புறாக் கூட்டம் இந்தத் திடீர் முழக்கத்தைக் கேட்டுக் கலைந்து சிதறி யோடியது.

“மூ அத்தினி”ன் குரல் கம்பீரமாக ஒலித்தது. “அல்லாஹ் பெரியவன், அல்லாஹ் பெரியவன், அவனைத் தொழ எல்லோரும் வாருங்கள்.”

இவ்வாறு அவர் உரத்த குரலில் கூவினார்.” அவருடைய சங்கீத லயம் நிறைந்த அழைப்பு எல்லோருக்கும் கேட்டது போல் அவனுக்கும் கேட்டது. அவன்தான் அதோ வருகிறானே ரஹீம்......... கருத்து வளர்ந்து தொங்கும் பரந்த தாடி, அலட்சியமாய்க் கவனிக்காது விடப்பட்டிருக்கும் பரட்டைத் தலை, கட்கத்திலே யோகத் தண்டு, தோளில் ஒரு துணிப் பை, அதிலிருந்து வெளியே துருத்திக்கொண்டிருக்கும் திருவோடு!

இந்தக் கோலங்களோடு அதோ வேகமாக நடந்து வருகிறானே அந்த யௌவன பக்கீர்தான் ரஹீம். அவனுக்கு என்ன நேரிட்டு விட்டது, இந்த இளம் வயதிலே இப்படி சந்நியாசியாய்ப் போக! அவனுடைய நடையிலே ஏன்தான் இந்தப் பரபரப்பு! இருக்காதா பின்னே! பத்து வருஷங்களுக்கு முன் அவன் பிரிந்து சென்ற தாயகமல்லவா இந்த ஊர்! மூளையில் குழப்பம், உள்ளத்தில் வேதனை, கண்ணிலே நீர். இந்த நிலையில் பொறுக்க முடியாத துன்பச் சுமையோடு எந்த ஊரை விட்டு இவ்வுலகிலே ஓடி மறைந்தானோ, அந்தப் புண்ணிய பூமியல்லவா இது!

இங்கேதான் அவன் பிறந்தான், வளர்ந்தான், பெற்றோருக்கு அருமையாக! வளமான வாலிபப் பருவத்தில் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டு இன்பம் துய்த்ததும் இந்த ஊரில்தான். ஓடிப் பிரிந்து மறையும் வரைக்கும் ஊட்டி வளர்த்த மாத்ரு பூமியில் பத்து வருஷங்களுக்குப் பின் மறுபடியும் அடியெடுத்து வைக்கப் போகிறான்!

அவனுடைய மனத்திலே இப்பொழுது இன்ப துன்ப உணர்ச்சிகள் எதுவுமில்லை. “இருக்கும் இடம் தேடி என் பசிக்கே அன்னம், உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன்” என்று சொல்லக்கூடிய எல்லாம் துறந்த நல்லவன் அவன்.

ஆனால் அவனுக்கும் ஒரு சிறு ஆவல்! அது மட்டும் நிறைவேறி விட்டால்......! இந்த ஊரையே அவன் இனிமேல் திரும்பிப் பார்க்க மாட்டான்! ஏன், இந்த உலகத்தையேகூட விரும்ப மாட்டான்! அவன் ஆர்வத்தோடு ஓடி வந்ததற்கு இதுதான் காரணம்!

எல்லோரையும் போல் அவன் தொழுகையை நடத்தப் பள்ளி வாசலுக்குச் செல்லவில்லை. ஊருக்கு ஒதுக்குப் புறமான ஒரு மரத்தடியில் நிஷ்களங்கமான உள்ளத்தோடு துண்டை விரித்துத்

தொழுகையை முடித்தான். இரவு வரட்டும் என்ற எண்ணத்தோடு மரத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த மண்மேடையில் களைப்புத் தீரச் சாய்ந்து உட்கார்ந்தான். கண்கள் தாமாக மூடிக் கொண்டன. மனக்குதிரை பத்து வருஷங்களுக்கு முந்திய பாதையிலே திரும்பி ஓடியது.

• • •

ரஹீம் அப்படி யொன்றும் பெரிய பணக்காரனில்லை. அதற்காக அவனை ஏழையென்றும் சொல்லிவிட முடியாது. சுமாரான சொத்து. போதுமான அளவு வருவாய். இதைக் கொண்டு அவன் சௌகரியமாகவே வாழ முடியும். பெற்றோருக்கு ஒரே பிள்ளை. வளர்ந்து வாலிபனாகி வியாபாரத்தில் ஈடுபட்டு வருவாயும் தேட ஆரம்பித்திருந்த சமயத்தில், தங்கள் கண்ணான மகனுக்குக் கல்யாணத்தை முடித்துவிட அவனுடைய பெற்றோர் தீவிர முயற்சி செய்தனர். தன் மகனுக்கு வரும் பெண் ஒரு லக்ஷாதிபதியின் மகளாயிருக்க வேண்டும் என்பது அவன் தந்தையின் எண்ணம். ஒரு அழகு ரம்பையைத் தன் மருமகளாகப் பெற்றுப் பெருமையடைய வேண்டும் என்பது அவன் தாயாரின் ஒரே நோக்கம். இந்தப் போட்டியிலே சினிமா 'புரொஜெக்டரி'ல் அகப்பட்ட பிலிம் சுருளைப் போல் பெண் பார்க்கும் படலம் சுழன்றோடியது. இந்த "உள் நாட்டுப் போரில்" இரண்டு மூன்று வருஷங்கள் வந்த சுவடு தெரியாமல் எப்படியோ வெகு வேகமாக ஓடி மறைந்து விட்டன.

இதன் பிறகு எல்லோரும் மகிழ சுலேஹா ரஹீமின் வாழ்க்கைத் துணைவியாவதற்கு வெகு நாள் ஆக வில்லை. "மனம் போல் மாங்கல்யம்" என்பது அந்த இளந் தம்பதிகள் இருவருக்குமே பொருந்தும். அவ்வளவு பொருத்தமாக இருந்தது ஜோடி. இந்நிலையில் இல்லற வாழ்வு இனிக்கத்தானே செய்யும்!

ஆனால், ரஹீமின் பெற்றோர் இதை ரசித்ததாகத் தெரியவில்லை. கல்யாணம் முடிந்து விட்டது. காலமும் கடந்து கொண்டிருந்தது. இனி, அவர்களுக்கு வேண்டியதெல்லாம் கையில் ஒரு குழந்தை. "காசை அள்ளி வீசி விலைக்கு வாங்கி விடக் கூடிய சாமானா? கடவுள் கண்ணைத் திறந்து பார்க்கட்டும்" என்று அமைதியோடு கொஞ்ச நாட்களைத் தள்ளிப் பார்த்தனர். ஆசை அணை நிரம்பிப் பொங்கி வழிந்தது!

"இந்தப் பிரச்னைக்கு ஒரு முடிவே கிடையாதா!" என்று அந்த இரு கிழ உள்ளங்களும் ஏங்கின.

இந்த ஏக்கம் தீராமலே அவர்கள் ஒருவர் பின் ஒருவராகக் காலஞ் சென்று போனது ரஹீமுக்குப் பெரிய வேதனையாக இருந்தது. வேதனை அதன் அளவில் நிற்காமல் விரிந்து, விரிந்து வேறொரு உணர்ச்சியாக, — வெறுப்பு, விரோதம், விரக்தி ஆகியவை கலந்த விளக்கம் கூற முடியாத ஒரு விநோதமான கொந்தளிப்பாக, மாறுவதற்கு அவனுடைய பெற்றோர் இறக்கும் தறுவாயில் கூறிய சில வார்த்தைகள் பெரிதும் உதவியாயிருந்தன.

"ரஹீம்......நான் சாகப் போகிறேன்......... எனக்கு வாழ்க்கையிலே ஒரு குறைவுமில்லை...ஒரே ஒரு ஆசை, அதுவும் நிராசையாகப் போய்விட்டது. உனக்கு ஒரு மகன் பிறந்து அவனோடு கொஞ்சி விளையாட நான் கொடுத்து வைக்கவில்லை. அதுதான் எனக்குத் தீராத பெருங்குறை. நான் இறந்த பிறகும் என் ஆன்மா இதைப் பற்றித்தான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும். என்று உனக்கு ஒரு மகன் பிறந்து அவன் கையால் என் ஆவி சாந்தியடையும் பொருட்டுத் தூபமிடுகிறானோ அன்றுதான் என் தாகம் அடங்கும், சாந்தி யுண்டாகும், அது வரைக்கும் எனக்கு அமைதி கிடையாது."



இவ்வாறு அவனுடைய பெற்றோர் அந்திய காலத்தில் சொல்லி வைத்தாற் போல் தங்கள் தாபத்தைக் கொட்டியளந்து விட்டுக் கண்ணை மூடினர். இது அடிக்கடி அவன் ஞாபகத்துக்கு வந்து அலைக்கழித்தது. அன்று போலவே இன்று வரையும் ஒண்டிக் கட்டையாய் நின்று கொண்டிருந்த அப்பாவி சுலேஹா இதன் பலனை அனுபவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நாளாக ஆக அவளிடம் ரஹீமுக்கு ஒரு அர்த்த மில்லாத வெறுப்பு, அவசிய மில்லாத விரோதம், அலட்சிய மனப்பான்மை உண்டாயின. இவற்றை அஸ்திவாரமாகக் கொண்டு சில்லறைத் தகராறுகள், சீற்றங்கள், சிறு சிறு பூசல்கள் ஏற்பட்டு அவிழ்க்க முடியாத ஒரு பெரிய சிக்கல் அவர்களுக்கு மத்தியில் உண்டாயிற்று. அதாவது முன்பு இனித்த இல்லற வாழ்க்கை இப்போது கசந்தது.

ரஹீமின் நடத்தையில் இதன் காரணமாக ஒரு பெரிய மாறுதல் சீக்கிரமே தென்பட்டது. அவன் இப்போது கலை

ஹாவோடு அதிகம் பேசுவதில்லை. ஏன், பேசுவதை அடியோடு நிறுத்திவிடக் கூட முயன்றான். அவன் போக்கு ஒரு விளங்காத விடுகதையாக, புரியாத புதிராக ஸலேஹாவுக்குத் தோன்றியது. தாங்க முடியாத வேதனை யொன்று தன்னைத் தாக்குவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது என்பதைக் கண்டு ஸலேஹா துடிதுடித்துப் போனாள். ஆத்திரம், அழுகை எல்லாவற்றையும் அடக்க முடியாமல் அடக்கிக் கொண்டு நிக்கு முக்காடினாள். பல்லைக் கடித்துக் கொண்டு எல்லாவற்றையும் அமைதியோடு பொறுத்துக் கொள்வதைத் தவிர அவளால் வேறென்ன செய்ய முடியும்!



*   *   *

ரஹீம் தன் இரண்டாம் கலியாணத்துக்குப் பெண் பார்க்கும் வேலையில் முழுமூச்சோடு இறங்கினான். இது காற்று வாக்கில் ஸலேஹாவின் காதில் விழுந்தது. இப்பொழுதும் அவள் ஆத்திரப் பட்டு எதையும் நிதானமிழந்து செய்து விடவில்லை. அமைதியாகவே இருந்தாள். மிஞ்சினால் இரண்டு சொட்டுக் கண்ணீரோடு நிறுத்திக் கொண்டாள். முதல் மனைவியின் தலையீடு இல்லாமலிருந்தது ரஹீமுக்கு எவ்வளவோ சௌகரியமா யிருந்தது.

அவன் தன் முயற்சியில் வெற்றி அடையாமல் போகவில்லை. அடுத்த வீட்டு அல்லாப் பிச்சை ராவுத்தருக்கு ஒரு மகள். பெயர் ஹமிதா. ஏழை தான். ஆனாலும் எழில் மிக்க யுவதி. வருந்தி உழைப்பதால் வளமாக வளர்ந்திருந்த வண்ணச் சிலை! ஆரோக்கியம் நிறைந்த அழகு ஓவியம்! அவளை மணந்து கொள்ள ரஹீம் திட்டமிட்டான். அல்லாப்பிச்சை ராவுத்தரின் சம்மதம், கேட்பதற்கு முன்னே கிடைத்து விட்டது! இன்ன கிழமை இன்ன நேரத்தில் கல்யாணத்தை முடித்து விடுவதென்று இரு தரப்பாரும் தீர்மானம் செய்து கொண்டாயிற்று.

ஸலேஹாவால் இதைப் பொறுக்கவே முடியவில்லை. "இந்த வீட்டில் அவருடைய மனைவியாய் எவளும் நுழைய இடம் கொடுக்க மாட்டேன்" என்று ஆர்ப்பரித்தெழுந்தாள். இதைத் தவறு என்று சொல்லிவிட முடியுமா! சட்டம் இருக்கிறது ஒரு பக்கம். தகுதியும் சக்தியும் உள்ளவன் இன்னும் இரண்டு பெண்களை இழுத்துப் போட்டுக் கொள்வதற்குக்கூட இடமிருக்கிறது சட்டத்திலே. ரஹீம் தகுதி யுள்ளவன் தான்! சக்தியும் உள்ளவன்தான். அதற்காக ஸலேஹா நினைத்தது தவறு என்று சொல்லிவிட முடியுமா! நினைத்ததோடு அவள் நிற்க வில்லை. நீண்ட நாள் பேசாதிருந்த தன் கணவனிடம் நேருக்கு நேராகக் கேட்டு விட்டாள். வைத்த பாலைக் கூடக் குடிக்காமல் அவன் வராந்தாவில் படுக்கையை விரிக்கப் போன சமயத்தில் ஸலேஹா வழி மறித்துக் கொண்டாள்.

"ஏன் என்னிடம் இப்படிப் பராமுகமா யிருக்கிறீர்கள்!" என்று கேட்டாள்.

"எல்லாம் காரியமாகத்தான்!"

"காரண மில்லாமல் அப்படி என்ன காரியம் வந்து விட்டது!"

"உன்னையே நீ கேட்டுக் கொள்!"

"நான் பெண்! நாலு பேர் என்னைப் பார்த்துச் சிரிக்க மாட்டார்களா! நான் உங்களுக்கு என்ன அபராதம் செய்தேன்!"

"நீ பெண்ணென்று இப்பொழுது சொல்லித் தான் தெரிந்து கொண்டேன்."

இப்படிச் சொல்லி விட்டு ரஹீம் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"என் மனத்தைப் புண்படுத்தாதீர்கள், அத்தான்! என் அன்பின் மீது ஆணை! எல்லாம் வல்ல அல்லாவின் மீது ஆணை! நான் இருக்கும் வரை நீங்கள் வேறு கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது!" இவ்வாறு சொல்லி விட்டு அந்த அப்பாவிப் பெண் அடுப்பங்கரைக்குள் புகுந்து கொண்டாள். அங்கிருந்து விம்மல் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

"ஆணையிட்டு விட்டாளே! அல்லாவின் பெயரைச் சொல்லித் தடுக்கிறாளே! அவள் இருக்கும் வரை வேறு கல்யாணம் செய்து கொள்ளக் கூடாதாம். என் இலட்சிய வாழ்வுக்குக் குறுக்கே நிற்கிறாள், எமனைப் போல்! இவளைத் தொலைத்து விட்டுத்தான் மறு காரியம்!" என்று எண்ணங்கள் ஓடின அவன் உள்ளத்திலே.

இரவு முழுவதும் அடுப்பங்கரைக் குள்ளேயே அடைந்து கிடந்த ஸலேஹா, இடிபாடுகளுக்கிடையிலிருந்து மீண்டு வரும் பிரேத மனிதனைப் போல் வெளியில் வந்தாள். வராந்தாவில் ரஹீமைக் காணோம். மௌனமாக அவள் வீட்டு வேலைகளில் ஈடுபட்டாள். நடக்கப் போகும் சங்கதியை அறிந்திருந்தால் அவள் இப்படி மௌனமாக இருந்திருக்க முடியுமா!

அன்று முழுவதும் ரஹீம் வீட்டுக்கு வரவில்லை. அதற்கு மறுநாளும் வரவில்லை. "எங்கே போய் விட்டாரோ!" என்று சுலைஹா கவலைப்பட்டுக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்த மூன்றாம் நாள் காலை சுமார் பத்து மணி!

திடும்பிரவேசமாய் ஒரு சிறு பெண்கள் கூட்டம் தன் வீட்டில் நுழைந்ததைக் கண்டு அவள் திடுக்கிட்டுப் போனாள். "என்னம்மா விஷயம்!" என்று அவள் கேட்பதற்கு முன்னமேயே அழுகையும் ஆரவாரமும் அங்கு நடபுடல் பட்டன. சுலைஹாவின் தாய் வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டு 'குய்யோ முறையோ' என்று பலமாகக் கத்தினாள்.

"என்ன அம்மா நேர்ந்து விட்டது!" என்று சுலைஹா அடக்க முடியாத துயரத்தோடு அன்னையின் கழுத்தைக் கட்டிக் கொண்டு கேட்டாள்.

இதற்குள் கூடியிருந்த பெண்களில் ஒருத்தி சுலைஹாவைத் தனியே அழைத்துக்கொண்டு போய், "ஐயோ, சுலைஹா! அவர் உன்னை "தலாக்" சொல்லி விட்டாராமே. அவர் இஷ்டத்துக்கு நீ ஏன் குறுக்கே நின்றாய்! தள்ளி வைத்து விட்டாராமே!" என்று அழுதுகொண்டே கூறினாள்.

"சுலைஹாவுக்கு உலகம் படீரென வெடித்துச் சிதறியது போன்ற பிரமை ஏற்பட்டது. "தலாக்! விவாஹ ரத்து! தள்ளி வைத்து விட்டார்! அம்மா!" — இப்படிக் கூச்சலிட்டுக் கொண்டே சுலைஹா அடியற்ற மரம்போல் சாய்ந்து விழுந்தாள். கூட்டமும் குழப்பமும் அதிகமாயின.

இத்தனை காலமும்தான் உரிமையோடு உலவித் திரிந்த வீட்டை சுலைஹா உதறித் தள்ளிவிட்டு வெளியேறப் போகிறாள்! அவள் அப்படிச் செய்துதான் தீரவேண்டும்! சட்டம் அப்படித் தீர்ப்புக் கூறி விட்டது!

தாரை தாரையாய்க் கண்ணீர் வடிய, தான் இன்ப வாழ்வு வாழ்ந்த வீட்டை ஒரு முறை ஏறிட்டு நோக்கினாள். அடி வயிறு பற்றி எரிந்தது. தொழுவத்தில் கட்டப்பட்டிருந்த பசு "அம்மா" என்று கதறியது. சுலைஹா பிரியா விடைபெற்றுப் பிரிந்தாள்.

* * *

ரஹீமுக்கு வந்த புது மனைவி ஹமிதா அன்பையும் ஆசையையும் அள்ளிச் சொரிந்து அவனை இன்பலோகத்தில் சஞ்சரிக்கச் செய்தாள். வாழ்க்கைப் பாதையின் புதுத் திருப்பத்திலே ரஹீம் தன் இளம் மனைவியோடு உல்லாசமாகக் கை கோத்து முன்னேறினான்.

சுலைஹாவின் நிலைமை இதற்கு நேர் எதிரிடை! பல காலம் இதை எண்ணி எண்ணி அவள் பாகாய் உருகினாள்; கண்ணீர் வடித்தாள்.

இதே நிலைமை ஒரு ஆணுக்கு ஏற்பட்டால் சம்பவங்கள் எப்படியெல்லாம் மாறும் என்பதைத் தத்ரூபமாகச் சித்திரித்துக் காட்டக்கூடிய சம்பவம் ஒன்று சீக்கிரமே நிகழ்ந்து விட்டது. இப்படிப்பட்ட மகத்தான நஷ்டம் ஒன்று தன் வாழ்க்கையில் நேரப் போகிறது என்பதை ரஹீம் எதிர்பார்க்கவில்லை. இல்லற வாழ்க்கையில் இரண்டாவது தடவையாக விழுந்த இடி அது!

ஹமிதா இறந்து போய் விட்டாள்! கைக் குழந்தையை அவனிடம் ஒப்படைத்து விட்டுக் கண்ணை மூடி விட்டாள் அந்தப் புண்ணியவதி! "எந்தக் குழந்தை வேண்டும் என்று இத்தனை காலம் தவமிருந்தேனோ, எந்தக் குழந்தையை அடைவதற்காகப் பாவ புண்ணியங்களை மறந்து பச்சைத் துரோகம் செய்யத் துணிந்தேனோ, அந்தக் குழந்தை இதோ அமைதியாய்த் தூங்குகிறது. ஆனால் அதை ஊட்டி வளர்க்க அன்னையில்லை! உச்சி முகர்ந்து கொஞ்சிக் குலவ ஒருவரும் இல்லை! என் துன்பச் சுமையில் பங்கு கொள்ள யாருமே இல்லை. உலகம் அஸ்தமித்துப் போய் விட்டது. அதன் ஒவ்வொரு மூலை முடுக்கிலும் அந்தகாரம் பரவி விட்டது. இனி அது அழிந்து விடும்! அழிந்துவிட வேண்டும்!"

இவ்வாறு அவன் பைத்தியக்காரனைப் போல் ஏதேதோ எண்ணிக் கையில் தூங்கும் குழந்தையின் மேல் தாரை தாரையாய்க் கண்ணீர் சிந்த, பரந்து கிடக்கும் உலகத்தை வெறிக்கப் பார்த்துக் கொண்டு நின்றான்.

இதற்கிடையில் சுலைஹாவின் தந்தை தன் மகளை இந்த இளம் வயதிலேயே விதவைக் கோலத்தோடு காண விரும்பாமல் வேறு ஆயத்தங்கள் செய்ய ஆரம்பித்தார். இதைப் பற்றி யாரிடமும் அவர் யோசனை கேட்கவில்லை. ஏன், சுலைஹாவைக் கூட கேட்கவில்லை. அவர் போக்கில் காரியங்களை நடத்திக் கொண்டு போனார். கல்யாணத்துக்குக் கணக்காக ஒரு வாரம் இருக்கும் போதுதான் விஷயம் வெளிக்கு வந்தது.

உள்ளூரிலேயே ஒரு நல்லவனைத் தேடிப் பிடிப்பது அவருக்கு அப்படியொன்றும் சிரமமாகத் தெரியவில்லை. வரனுக்கு வயது நாற்பது. வாட்ட சாட்டமாகத்தான் இருந்தார். நாலடுக்கு மாடி வீடு. லட்சத்துக்குக் குறைவில்லை சொத்து. கௌரவமான குடும்பம்! கசக்குமா என்ன! ஆனால் சுலைஹா இதை அடியோடு விரும்பவில்லை.

"எனக்கேனம்மா இன்னும் ஒரு கல்யாணம்! கல்யாணம் செய்து கொண்டு நான் கண்டெடுத்த செப்பு போதாதா! இன்னும் ஒருவருக்கு வாழ்க்கைப் பட்டு இருக்கும் கௌரவத்தையும் குறைத்துக் கொள்ள வேண்டுமா! அவரே என்னை அடித்துத் துரத்தி விட்டாரே! அவரைவிட நல்லவர் யார் இருக்கப் போகிறார்கள்!" என்று அம்மாவிடம் கண்டிப்பாகக் கூறிப் பார்த்தாள். ஆனால் ஆத்திரத்தால் குமுறிக் கொண்டிருந்த அந்தப் பெற்றோர் அவளுடைய பேச்சு எதையும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. காரியங்கள் துரிதமாக நடந்தேறிக் கொண்டிருந்தன.

ரஹீமுக்கு இந்த விஷயம் எப்படியோ தெரிந்து போய் விட்டது.

"சுலைஹாவுக்குக் கல்யாணமா!...... என் சுலைஹாவுக்கு இன்னொருவர் கணவனா!" என்று பதறித் துடித்தான். விழுந்தடித்துக் கொண்டு ஆலிமின் வீட்டுக்கு ஓடினான். ஆலிம் என்பவர் இஸ்லாமிய சட்ட நிபுணர்—மத குரு! ரஹீம் அடக்கத்தோடு சிறிது தூரமாகவே நின்று கொண்டு இஸ்லாமிய முறைப்படி முகமன் கூறினான்.

"யாரப்பா நீ!" என்று கேட்டார்.

"அடுத்த தெரு அஹமது ராவுத்தரின் மகன் அப்துல் ரஹீம், உங்களைப் பார்க்கத்தான் வந்தேன்!" என்றான்.

"இப்படி உட்காரப்பா! என்ன வேண்டும் உனக்கு!"

ரஹீம் அடக்க ஒடுக்கத்தோடு உட்கார்ந்தான். அவர் அவனையே கண்கொட்டாமல் பார்த்தார். சுற்றி வளைத்துப் பேசிக்கொண்டிருக்காமல் அவன் நேரடியாக விஷயத்துக்கே வந்து விட்டான். "சென்ற வருஷம் ரம்ஸான் மாதத்தில் என் மனைவி சுலைஹாவை நான் 'தலாக்' சொல்லி விட்டேன்."

இதை அவன் சொன்னவுடனேயே அவர் அருவருப்போடு முகத்தைச் சுளித்தார். ரஹீமுக்கு இருந்த அவசரத்தில் இதை யெல்லாம் அவனால் கவனிக்க முடியவில்லை. மேலும் மேலும்



அஜீரணம் வாழ்வையே துன்பமயமாக்கி விடுகிறது; வயதுக்கு மிஞ்சிய வயோதிகத் தோற்றமும் உண்டாக்கிவிடுகிறது. மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் துரிதமான நிவாரணம் தருகிறது. ஏனெனில் அது ஒரு அபூர்வச் சிறப்புடைய பௌடர்; சாஸ்திரீகமான தயாரிப்புத் திட்டப்படி பக்குவமான பொருட்சேர்க்கையுள்ள இந்தப் பௌடர் மூன்று வேலைகள் செய்கிறது—மிருதுவான இரைப்பைக்குச் சமனமூட்டுகிறது; வயிற்றுப் புளிப்பை மாற்றுகிறது; வலியையும் நிறுத்துகிறது.

மக்ளீன் பிராண்ட் ஸ்டமக் பௌடர் என்று பெயரைச் சொல்லிக் கேளுங்கள். ஒவ்வொரு பாக்கெட்டிலும் Alex C. Maclean "அலெக்ஸ் ஸி. மக்ளீன்" என்ற உண்மைக் கையெழுத்தும் தத்ரூபமாக அச்சிடப் பட்டுள்ளதா என்று நிச்சயப் படுத்திக் கொள்ளுங்கள்.



மக்ளீன்

பிராண்ட் ஸ்டமக் பவுடர்

எப்பொழுதும் கையில் ஒரு பாட்டில் வைத்திருங்கள்.

ஒரு டோஸ்

அஜீரணத்தாலேற்படும் வயிற்று வலி, உடற்பருமன், இருதய எரிச்சல், வயிற்று மந்தம், வாந்தி இவற்றை சடுதியில் குணப்படுத்தும்.

MSY. 9-TAM


சூப்பர்
இந்தியா
டயர்களையே
கேட்டு
வாங்குங்கள்
"டயர்களில் மிகச் சிறந்தவை"

ஏதேதோ கூறிக் கொண்டு போனான். ஆலிம் அமைதியாக இடைமறித்துக் கேட்டார்.

"யார் அந்தப் பெண்! சுப்ஹானுடைய மகள் சுலைஹாவா!"

"ஆமாம் மௌலானா! சென்ற ரம்லான் மாதத்தில் நான் அவளைத் 'தலாக்' சொல்லி விட்டேன். அதன்பிறகு அல்லாப்பிச்சை ராவுத்தரின் மகள் ஹாஜிராவைக் கலியாணம் செய்து கொண்டேன். அவள் போன மாதம் 'மௌத்'தாகி விட்டாள். கையிலே ஒரு ஆண் குழந்தை. ரொம்பக் கஷ்டப்படுகிறேன் ஆலிம்சா. சுலைஹாவை நான் மறுபடியும் மணந்து கொள்ளலாமென்று நினைக்கிறேன்" என்றான் ரஹீம்.

அவன் கண்களில் நீர் துளித்தது.

ஆலிம் இலேசாகப் புன்னகை புரிந்தார்.

"நீ நினைக்கலாம் ரஹீம், சட்டம் அப்படி நினைக்க வில்லையே! பெண்கள் சந்தைச் சரக்கல்ல மகனே! வேண்டாமென்றால் 'தலாக்' சொல்வதும், வேண்டும் என்றிருந்தால் 'நிக்காஹ்' செய்வதும் இஸ்லாமிய சரித்திரத்திலேயே இல்லையப்பா! இதைப் பற்றி நீ நினைக்கவே கூடாது. தலாக் சொல்லுவதற்கு முன்பே இது பற்றி நீ எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். தவறி விட்டாய். சஞ்சலப்பட்டு இனிப் பயனில்லை."

இதைக் கேட்டதும் ரஹீமின் எண்ணக் கோட்டை அடியறச் சாய்ந்து விழுந்தது. பொங்கி வரும் துக்கத்தை அடக்கிக் கொண்டு அவன் ஆலிமிடம் கேட்டான்.

"அப்படியானால் நான் அவளை மீண்டும் அடைய முடியாதா ஆலிம்ஸா!"

"நிச்சயமாக முடியாது, ரஹீம்! வேறு ஒரு பெண்ணை நீ ஏன் கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது!"

"இல்லை ஆலிம்ஸா! சுலைஹாவைத் தவிர வேறு யாருமே எனக்குத் தேவையில்லை!"

"உன் தேவையின் அளவுக்குத் தக்கபடி விரிந்து சுருங்கும் ரப்பர் அல்ல சட்டம். நீ ஒரு ஸாலிஹான முஸ்லிமானால் சட்டத்தின் தீர்ப்புக்குக் கட்டுப்பட்டாக வேண்டும்!" இப்படிச் சொல்லி விட்டு அவர் மறுபடியும் தன் முன்னிருந்த வேத புத்தகத்தில் கண்களைப் பதித்துக் கொண்டார்.

"வேறு வழியே இல்லையா, ஆலிம்சா!" கண்ணீர் வடிய ரஹீம் மீண்டும் இப்படிக் கேட்டான்.

ஆலிம் இரண்டாவது தடவையாக ஒரு புன்னகையை உதிர்த்தார்.

"கலங்காதே மகனே! இருக்கிறது. சுலைஹா வேறு ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு அவனும் 'தலாக்' சொல்லப்பட்ட பிறகு வேண்டுமானால் நீ மணந்து கொள்ளலாம். வேறு வழியே கிடையாது! போய் வா, ரஹீம்!" மேலும் பேச இடம் கொடுக்காமல் ஆலிம் அவனை அனுப்பி வைத்து விட்டார். சட்டத்தின் சாட்டைச் சொடுக்கிலே ரஹீம் தடுமாறித் துடிதுடித்தான்.

அவனுடைய துன்பச் சுமையை இரட்டிப்பாக்கியது, விமரிசையாக நடந்தேறிய சுலைஹாவின் இரண்டாவது திருமணம்! அவள் மௌனமாகத் தன் இரண்டாவது திருமணத்தை ஏற்றுக் கொண்டாள். சந்தர்ப்பங்கள் போடும் தாளத்துக்கேற்ப உலக அரங்கிலே ஆடித் தீர்க்க வேண்டியது தன் கடமை என்று அவள் எண்ணினாள். கவனக் குறைவாகக் கையாண்டதால் கெட்டுப் போன சட்டிப்பானையைப் போலிருந்தது அவள் நிலைமை. தட்டிப் பார்த்தால் "கிண்" எனச் சத்தம் கேட்காது. எங்கேயோ கீறல் விழுந்திருப்பது போல் தெரியும். ஆனால் தண்ணீர் வைத்தால் ஒழுகவும் செய்யாது. இப்படிப்பட்ட நிலைமையில்தான் சுலைஹா தன் இரண்டாவது கணவனோடு இல்லற வாழ்வில் ஈடுபட்டாள். இரண்டு குழந்தைகளுக்கு அவள் தாயான பிறகும் இதே நிலைதான் நீடித்தது!

அவளுடைய இரண்டாவது கணவன் இபுருஹீம்ஷா இதிலெல்லாம் அதிக அக்கறை காட்டுவதில்லை. தான் உண்டு, தன் வியாபாரம் உண்டு என்று ஒதுங்கிப் போகக்கூடிய ஒருமாதிரி மனிதர் அவர். அப்படியிருக்கப் போய்த் தான் ரஹீமின் மகன் கபூர் அடிக்கடி தன் வீட்டுக்கு வருவது, சுலைஹா அவனிடம் அளவுக்கு மீறி அன்பு காட்டுவது, ஆகிய விஷயங்களைக் கண்டு ஆத்திரமடையாமல் அமைதியாயிருக்க அவரால் முடிந்தது.

ரஹீமின் மகன் கபூர் இப்பொழுது ஐந்து வயதுச் சிறுவனாக வளர்ந்து விட்டிருந்தான். தினம் தினம் தன் வீட்டு வாசல் வழியாகப் பள்ளிக்குச் செல்லும் அப் பாலகன் தன் மாஜி கணவனின் மகன்தான் என்பதை சுலைஹா எடுத்த எடுப்பிலேயே தெரிந்து கொண்டாள். அப்படி உரித்து வைத்தது போல் இருந்தது அவன் தோற்றம். அந்தச் சிறுவனிடம் அவளையும் அறியாமல் அமோகமான அன்பு அவளுக்கு உண்டாயிற்று.

இது ஆச்சரியம்தான்! "கபூர்!" என்று அழைக்கும்போது அவளுடைய குழையும் குரலில் அன்னையின் பாசம் பளிச்சிடும். "அம்மா" என்று வாய் நிறைய அவன் சொல்லும்போது சுலைஹாவின் உள்ளம் மகிழ்ச்சியால் பொங்கும். ஒவ்வொரு நாளும் பள்ளிக்குப் போகும்போதும் வரும்போதும் அவன் சுலைஹாவிடம் சொல்லாமலிருப்பதில்லை. அவனுக்காகக் காத்திருப்பது என்பது அவளுக்கு ஒரு வழக்கமாகவே போய் விட்டது.

ரஹீம் இதைத் தெரிந்து ரொம்ப சந்தோஷப்பட்டான். ஏதேதோ திட்டமிட்டு அது நிறைவேறும் காலம் வந்துவிட்டது என்ற மன மயக்கத்தில் பூரித்தான். ஆசை அளவுக்கு மீறி ஒரு அசாதாரணமான துணிச்சலை அவனுக்குக் கொடுத்தது. அவன் அப்படிச் செய்திருக்கக் கூடாதுதான்! தன்னால் தள்ளி வைக்கப்பட்டு இன்று வேறொருவரின் மனைவியாக யிருக்கும் ஒரு பெண்ணிடம் "மறுபடியும் என்னை மணந்து கொள்" என்று கேட்பது எவ்வளவு மடத்தனமான காரியம். ரஹீம் அப்படித்தான் செய்தான். கபூர் மூலமாக இச் செய்தியை சுலைஹாவின் காதில் போட்டு வைத்தான். கபூர் இதை அவளிடம் மழலை மொழியால் கூறியபோது சுலைஹா சிரித்தாள். பிறகு கண்ணீர் வடித்தாள்.

"காதலுக்காக வாழ்ந்த சுலைஹா காலஞ்சென்று போய் விட்டாள். இப்பொழுது கடமைக்காகவே நான் உயிர் வைத்துக் கொண்டிருக்கிறேன். உன்னைப் போல் பெண்கள் அத்தனை கல்லான இதயம் படைத்தவர்களில்லை" என்று செய்தி அனுப்பி வைத்தாள்.

இந்த சம்பவத்துக்குப் பிறகு கபூர் சுலைஹாவிடம் செல்வதை அடியோடு நிறுத்தி விட்டான். அப்படிச் செய்யும்படி ரஹீம் அவனுக்குக் கடுமையான உத்தரவு போட்டிருந்தான்.

சுலைஹா இதைக் கண்டு துடித்தாள். செய்வதறியாமல் திணறினாள். அவளால்தான் இந்த விஷயத்தில் எதுவும் பண்ண இயலாதே. நீண்ட நாள் இந்த நிலை நீடிக்கவில்லை. தற்செயலாகத் திடீரென்று கபூர் கடுமையான காய்ச்சலால் பீடிக்கப்பட்டான்.

யாருடைய விருப்பத்தையும் லட்சியம் செய்யாமல் சுலைஹாவின் துயரக் கண்ணீரைக் கூடப் பொருட் படுத்தாமல் கபூர், ரஹீமின் மகன், இத்

துன்பம் நிறைந்த உலகத்திலிருந்து விடை பெற்றுக் கொண்டான். ரஹீம் அலறினான், துடித்தான். அழுதழுது உருகினான். அவனை யார் தேற்றப் போகிறார்கள் !

கபூர் இறந்த நாற்பதாவது இரவு ! ரஹீம் கப்ரஸ்தான் (இடுகாடு) நோக்கிப் புறப்பட்டான். முன்போல் இப்பொழுது அவன் கண்களிலிருந்து கண்ணீர் சொட்டிக் கொண்டிருக்கவில்லை. அழுதழுது வற்றிப் போய் விட்ட காரணத்தாலோ, அல்லது துன்பம் அதன் எல்லையை மீறி விட்டதாலோ .வன் மௌனமாகக் கையில் பூத்தட்டுடன் நடந்து சென்றான்.

இருள் சூழ்ந்து கொண்டிருந்த சமயம் அது. இதோ இடுகாடு ! எங்கே கபூரின் புதைகுழி !

காவலாள் ஓடி வந்து கபூரின் புதைகுழியைக் காட்டினான். ரஹீம் அதிர்ச்சியால் ஸ்தம்பித்து நின்றான். அதன் மீது குவியல் குவியலாகப் புது மலர் கொட்டிக் கிடந்தது. அவனுக்கு முன்னேயே யாரோ வந்து அப்படிச் செய்து விட்டுப் போயிருக்கிறார்கள். ஒரு பக்கத்தில் ஊதுவர்த்தி கமழ்ந்து கொண்டிருந்தது. சந்தனம் தெளிக்கப்பட்ட கறை அந்த இருளிலும் பளிச்சென்று தெரிந்தது.

"எனக்கு முன் இங்கு வந்து இத்தனை பரிவோடு மரியாதை செய்தது யார் !" என்றான் ரஹீம்.

"அதுதான் இலட்சாதிபதி இப்ராஹிம்ஷா வீட்டம்மா கலைஹா ! கொஞ்சம் முன்னாலே வந்து விட்டுப் போனாங்க !" என்றான் காவலாள்.

சூரியனும் சந்திரனும் எதிர் எதிராய் ஓடி வந்து நடுவானத்தில் படீர் என மோதி வெடித்துச் சிதறின. நட்சத்திரங்கள் எல்லாம் பொல பொலவென உதிர்ந்தன. மேகத் திட்டுக்களெல்லாம் தீப் பற்றி எரிந்தன. வானமே இடிந்து விழுந்து நொறுங்கியது. இப்படியொரு உணர்ச்சி ஏற்பட்டது ரஹீமுக்கு! "கலைஹா, கலைஹா" என்று அவன் வாய் திரும்பத் திரும்ப முணுமுணுத்தது. வறண்டு போயிருந்த கண்களிலிருந்து மறுபடியும் நீர் கொட்டியது. ஆனால் அது கண்ணீரில்லை ! இரத்தம் ! கையிலிருந்த மலர்த் தட்டை வீசி எறிந்து விட்டு அவன் ஆவேசம் பிடித்தவன் போல் ஓடினான். இரவுக்கிரவே ஊரைவிட்டு ஓடி யாருக்கும் தெரியாமல் மறைந்து போனான். அவன் போகாத புண்ணிய ஸ்தலம் கிடையாது. தரிசிக்காத க்ஷேத்திரம் வேறு இல்லை.

* * *

தூங்கிக் கொண்டிருந்த ரஹீம் திடுக்கிட்டு விழித்தான். பத்து வருஷங்களுக்கு முந்திய பாதையிலே திரும்பி ஓடிக் கொண்டிருந்த மனக் குதிரை ஒரே பாய்ச்சலில் பழைய ஸ்தானத்தில் வந்து கம்பீரமாக நின்றது. பரபரப்போடு கழற்றி வைத்திருந்த துணிப்பையைத் தோளில் தூக்கி மாட்டிக் கொண்டு புறப்பட்டான்.

"கலைஹாவைக் காண வேண்டும், ஒருமுறை—ஒரே ஒரு முறை. அவள் அன்புத் திருமுகத்தை ஆசை தீரப் பார்க்க வேண்டும். அவள் கையால் கொஞ்சம் தண்ணீர் வாங்கி ஆவல் தீரக் குடிக்க வேண்டும். அதன் பிறகு......இந்த உயிரைப் பற்றி எனக்குக் கவலையேயில்லை." இப்படித் தன் பிரதிக்ஞையை ஒரு முறை நினைவுபடுத்திக் கொண்டு ரஹீம் அடியெடுத்து வைத்தான்.

தூரத்தில் ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது. இறந்து போய் விட்ட யாரோ ஒரு முஸ்லிமின் சடலத்தைப் பல்லக்கில் வைத்துச் சுமந்து கொண்டு அந்த கூட்டத்தினர் இவனைக் கடந்து சென்றனர். ரஹீம் மதக் கடமையை நிறைவேற்றும் பொருட்டு ஓடிப்போய் அந்தப் பிரேதப் பல்லக்கின் ஒரு மூலையில் தோள் கொடுத்துத் தாங்கினான். சுமந்து கொண்டே ரஹீம் தன் பக்கத்தில் நிற்பவரிடம் 'இறந்து போனது யார்' என்று கேட்டான்.

முணுமுணுத்துக் கொண்டிருந்த மந்திரத்தை இடையில் நிறுத்திவிட்டு அவர் ரஹீமை ஒரு முறை அலட்சியமாகப் பார்த்தார். பிறகு மெல்லிய குரலில் அவர் பதில் சொன்னார். "இறந்து போய் விட்டது ஒரு பெண்-பெயர், கலைஹா !"

ரஹீம் கிட்டத்தட்ட பிரேத நிலைக்கு வந்தான். "என் கலைஹா இறந்து போய் விட்டாளா ! என் இலட்சியம் சிதறிப் போய் விட்டதா !" என்று மனதிற்குள்ளேயே கூறிக் கொண்டு ரஹீம் துவண்டு விழுந்தான்.

பிரேதப் பல்லக்கு மெள்ள மெள்ள முன்னேறிக் கொண்டிருந்தது. ரஹீமின் கடைசி லட்சியமும் கருகி உதிர்ந்து விட்டது. சட்டமும் விதியும் சேர்ந்து செய்த சதியிலே ரஹீம் சரியாக மாட்டிக் கொண்டு கதறினான்.

"கலைஹாவை நான் பார்க்க முடியாதா ! ஒரு முறை அவள் முகத்தை நான் ஏறிட்டு நோக்க முடியாதா !" என்பதுதான் இப்பொழுது அவன் முன்னுள்ள ஒரே ஒரு பிரச்னை, உயிர்ப் பிரச்னை !

புதை குழியிலிட்ட பிறகு, கூடியிருப்போரின் கடைசி தரிசனத்துக்காக, இறந்து போனவரின் முகத்தைப் போர்த்தி யிருக்கும் துணியை விலக்கி ஒருமுறை திறந்து காட்டுவதுண்டு. இது அவனுக்கு ஞாபகம் வந்த மறு கணம் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு அவன் கபருஸ்தானை நோக்கி ஓடினான்.

நடக்க வேண்டிய கிரியைகளெல்லாம் முறைப்படி நடந்து முடிந்திருந்தன. கலைஹாவின் சடலம் மந்திர கோஷத்தோடு புதை குழிக்குள் இடப்பட்டது. முகம் திறக்கப்பட வேண்டிய கட்டம் வந்தது. ரஹீம் ஆவலோடு புதை குழிக்குள் எட்டிப் பார்த்தான்.

பாவம் ! அவனுடைய ஆவலை யாருமே லட்சியம் செய்யவில்லை. முகத்தைத் திறந்து காட்டாமலே கட்டையைப் பரப்பிக் குழியை மூடிவிட்டு அவர்கள் மௌனமாக வெளியேறினர். இறந்து போன பெண்களின் முகம் எந்த காரணத்தைக் கொண்டும் திறந்து காட்டப் படுவதில்லை என்பதை ரஹீம் மறந்து போய் விட்டான் போலும். சட்டம் அவனுக்குக் கடைசியாகக் கொடுத்த தண்டனை இது !

இதன் பிறகு அந்த ஊரிலே ஐந்தாறு தினங்கள் யாரோ ஒரு பைத்தியக்காரன் பின் கண்டவாறு புலம்பிக் கொண்டு திரிந்தான்.

"நான் மக்காவுக்குச் சென்றேன். மதினாவுக்குச் சென்றேன். அஜ்மீருக்குச் சென்றேன். ஆக்ராவுக்கும் சென்றேன். அங்கே ஷாஜஹானைக் கண்டேன். அவன் தாஜ்மஹாலில் உட்கார்ந்து மும்தாஜுக்காக அழுது கொண்டிருக்கிறான். எங்கள் கண்ணீரைத் துடைக்க யாருமே இல்லையா ! எங்கள் துன்பத்துக்கு எல்லையே கிடையாதா !" இதையே அவன் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டு திரிந்தான். பிறகு திடீரென்று ஒரு நாள் அவன் அந்த ஊரைவிட்டு எங்கேயோ ஓடி மறைந்து விட்டான்.

அதோ ஓடுகிறானே, அவன்தான் ரஹீம் ! நிற்காமல், நிலைக்காமல் சதா பரபரப்போடு பைத்தியக்காரனைப் போல் ஓடிக் கொண்டிருக்கிறானே அந்த யௌவனப் பக்கீர்தான் ரஹீம் !

சக்கரவர்த்தித்

51. சிறை வாசம்

சோகத்தாலும் துயரத்தாலும் வாட்டப்பட்ட சீதை தன் சிவந்து போன கண்களை நன்றாகத் திறந்து அரக்கன் முகத்தைத் தைரியமாகப் பார்த்துச் சொன்னாள் :

"நீசனே ! உன் பெயரையும் குலத்தையும் வீரப் பிரதாபங்களையும் என்னிடம் மிகக் கம்பீரமாகச் சொல்லிக் கொண்டு எவ்வளவு பெரிய சூரனாக நடந்து கொண்டாய்? வெட்கமில்லையா உனக்கு? பக்கத்தில் யாருமில்லாத சமயம் பார்த்து ஒரு ஸ்திரீயைத் தூக்கி ஓடும் சூரனே! எத்தனை பெரிய வீரன் நீ, ராமன் இல்லாத சமயம் பார்த்து வெட்கமில்லாமல் திருட்டு வேலை செய்தாய்!

"என்னைக் காப்பாற்றப் பார்த்த கிழப் பறவையைக் கொன்ற சூரனே, ஆசிரமத்தில் என்னவென்ன வீரமும் சாமர்த்தியமும் பேசினாய்? யுத்தம் செய்யத் தைரியமில்லாமல் திருட்டு வேலை செய்த உன் புகழை உலகம் என்றென்றும் புகழுமல்லவா? நீசனே! நீ பெருமையாகச் சொன்ன உன் குலத்துக்கு அவமானம் இழைத்தாய்!

"நீ என்ன சம்பாதிக்கப் போகிறாய், என்னை இப்படி எடுத்துக் கொண்டு வேகமாக ஓடிப் போய்? எத்தனை நாள் பிழைத்திருக்கப் போகிறாய்? வெகு சீக்கிரம் என் நாதனுடைய வில்லிலிருந்து பாயும் சரங்கள் உன் உடலில் புகுந்து உன் உயிரைத் தூக்கிப் போகின்றன. என் நாதன் பார்வையில் நீ சிக்கினால் போதும் அப்போதே நீ மாண்டாய்! தப்பிப் பிழைத்தாய் என்று எண்ணாதே! நிச்சயமாய் மாள்வாய். உன் அயோக்கியப் பிரயத்தனமெல்லாம் உனக்கு என்ன நன்மை தரப் போகிறது? ஒருநாளும் என்னை நீ அடைய மாட்டாய். உயிர் நீப்பேனே யொழிய உனக்கு வசப்படேன். என் நாதன் உன்னை விட மாட்டான். அவன் கோபத்தை சம்பாதித்த நீ பிழைக்க மாட்டாய். நிச்சயமாகக் கொல்லப் படுவாய். வெகு சீக்கிரமாகவே நரகத்தில் வைதரணி நதியைப் பார்க்கப் போகிறாய். பழுக்கக் காய்ச்சிய இரும்புப் பிரதிமை உனக்காகக் காத்திருக்கிறது. அதைத் தழுவிக் கொள்ளப் போகிறாய். இரும்பு முள்ளுகள் கொண்ட மரமும் உனக்காகவே நரகத்தில் இருக்கிறது. ஒரு முகூர்த்தத்தில் ஜனஸ்தானத்தில் உன்னுடைய பதினாலாயிரம் அரக்கர்களைத் தேரின்றி ஒருவனாக நின்று அழித்த என் ராமன் உன்னை விடப் போகிறானா? உனக்காகக் காத்திருக்கும் யமனிடம் உன்னைச் சீக்கிரம் ஒப்புவிப்பான்."

இவ்வாறு சீதை பலவிதமாக இகழ்ந்தும் தாக்கியும் எச்சரித்தும் சொன்னதை அரக்கன் காதில் போட்டுக் கொள்ளாமல் ஆகாய மார்க்கமாக லங்கை நோக்கி வில்லினின்று பாயும் அம்பைப் போலத் தேரின்றிப் பறந்தே விசையாகச் சென்றான்.

பல மலைகளையும் ஆறுகளையும் தாண்டிச் செல்லும்போது வழியில் ஒரு மலை மேல் யாரோ நிற்பதைக் கண்டாள் சீதை. அப்பொழுது மேலுத்திரியத்தை எடுத்துத் தன் ஆபரணங்களை அதில் முடித்துக் கீழே போட்டாள். ராமன் தன்னைத் தேடுவான்; தன்னை எடுத்துப் போன வழி அவனுக்குத் தெரிய வேண்டும் என்று இவ்வாறு செய்தாள். அழுது கொண்டிருந்த அவளைக் கீழே மலை மேலிருந்த வானரங்களும் பார்த்தன.

பம்பையைத் தாண்டிப் பிறகு கடலையும் ராவணன் கடந்து லங்காபுரி பிரவேசித்தான். துயரத்தால் துடித்துக் கொண்டிருந்த சீதையுடன் தன் அந்தப்புரம் அடைந்தான். ஒரு பெண்ணுருவம் கொண்டு தன் உயிரைக் குடிக்க வந்திருந்த அந்தகனை எடுத்துக் கொண்டு தன் அந்தப்புரம் புகுந்தான். 'சீதையை அடைந்து விட்டேன்' என்று மூர்க்கன் எண்ணினான்.

உடனே பிசாசுகளைப் போன்ற சில கோர ராக்ஷசிகளைக் கூப்பிட்டு, "இவளை

திருமகன்



நீங்கள் வெகு ஜாக்கிரதையாகக் காவலிருந்து பார்த்துக் கொள்ள வேண்டும்" என்று ஆணையிட்டான்.

"என் உத்தரவு இன்றி ஆணுவது பெண்ணுவது எவரேனும் இவளிருக்குமிடம் அண்ட விடாதீர்கள்!" என்று கண்டிப்பாக உத்தரவு செய்தான்.

"இவள் என்ன இச்சித்தாலும் வஸ்திரமோ, பொன்னோ, மணியோ, எதுவாயினும் அவளுக்குக் கொடுத்து சந்தோஷப் படுத்த வேண்டும். எனக்குச் செய்யும் பணிவிடையும் மரியாதையும் இவளுக்கு நடக்க வேண்டும்" என்று உத்தரவிட்டான்.

"யாராவது அவள் மனம் துன்புறும் பேச்சுப் பேசினுல் கொன்று விடுவேன். தெரிந்தோ தெரியாமலோ அவளுக்குக் கோபமோ கஷ்டமோ உண்டாகும் பேச்சு யாரும் பேசக் கூடாது. ஜாக்கிரதை!" என்று எச்சரித்தான்.

சீதையை அந்தப்புரத்தில் ஒரு இடத்தில் இறக்கிவிட்டு இனி என்ன செய்ய வேண்டியது என்று யோசிக்கலானுன். சாமர்த்தியமான சாரர்களை அழைத்து உத்தரவிட்டான். "நீங்கள் உடனே கரன் இருந்த ஜனஸ்தானம் போய் அங்கே பயப்படாமல் ராமன் என்ன செய்து வருகிறுன் என்பதை நன்றுகக் கவனித்து வரவேண்டும். அந்த ராமன் இருக்கும் வரையில் எனக்குத் தூக்கம் வராது! அவன் எனக்குப் பெரிய சத்துரு. அவன் எப்படியாவது சாக வேண்டும். நீங்கள் போய்த் தைரியமாக உங்கள் வேலையைச் செய்ய வேண்டியது" என்று உத்தர விட்டான்.

• • •

ராஜாஜி

கடலால் சூழப்பட்ட ஒரு கோட்டைக்குக் கொண்டு வரப் பட்டு எவ்வளவு தூரத்தில் தான் சிறை கிடக்கிறுள் என்பதை சீதை உடனே அறிய வில்லை. தன்னுடைய நாதனுன வீரன் உடனே வந்து ராவணனைக் கொன்று மீட்பான் என்றே எதிர்பார்த்தாள். ஆனபடியால் மிகவும் துன்பப்பட்டவளாயினும், தன்னுடைய சித்தத்தைத் திடம் பண்ணிக் கொண்டு, தன் நாதனுடைய வீரத்தையும் சாமர்த்தியத்தையும் பூரணமாக நம்பித் தைரியமாகவே இருந்தாள். அரக்கன் தன்னண்டை மிருகத்தனமாக நடந்து கொள்ளவில்லை யென்பதையும் கண்டு ஒருவாறு ஆறுதல் அடைந்தாள்.

சாரர்களை ஜனஸ்தானத்துக்கு அனுப்பிவிட்டு, ராவணன் சீதை இருந்த அந்தப்புரம் பிரவேசித்தான். அவள் சோகத்தில் மூழ்கிக் கண்ணீர் நிறைந்த கண்களோடு இருப்பதைக் கண்டான். ராக்ஷசிகள் தங்கள் காவல் வேலையைச் சரியாகச் செய்து வருவதையும் பார்த்தான். சரி, தன் செல்வத்தையும் அந்தஸ்தையும் அவள் பார்க்கவேண்டும். பார்த்த பின் நிச்சயமாகத் தனக்கு உடன்படுவாள் என்று எண்ணி அதற்கு ஏற்பாடு செய்தான்.

அவனுடைய பெரிய அரண்மனைக்குள் கொண்டு போகப்பட்டு, அங்குள்ள சிறப்பும் செல்வமும் காண்பிக்கப்பட்டாள். ராவணனுடைய சம்பத்தும் ராஜபோகங்களுக்குரிய பொருள்களும் உலகத்தில் வேறு எந்த அரசனும் பெற்றதில்லை. சீதைக்கு எல்லாவற்றையும் காண்பித்தார்கள். இதைக் கண்டு தன்னை மோகிப்பாள் என்று அரக்கன் எண்ணினுன்.

எங்கு பார்த்தாலும் பொன்னும் மணியும் பட்டும்; எங்கு பார்த்தாலும் கண்ணைக் கவரும்படியான விசித்திர வேலையோடு அமைந்த மண்டபங்கள், விமானங்கள், மேடைகள், ஆயிரக்கணக்கான வேலைக்காரிகள், செல்வத்தாலும்


ராஜ்யாதிகாரத்தாலும் உண்டாகக் கூடிய எல்லாவித சம்பத்தையும் லங்காபுரியில் ராக்ஷசேச்வரனுடைய அரண்மனையில் கண்டாள். ஆனால் சீதையின் மனம் வேறு எங்கேயோ இருந்தது. தன்னுடைய பெருஞ் செல்வத்தை யெல்லாம் அவளுக்குக் காட்டி விட்டு அவளிடம் பேச ஆரம்பித்தான். தன் சேனையின் பெரும் கணக்கை சீதையிடம் சொன்னான்.

அவளோ முன்னமேயே ராவணனுடைய வீரியத்தைப் பற்றித் தன் அபிப்பிராயத்தைச் சொல்லி விட்டாளே! ஆயினும் வெட்கமில்லாமல் தன் சேனா பலத்தைப் பற்றி எடுத்துச் சொன்னான். "இதை யெல்லாம் நீ உன்னுடைய பொருளாகவும் உன்னுடைய ராஜ்யமாகவும் வைத்து அனுபவிக்கலாம். என் பிராணனைவிடச் சிறந்தவளாக எனக்கு நீ ஆவாய். என்னுடைய மனைவிகள் பல பேர். ஆயினும் அவர்கள் அனைவருக்கும் நீ எஜமானியாக என்னுடைய அன்பு முழுவதும் பெற்று விளங்குவாய். நான் சொல்வதைக் கேள். வேறு யோசனை செய்யாதே. என் இஷ்டத்தைப் பூர்த்தி செய்வாயாக. நூறு யோஜனை தூரத்தில், இந்த லங்காபுரியானது சமுத்திரத்தால் சூழ்ந்து, ஆயிரக்கணக்கான மகா வீரர்களால் காக்கப்பட்டு வருகிறது. இங்கே யாரும் பிரவேசிக்க முடியாது.

"தேவாசுரர்களில் எனக்குச் சமமான சக்தி கொண்டவர்கள் யாருமேயில்லை. இது தேவாசுரர்கள் அறிந்த விஷயம். ராஜ்யத்திலிருந்து துரத்தப்பட்ட ஒரு அற்ப மானிடன், வனத்தில் தவமிருக்க நிச்சயித்திருக்கும் ஒரு திக்கற்றவன், அவனைக்கட்டிக்கொண்டு நீ என்ன சுகம் அடைவாய்? உன் அழகுக்குத் தகுந்த சம்பத்துள்ள புருஷன் நான். சுகம் அனுபவிக்கும் யௌவனப் பருவத்தை வீணாக்கிக்கொள்ளாதே. ராமனை நீ மறுபடியும் பார்க்கப் போவதில்லை, அதைப் பற்றிச் சந்தேகம் வேண்டாம். ஒருநாளும் ராமன் இங்கே அண்ட முடியாது. என்னுடைய ராஜ்யம் முழுவதும் உன்னுடையதாக வைத்துக் கொண்டு என்னுடன் அனுபவிப்பாயாக. நானும் எனக்குட்பட்டுக் கிடக்கும் தேவர்களும் உன் அடிமைகளாவோம். என் முக்கிய பட்டமகிஷியாக அபிஷேகம் செய்யப்படுவாய். உனக்கு ஒரு குறைவு மிருக்காது. இதுவரையில் பூர்வ கர்ம விசேஷத்தால் கஷ்டங்களை அனுபவித்தாய். இனிமேல் உன் புண்ணிய கர்மங்களின் நற்பயனை என்னுடன் அனுபவிக்கப் போகிறாய். லங்கையை ஆளப்போகிறாய். குபேரனை ஜெயித்த லங்கேசன் மனைவியாவாய். புஷ்பக விமானத்தில் ஏறி நாம் இஷ்டப்படி சஞ்சரிப்போம். உன் அழகிய முகத்தில் துக்கம் காணப்படக் கூடாது. சந்தோஷமாக இருப்பாயாக" என்றான்.

ராவணன் இவ்வாறெல்லாம் பேசும்போது சீதையின் கண்களில் தாரை தாரையாக நீர் பெருகிற்று. புடவையின் தலைப்பால் முகத்தை மூடிக் கொண்டாள். தன் பயத்தை அரக்கர்கள் காணாம விருப்பதற்காக இவ்வாறு செய்தாள்.

"நீ சங்கோசப்படாதே! என்னை ஒப்புக் கொள்வதில் பாபம் இல்லை. கூச்சம் வேண்டாம். தெய்வத்தால் ஏற்பட்ட நிலையை ஒப்புக் கொள்ளலாம் என்பது சாஸ்திரம். அழகியே! என் தலையை உன் பாதங்களில் வைத்துக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு அருள்வாய். நான் உனக்கு அடிமை. என் பதவியையும் மறந்து நான் உன்னிடம் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன். என்னுடைய



வாழ்நாளில் யாரையும் இப்படி நான் இறைஞ்சியது கிடையாது.''

இவ்வாறு ராவணன் சீதையை மிக வருந்திக் கேட்டுக் கொண்டான். அவள் ஒப்புக் கொள்வாள் என்றும், அவளை அடைந்து விடுவது நிச்சயம் என்றும் அரக்கன் எண்ணினான்.

மனத்தில் நிச்சய புத்தி யிருந்தால் எந்த சங்கட நிலையிலும் தைரியம் உண்டாகும். சோகத்தால் வாட்டப்பட்ட சீதை அரக்கனைக் கண்டு பயமேயில்லாமல் பேசலானாள். ஒரு துரும்பைக் கிள்ளித் தனக்கும் ராவணனுக்கும் மத்தியில் வைத்துப் பேசினாள்.

பஞ்சவடியில் சந்நியாசி வேஷம் பூண்டு தான் வைத்த காய் கிழங்குகளுக்கு முன் உட்கார்ந்து ராவணன் தன் குலத்தையும் வீரத்தையும் பேசினான் அல்லவா? அதற்கு ஒரு எதிரொலிபோல் இப்போது சிறையில் கிடந்த சீதை பேசினாள்:

"நான் யார் என்பதை அறிந்து கொள். தசரதராஜன் மூவுலகங்களிலும் புகழ் பெற்ற அரசன். தருமத்துக்கு ஒரு அசையா அணையாகப் பல்லாண்டு அரசு புரிந்த மகாராஜன். சத்தியம் காத்தவன். அவனுடைய குமாரன் ராமன், என் புருஷன். தேவனைப் போன்ற அந்த ராமன் என் நாதனாவான். சிம்மத்தின் பலம் பெற்ற வீரன். அவனும் அவன் தம்பி லக்ஷ்மணனும் உன்னுடைய உயிரை வாங்கக் காத்திருக்கிறார்கள். கரனும் அவன் சேனையும் ஜனஸ்தானத்தில் என் நாதனால் நிர்மூலமாக்கப் பட்டார்கள் என்பதை அறிவாய். கருடன் விஷப் பாம்பைத் தூக்கிக் கொண்டு போவது போல் அவ்வளவு சுலபமாக உன்னுடைய பெருஞ்சேனை ஜனஸ்தானத்தில் ராமனால் ஒரு முகூர்த்த நேரத்தில் அழிக்கப் பட்டது. அந்த ராமனை, தேவாசுரர்களால் கொல்லப்பட மாட்டாய் என்று வரம் பெற்ற நீ விரோதியாக்கிக் கொண்டா யல்லவா? அவனால் நீ உன் மரணத்தை அடைவாய் என்பது நிச்சயம்; தப்ப மாட்டாய். நீ பெற்ற வரம் உன்னைக் காக்க மாட்டாது. வேள்வியில் யூத ஸ்தம்பத்தில் கட்டிய ஆட்டைப் போல் நிற்கிறாய் என்பதை அறிந்து கொள். ராமனுடைய கோபப் பார்வை உன்மேல் படுவதுதான் தாமதம். கடலை உலரச் செய்தும் சந்திரனை ஆகாயத்திலிருந்து கீழே இறக்கியுமாவது என்னை என் நாதன் மீட்பான், நிச்சயம். நீ செய்த தீவினை உன்னையும் உன் லங்கையையும் அழித்துப் பாழாக்கப் போகிறது.



"என் வீர புருஷன் அரக்கர்களுக் கிடையில் தைரியமாகத் தண்டகா வனத்தில் தனியாக வசித்தான். எதிர்த்து வந்த அரக்கர்களை வீரனைப்போல் யுத்தம் செய்து கொன்றான். அவனில்லாத சமயம் பார்த்து நீ திருடனைப்போல் என்னைத் தூக்கி வந்தாய். இந்தத் தீச் செயலின் பயனை அனுபவிப்பாய், தப்பமாட்டாய். நீயும் உன் குலமும் அழிந்து போகும் காலமானது அருகில் வந்துவிட்ட படியால் விதி உன்னை இந்தப் பாவத்தில் தூண்டித் தள்ளிற்று! அழிந்து போகும் காலத்திலே

தான் இத்தகைய துர்புத்தி உண்டா கிறது.

"உன்னை விரும்பும்படி என்னைக் கேட்கிறாய். இது ஆகாத காரியம் என்பதை நீ அறிய வில்லையா? அன்னப் பட்சி காக்கையிடம் போகுமா? வேள்வி செய்யும் வேதிகையண்டை ஒழுக்கம் தவறிச் சண்டாளனான ஒருவன் கிட்டப் போக முடியுமா? உயிரையாவது உடலையாவது காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று எனக்குக் கொஞ்சமும் ஆசையில்லை. உலகத்தாரால் இகழப்பட்டு உயிர் வைத்துக் கொண்டிருக்க நான் விரும்ப வில்லை. நான் பயப்பட்டு உயிரைக் காப்பாற்றிக் கொள்ள உன் வசமாவேன் என்று எண்ணாதே!"

இவ்வாறு சொல்லி விட்டு மௌன மடைந்தாள்.

"அப்படியா?" என்றான் ராவணன். "சரி, பன்னிரண்டு மாதம் கெடுவு உனக்குத் தருகிறேன். நீ என்னை மணந்தால் நல்லது; இல்லையென்றால் அந்தத் தவணை முடிந்ததும் என் சமையற்காரர்கள் என்னுடைய காலை ஆகாரத்துக்கு உன் உடலைச் சமைப்பார்கள்." இவ்வாறு சீதையை எச்சரித்து விட்டுக் காவற்கார ராக்ஷசிகளுக்குத் தனியாக உத்தர விட்டான்.

"இவளுடைய பிடிவாதத்தையும் கர்வத்தையும் நீங்கள் எப்படியாவது அழிக்க வேண்டும். அசோக வனத்தில் இவளைத் தனியாக வைத்து, பயத்தாலும் நயத்தாலும் சாமர்த்தியமாக இவளைத் திருத்துங்கள். காட்டில் பிடித்த பெண் யானையை எப்படி வசப் படுத்துகிறோமோ அதுபோல் இவளைச் சீக்கிரம் நீங்கள் திருத்த வேண்டும்" என்று உத்தரவிட்டுக் கடுஞ் சினத்தோடு தன் அரமனைக்குச் சென்றான்.

சீதையை அழைத்துக் கொண்டு ராக்ஷசிகள் அசோக வனம் சென்றார்கள். அது மிக ரம்யமான அந்தப்புர உத்தியானவனம். பறவைகளும் புஷ்பங்களும் காயும் பழமும் நிறைந்த மரங்களும் உள்ள தோட்டம். அங்கே சீதை கோரமான அரக்கிகளின் காவலில் சிறைப்பட்டு துயரக் கடலில் மூழ்கிக் கிடந்தாள். ராமனும் லக்ஷ்மணனும் எப்படியாவது விஷயம் தெரிந்து கொள்வார்கள், தன்னை மீட்பார்கள், அரக்கர்களின் மிரட்டல்களுக்குப் பயப்படாமல் உயிர் வைத்துக் கொண்டிருக்க வேண்டும், வீரனாகிய தன் நாதன் அரக்கனை அழித்து விடுவான், மறுபடியும் ராமனுடன் சேர்ந்து வாழும் நாள் சீக்கிரத்தில் வரும் என்று நம்பி, ராக்ஷசிகளின் மிரட்டலுக்குப் பயப்படாமலும் எவ்வளவு நயமாகப் பேசினாலும் அதனால் மோசம் போகாமலும் இருந்து வந்தாள்.

* * *

சீதை அசோக வனத்தில் துன்பப்பட்டுக் கிடந்தது ஒரு நாளல்ல, இரண்டு நாட்களல்ல, பல மாதங்கள். இப்படி அனாதையாகத் துன்பப்பட்டாள்.

மகாவீரன் ஹனுமான் கடல் தாண்டி வந்து தேவியின் துயரத்தைப் பார்த்து, அந்தத் துயரத் தீயையே கொண்டு லங்காபுரியை எரித்து விட்டு, "ராமன் வருவான், பயப்படாதே!" என்று சீதைக்குச் சொல்லும் நாள் பின்னால் வரும்.

நம் நாட்டில் துயரப்படும் பெண்கள் அனைவரும் சீதா தேவியின் அம்சம். ஆண்களாகப் பிறந்தவர்கள் அனைவரும் ஹனுமானைப் போன்று பெண்ணைக் காக்கும் சுத்த வீரர்கள் ஆவார்களாக.

இப்போது மறுபடி ராம லக்ஷ்மணர்களை நாம் விட்ட இடத்திற்குப் போவோம்.

கதை கட்டுரை அனுப்புவோருக்கு

நல்ல காகிதத்தில் இடையீடுகள் விட்டு ஒரே பக்கத்தில் எழுதி அனுப்பினால் நலம். பிரசுரமாகாத எழுத்துக்களைத் திரும்பப் பெற்றுக் கொள்ள விரும்புவோர், போதிய தபால் - தலைகள் உடன் அனுப்ப வேண்டும்.

தாங்கள் அனுப்பும் எழுத்தோடு, அல்லது தனியான கார்டில், குறிப்பிட்ட எழுத்து தமது சொந்தக் கற்பனைதான் என்றும், இது அல்லது இதைத் தழுவியது தமிழில் அல்லது வேறு மொழியில் வெளியாகவில்லை என்றும் ஒரு உறுதிமொழி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர்

மூன்று காரியங்களையும் சாதிப்பது கால்கேட் முறையே!

உங்கள் வாய்த்துர்நாற்றத்தை அகற்றுகையில்
உங்கள் பற்களை சுத்தி செய்து
அவற்றை சொத்தையாகாமல் தடுக்கிறது



5,00,000 கதிர்கள்	**பருத்தி நூல்கள்**	நெ. 80 வரை நூல்கள்

மதுரை மில்ஸ் கம்பெனி லிட்., மதுரை

மில்கள் : **மதுரை, தூத்துக்குடி, அம்பாசமுத்திரம்**

○●○

கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கான சகலவிதமான நூல்கள்

○●○

விசேஷ ரகங்கள் :

கயிறுகள், விழுதுகள், கித்தான்கள், நாடாக்கள் முதலியவைகளுக்கான விசேஷ நூல்கள்-தையல் நூல்-முறுக்கேற்றிய தீர்த்த சரடுகள் முதலியன

○●○


மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்

பாண்டியன் பில்டிங்

போன் : 420 (4 லைன்) **மதுரை** தந்தி : "ஹார்வி"


"மனுஷன் கொஞ்சம் செவிடு. சீக்
கிரம் எழுந்திருக்க வேண்டுமாம், அதற்
குத்தான் இந்த ஏற்பாடு!"


"சார், சார்! அவர் பணம் கொடுக்காமல் போகிறார்!"
"நான்தான் நாளையிலிருந்து கடன் சொல்லக் கூடாது என்று சொன்னேன், அதனால்தான் டிபனைச் சாப்பிட்டு விட்டுச் சொல்லாமலே போகிறார்!"

ஹாஸ்யக் களஞ்சியம்




'வேண்டாம் சேர்ந்து போனால் நன்றாயிராது நீங்கள் முன்னாடி போங்கள் பிறகு நான் கடைசியில் வருகிறேன்!


"சோளக் கொல்லைப் பொம்மை தனியாக நிற்கிறதே என்று அதற்கு ஒரு மனைவி பொம்மையைத் தோட்டக்காரர் நிறுத்தி விட்டார்!"


"என்ன. விசிறியில் உப்பு மூட்டையைக் கட்டித் தொங்க விட்டிருக்கிறீர்களே!"
"உப்பு காற்று என் உடம்புக்கு வேண்டும் என்று டாக்டர் சொன்னார். அதனால்தான்..."
"இரவு பாராவுக்கு நான் ஒருவன் போதாதா? எதற்காக இந்த நாயை வேறு வளர்க்கிறீர்கள்? தூங்க விடாமல் இப்படிக் குரைத்துக் கொண்டே இருக்கிறதே!"
"அப்பாடா! அம்பிப் பயலைத் தொட்டிலில் போட்டுத் தூங்கப் பண்ணி விட்டு வந்து விட்டேன்!"
வாடித் தொங்குகிறதே. தண்ணீர் ஊற்றுகிறேன்
1
2
இதுவும் வாடித் தொங்குகிறதே.
3
4
சாமா.
"இந்தக் கூந்தல் தைலம் பெண்களுக்காகத் தயார் செய்ததாயிற்றே! இதை யார் உங்களைத் தடவிக் கொள்ளச் சொன்னார்கள்?"
கூந்தல் வளரும் தைலம் பெண்களுக்கு ஓர் உயர்ந்த தைலம் விலை 5-
"பாகவதர் ஐயா! நீங்கள் நல்லா பின்னுக்குப் போயக. உங்கள் சிஷ்யப் பிள்ளையை முன்னுக்கு வரச் சொல்லுங்க!"



19. அரண்மனை வாசம்



பிரபாகரன் விட்ட அம்பு குறி தவறவில்லை. அது வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்த சிங்கத்தின் நடு வயிற்றில் 'விர்' ரென்று பாய்ந்தது. சிங்கத்தின் வயிற்றிலிருந்து ரத்தம் வெளியே பீறிட்டுக் கொண்டு வந்தது. சிங்கம் கோபத்துடன் இடி இடிப்பது போல் கர்ஜனை செய்து 'தொப்'பென்று கீழே விழுந்தது. வலி பொறுக்க முடியாமல் புரண்டு கொண்டே இருந்தது. அதை அப்பொழுது யார் பார்த்தாலும் பயந்து ஓடியிருப்பார்கள். வேகமாகப் புரண்ட சிங்கம் கொஞ்சம் மெதுவாகப் புரண்டது. சற்று நேரத்தில் அது அசைவற்று விழுந்து விட்டது. பிரபாகரன் சிங்கத்தின் அருகில் சென்றான். அதன் மூக்கில் பயந்து கொண்டே கையை வைத்தான்.

"உமா, உமா! சிங்கம் செத்து விட்டது. நீ பயப்படாமல் எழுந்திரு" என்று படுத்துக் கொண்டிருந்த உமாவைத் தட்டி எழுப்பினான் பிரபாகரன்.

"சிங்கம் செத்து விட்டதா? ஐயோ, நான் அதைப் பார்த்தவுடன் என்ன செய்வது என்று தெரியாமல் மூர்ச்சையாகி விட்டேன், அண்ணா! அதன் வயிற்றைக் குறி பார்த்து எப்படி அண்ணா அம்பை விட்டாய்? உன் சாமர்த்தியமே சாமர்த்தியம். நீ மாத்திரம் சமயோசிதமாக அந்த அம்பை விடா விட்டால் உன் பாடும் என் பாடும் இன்று அதோகதிதான்! நீ வில் வித்தையில் மிகவும் கெட்டிக்காரனாகி விட்டாய். எல்லாம் அந்தத் துறவியின் உதவிதான் அண்ணா!" என்றாள் உமா.

இவ்வாறு உமா சொன்னவுடன் 'டுமீல்' 'டுமீல்' என்று ஏக காலத்தில் துப்பாக்கிகள் சுடும் சத்தம் கேட்டது. உமாவும் பிரபாகரனும் ஒன்றும் தோன்றாமல் திகைத்து நின்றனர். நடுக் காட்டில் இந்த வேட்டுச் சத்தம் கேட்கும் காரணம் என்னவாயிருக்கும் என்று நினைத்து இருவரும் நடுநடுங்கினர். அப்பொழுது இன்னொரு திடுக்கிடும் சம்பவம் மறு வினாடியே நிகழ்ந்தது. அவர்களை நோக்கி நாலு ஐந்து துப்பாக்கி வீரர்கள் வேகமாக வந்து கொண்டிருந்தார்கள். காட்டிலுள்ள துஷ்ட மிருகங்களால் தங்களுக்கு ஒரு கெடுதியும் வராமல் இருப்பதற்கு முன் ஜாக்கிரதையாக இருப்பதுபோல ஆகாயத்தை நோக்கித் துப்பாக்கியினால் சுட்டுக் கொண்டே வந்து கொண்டிருந்தார்கள்.

"அண்ணா, இவர்களைப் பார்த்தால் நம்மைத் தேடிக்கொண்டு வருகிறார்கள் போல் தோன்றுகிறது. நமக்கு ஏதோ ஒரு புதிய ஆபத்து வந்து விட்டது!" என்றாள் உமா.

"அவசரப்படாதே. அவர்கள் சமீபத்தில் வரட்டும்; பார்த்துக் கொள்ளலாம்" என்றான் பிரபாகரன்.

சில நிமிஷங்களுக் கெல்லாம் அந்தத் துப்பாக்கி வீரர்கள் காட்டில் நின்று கொண்டிருந்த பிரபாகரனையும், உமாவையும் சூழ்ந்து கொண்டார்கள். உமா பயந்து தலையைக் குனிந்து கொண்டாள். பிரபாகரன் பயப்படாமல் தலையை நிமிர்த்தியபடியே அவர்களை உற்றுப்பார்த்தான்.

"நீங்கள் யார்? இந்தக் காட்டிற்கு
யார் உத்தரவைக் கேட்டுக்கொண்டு வந்
தீர்கள்?" என்றான் அந்தத் துப்பாக்கி
வீரர்களின் ஒருவன்.

"நாங்கள் யாரைக் கேட்டுக் கொண்
டும் வரவில்லை. நாங்களாகவே தான்
வந்தோம்."

"எந்த வழியாக வந்தீர்கள்?"

"காட்டின் வடக்குப் பக்கமிருக்கும்
கம்பிகளின்மீது ஏறித் தாண்டி வந்தோம்."

"வெளியிலே ஒரு பெரிய பலகையில்
கொட்டை எழுத்துக்களில் எழுதியிருக்
கும் எச்சரிக்கையைப் படித்தீர்களா?"

"ஆமாம், படித்தோம்!"

"படித்துமா நீங்கள் அரசாங்க உத்தரவு
பெறாமல் இங்கே வந்தீர்கள்? எதற்காக
இங்கு வந்தீர்கள்? 'இந்தக் காட்டில் துஷ்ட
மிருகங்கள் இருக்கின்றன' என்று எச்
சரிக்கை கொடுத்திருக்கிறதே!"

"எங்களுக்கு இக்காட்டுக்கு வராமல்
வேறு வழி இல்லை. சர்க்காரிடம் அனுமதி
கேட்க எங்களுக்குப் போதிய அவகாசமும்
இல்லை. நாங்கள் அனுமதி கேட்டு எங்க
ளுக்கு அனுமதி மறுக்கப்பட்டால் நாங்கள்
எடுத்துக் கொண்ட காரியம் நிறைவேறா
மல் போய் விடும். எங்கள் காரியம் எங்
களுக்கு முக்கியமே தவிர உயிர் எங்க
ளுக்குப் பெரிதல்ல!"

பிரபாகரனுடைய தைரியத்தை வியந்து
அந்தத் துப்பாக்கி வீரன், "உங்கள் காரி
யம் என்ன? எதற்கு இங்கே வந்தீர்கள்?"
என்று கேட்டான்.

"நாங்கள் கல்லறைத் தீவுக்குப் போக
வேண்டும்!" என்றான் பிரபாகரன்.

"கல்லறைத் தீவுக்கா? நீங்கள் சொல்லு
வது ஆச்சரியமாக இருக்கிறதே! இந்தக்
காட்டுக்கு வருவது எவ்வளவு ஆபத்தோ
அதைவிடப் பன்மடங்கு ஆபத்தல்லவா
கல்லறைத் தீவுக்குப் போவது? யாவரும்
எளிதில் அங்கு போகக் கூடாது என்ப
தற்குத்தான் கல்லறைத் தீவுக்குப் போகும்
வழியில் இந்தக் காட்டு வழி ஏற்பாடு
செய்யப்பட்டிருக்கிறது."

"அதைப் பற்றி நாங்கள் கவலைப்பட
வில்லை. எப்படியாவது நாங்கள் கல்லறைத்
தீவுக்குப் போய்த்தான் ஆகவேண்டும்."

"நீங்கள் கவலைப்படாவிட்டால் அர
சாங்கம் பிறருடைய சுக துக்கங்களைக்
கவனித்தே ஆகவேண்டும். அதனால்தான்
இந்தக் காட்டிற்கு வர அனுமதி பெற
வேண்டும் என்று எச்சரிக்கை செய்
திருக்கிறது. அப்படி உங்களுக்கு முக்கிய
மாகப் போக வேண்டிய காரணங்களை
அரசருக்கு எடுத்துச் சொல்லியிருந்தால்
வேறு குறுக்கு வழியாகத் தகுந்த பாது
காப்புகளுடன் உங்களை இந்தக் காட்டை
எளிதில் தாண்டும்படி செய்திருப்பாரே!"

"எங்களுக்கு அரசர் அப்படி அனுமதி
கொடுப்பார் என்ற நம்பிக்கை இல்லை.
அதனால்தான் ஒரு அனுமதியும் பெறாமல்
இங்கு வந்தோம். தயவு செய்து எங்கள்
வழியே போகும்படி எங்களை விட்டு
விடுங்கள்!" என்றான் பிரபாகரன்.

"வெகு நன்றாக இருக்கிறது, உங்கள்
பதில். அனுமதியில்லாமல் வந்தது ஒரு
பெரிய குற்றம். அதற்காக உங்களை இப்
பொழுது கைது செய்யப் போகிறோம்.
நீங்கள் இதற்குமேல் போக முடியாது.
போகவும் விடமாட்டோம். இந்தக் காட்
டிற்கு அனுமதி இல்லாமல் ஒருவரும்
வந்ததில்லை. நீங்கள்தான் துணிச்ச
லுடன் வந்திருக்கிறீர்கள், இருக்கட்டும்.
சற்று முன்பு ஒரு சிங்கம் திடீர் என்று
பயங்கரமாகக் கர்ஜனை செய்ததே உங்க
ளுக்கு அதைப்பற்றி ஏதாவது தெரியுமா?"

"நான்தானே அதற்குக் காரணம்!"

"நீங்கள்தான் காரணமா? எங்களுக்கு
ஒன்றுமே புரியவில்லையே?"

"என்னுடன் வாருங்கள். காண்பிக்
கிறேன்" என்று பிரபாகரன் அந்தத்
துப்பாக்கி வீரர்களை அழைத்துக் கொண்டு
போனான். பிரபாகரனின் கையைப் பிடித்
துக் கொண்டபடியே, உமாவும் பின்
தொடர்ந்தாள்.

"இதோ பாருங்கள். இங்கே உயிர்
இழந்து கிடக்கும் சிங்கத்தை!" என்று
கூறித் தான் அம்பு விட்டுச் சிங்கத்தைக்
கொன்ற விவரத்தையும் சொன்னான்.

கீழே விழுந்து கிடந்த சிங்கத்தைப்
பார்த்த துப்பாக்கி வீரர்கள் ஆச்சரிய
மடைந்து ஒன்றுமே பேச முடியாமல்
நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது



ரு துப்பாக்கி வீரன், "என்ன! எங்க
ரால் நம்ப முடியவே இல்லை. நீங்கள்
டுத்த அம்பு அதன் வயிற்றில் பாய்ந்தி
ப்பது நன்ருகத் தெரிகிறது. நீங்கள்
ான் அதைக் கொன்றிருக்கிறீர்கள் என்ப
ற்குச் சந்தேகமில்லை. இந்தக் காட்டிலே
கவும் வலிமை பொருந்திய சிங்கங்களில்
ன்று இது. துப்பாக்கியை உபயோகிப்
தில் நிபுணர்கள் என்று எங்களுக்குப்
பயர் கிடைத்திருந்தும், நாங்கள் பல
றை பிரயத்தனப்பட்டும் இந்தச் சிங்
த்தை எங்களால் கொல்ல முடியவில்லை.
ங்கள் வில்லை வைத்துக் கொண்டே
அதைக் கொன்று விட்டீர்களே! ஆச்சரி
ம். எங்களுடைய அரசர் பீமவர்மனும்
இந்தச் சமாசாரத்தைக் கேட்டால் சந்
தோஷ மடைவார். உங்களைச் சிறையில்
அடைப்பதற்கு முன்
அரசரிடமே உங்களை
அழைத்துப் போகி
ரும்!" என்றுசொன்
ன். துப்பாக்கி
ரர்கள் தங்களைச்
ழ்ந்து வரப் பிர
ாகரனும் உமாவும்
மவர்மனின் அரண்
னையை நோக்கி
டந்து கொண்டிருந்
ார்கள்.

பீமவர்மனுடைய
அரண்மனைமற்றைய
அரண்மனைகளைப்
பால அல்லாமல்
அதன் நான்கு பக்கங்
ளிலும் குமார் ஒரு
மல் விஸ்தீரணத்
க்கு ஒரு அழகிய
ந்தவனத்தினுல்
ழப்பட் டிருந்தது.
அந்த நந்தவனத்
ின் அழகைக் காண
வகு தூரத்திலிருந்து பெரிய பெரிய
ாஜாக்களும், தனவந்தர்களும் உத்தி
யாகஸ்தர்களும் வருவது வழக்கம்.
ந்தவனத்தை மேன் மேலும் அபி
ருத்தி செய்வதே பீமவர்மனின் நோக்
ம். நந்தவனத்தின் நடுவில் பீமவர்
னின் அரண்மனை ஆகாயத்தை
அளாவி இருந்தது.

துப்பாக்கி வீரர்கள் பிரபாகரனையும்,
மாவையும் அங்கு அழைத்துச் சென்
ர்கள். அப்பொழுது பீமவர்மன் தனது
அமைச்சர்களுடன் கொலு மண்டபத்தில்
வீற்றிருந்தான். அவன் பெயருக்கு ஏற்
ற்போல் அவன் பார்ப்பதற்கும் பீமனைப்
போலிருந்தான். அவன் பக்கத்திலிருந்த
துப்பாக்கி வீரர்கள் அரசனின் அனுமதி
யின் பேரில் பிரபாகரனையும் உமாவையும்
அரண்மனைக்கு அழைத்துச் சென்ருர்கள்.

"உங்கள் பெயர் என்ன?" என்று கேட்டான் பீமவர்மன்.

"மகாராஜா, என் பெயர் பிரபாகரன். இவள் என் தங்கை உமா!" என்று பணிவோடு சொன்னுன் பிரபாகரன்.

அரசன் பீமவர்மன் பிரபாகரனையும் உமாவையும் ஏற இறங்கப் பார்த்தான். பிரபாகரனும் உமாவும் தன்னை வணங்கியதைக்கூட பீமவர்மன் கவனிக்கவில்லை.

'அடாடா, இவர்களுடைய முகத் தெளிவைப் பார்த்தால் ராஜ குடும்பத்தைச் சேர்ந்தவர்களைப் போல அல்லவா தெரிகிறது! பாவம், இவர்களை எதற்காகக் கைதிகளாக்க வேண்டும்?' என்று யோசனை செய்தான். அடுத்த நிமிஷம், 'இவர்களை எப்படித் தண்டிக்காமல் விடுவது? எச்சரிக்கை செய்தும் அனுமதி பெருமல் காட்டுக்குள்போனது ஒரு பெரிய குற்றம் தானே? யாராயிருந்தால் என்ன? குற்றம் செய்ததற்குத் தண்டனை கொடுத்துத் தானே ஆக வேண்டும்? அது தானே நீதி!' என்று மனத்தில் நினைத்தான்.



"நீங்கள் அனுமதி பெருமல் காட்டுக்குள் சென்றது உண்மை தானே?" என்று பிரபாகரனைக் கேட்டான் பீம வர்மன்.

"ஆமாம், அரசே! உண்மைதான்."

"எதற்காக அப்படிச் செய்தீர்கள்?"

"உங்கள் அனுமதி கேட்டால் கிடைக்காது என்று நாங்கள் நினைத்தோம். தாமதம் செய்வதற்கும் எங்களுக்கு விருப்பம் இல்லை. நாங்கள் ஒரு முக்கிய காரியமாகக் கல்லறைத் தீவுக்குப் போக வேண்டி யிருக்கிறது!" என்ருன் பிரபாகரன்.

இதைக் கேட்டவுடன் பீமவர்மன் சிரித்தான். "என்ன, உங்களுக்குப் பைத்தியமா பிடித்திருக்கிறது? கல்லறைத் தீவுக்குப் போக வேண்டிய காரணம் என்ன?"

"ஒரு முக்கிய காரணத்துக்காகத்தான் நாங்கள் அங்கே போக வேண்டும்."

"எந்தக் காரணங்களுக்காக இருந்தால் தான் எனக்கு என்ன? உங்கள் சொந்த விஷயத்தில் நான் தலையிட விரும்பவில்லை. நீங்கள் என்னுடைய அனுமதி பெருமல் காட்டுக்குள் சென்றதற்கு உங்களை இப்பொழுது சிறைக்கு அனுப்பப் போகிறேன்" என்ருன் பீமவர்மன்.

அப்பொழுது ஒரு துப்பாக்கி வீரன், "அரசே, ஒரு முக்கிய விஷயத்தை உங்களிடம் சொல்ல மறந்து விட்டேனே! நமது காட்டில் இருக்கும் பெரிய சிங்கம் ஒன்றை இந்த வாலிபர் ஒரே அம்பினால் கொன்று விட்டார்" என்றான்.

இதைக் கேட்டவுடன் சிம்மாசனத்தில் உட்கார்ந்திருந்த பீமவர்மன் திடுக்கிட்டவன் போல எழுந்து நின்றான்.

"என்ன, அந்தப் பெரிய சிங்கத்தையா கொன்று விட்டான்?"

"நாங்கள் எங்கள் கண்களினாலேயே பார்த்தோம். இது உண்மை" என்று எல்லாத் துப்பாக்கி வீரர்களும் சேர்ந்தாற்போல் சொன்னார்கள்.

"சரி, நானே போய்ப் பார்த்து விட்டு வந்து விடுகிறேன்" என்று மெய்க் காவல் ஆட்களுடன் கிளம்பினான் அரசன்.

சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்தான். வந்தவன் சிங்கத்தின் வயிற்றில் பாய்ந்திருந்த அம்பையும் கையில் எடுத்துக் கொண்டு வந்தான். அவசரமாகப் பிரபாகரனிடமிருந்த அம்பையும் அதையும் ஒப்பிட்டுப் பார்த்தான். "ஆம், நிச்சயம் இச்சிறுவன் தான் அந்தச் சிங்கத்தைக் கொன்றிருக்கிறான் என்பதற்குச் சந்தேகமே இல்லை!" என்றான் அரசன்.



பிறகு பிரபாகரனைப் பார்த்து, "பிரபாகரா! நீ யதேச்சையாகக் கொன்றிருந்தாலும் கொன்றிருக்கலாம். எதற்கு அது மாதிரியான சந்தேகத்தை நான் வைத்துக் கொள்ள வேண்டும்? முதலில் நீ வில் வித்தையில் நன்றாகத் தேர்ச்சி பெற்றவனா என்று பரிசோதிக்கப் போகிறேன். என் பரீட்சையில் நீ வெற்றி பெற்று விட்டால் நீ இந்தக் காட்டைத் தாண்டிச் சௌகரியமாகக் கல்லறைத் தீவுக்குப் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். எதற்காக வென்றால் அந்தப் பொல்லாத சிங்கத்தைக் கொன்றதற்காக! அப்படி நீ அந்த வில்போட்டியில் ஜயிக்கா விட்டால் நீ காட்டில் அனுமதியின்றிச் சென்றதற்காக உன்னையும், உன் தங்கையையும் கைதிகளாக்கிச் சிறைவாசம் அனுபவிக்கும்படி செய்வேன். அது நிச்சயம்" என்று சொன்னான் பீமவர்மன்.

சிறைவாசம் என்று சொன்னவுடன் உமாவுக்கு மறுபடியும் மயக்கம் வரும் போலிருந்தது. அவளுடைய கண்களிலிருந்து நீர் பெருகியது.


"நீங்கள் இரண்டு பேரும் இ
விட்டுப் போகலாம். இந்த அரண்மனை
யிலேயே விருந்தினர்கள் தங்குவத
குப் பிரத்தியேகமாக ஏற்படுத்தி யிரு
கும் மாடி அறையில் தங்குங்கள். விரு
தினர்களுக்கு அளிக்கப்படும் மரியாதைகள்
உங்களுக்கும் நடக்கும். இன்றைக்குப் ப
தாவது நாள் பௌர்ணமி யன்றுதான்
வில் போட்டி நடத்தப்படும். போட்
நடக்கும் வேளை காலை அல்ல; இரவுதான்
உன்னுடன் யார் போட்டி யிடுவார்கள்
என்பதை நிச்சயப்படுத்த வில்லை. இந்த
பட்டணத்திலும், அதைச் சுற்றிலும் வி
வித்தையில் கை தேர்ந்தவர்கள் இரு
கிறார்கள். அவர்களில் யாரை விட்டாவது
உன்னுடன் போட்டியிடச் செய்கிறேன்
அப்படி அவர்கள் ஒருவரும் தயாரா
வராவிட்டால் அரண்மனையில் வில்வித்தை
யில் மிகவும் தேர்ச்
பெற்ற ஒருவனை
உன்னுடன் போட்
போடச் செய்கிறேன்
அது வரையில
நீயும் உன் தங்கை
யும் இந்த அர
மனையை உங்க
வீட்டைப் போ
நினைத்து சந்தோ
மாக இருங்கள்
என்று சொல்லி வி
டுத் தன் மந்தி
களில் ஒருவரைக்கூ
பிட்டுப் பிரபாகரனை
யும், உமாவையு
அழைத்துப் போய்
சகலவித சௌகரிய
களையும் செய்யும்படி உத்தரவிட்டான் பீ
வர்மன். மறுநாள் காலையில் பீமபுரத்திலு
அதைச் சுற்றிலும் பல மைல்களுக்கு அ
பால் உள்ள பட்டணங்களிலும் தல
டோராக்காரர்கள் தம்பட்டத்தை அடித்
வண்ணமாக இருந்தனர். "இதனா
எல்லா ஜனங்களுக்கும் தெரிவிப்ப
யாதென்றால், அடுத்த பௌர்ணமி தின
பீமபுரத்தில் அரண்மனை விளையாட்
மைதானத்தில் விசேஷமாக அமைக்க
படும் கூடாரத்தில் ஓர் வில் போட்டி
பந்தயம் நடத்தப்படும். அந்தப் போட்
யில் காட்டில் இருந்த வலிமை பொருந்தி
ஒரு ஆண் சிங்கத்தை வெகு தைரியமா
ஒரே முயற்சியில் தன் அம்பினால் கொன்
பிரபாகரன் என்ற வீர இளைஞர் கலந்
கொள்வார். அவரை யார் வில் வித்தை
யில் ஜெயிக்கிறார்களோ அவர்களுக்
ஆயிரம் பொன் பரிசளிப்பதாக அர
ருடைய உத்தரவு" என்று சொல்
விட்டு 'டம், டம், டம்' என்று த
பட்டத்தைக் கொட்டிய வண்ணமாக
போய்க் கொண்டிருந்தார்கள். (தொடரும்


நாள் முழுவதும் கடுமையாக உழைத்த பின்னர்
உங்களுக்கு
புத்துணர்ச்சி
தருவதில்
ஹமாம் இணையற்றது
HAMAM
TOILET SOAP
ஹமாமைப்போல் இத்தனை லாபகரமான சோப்பும் வேறில்லை-ஒவ்வொரு கட்டியும் நெடுநாள் வருகிறது!
அது சிறந்ததென்பதை நீங்கள் நிச்சயமாக அறிவீர்கள் — ஏனெனில் அது டாடா தயாரிப்பு
TATA PRODUCT
இந்திய மூலதனத்தைக்கொண்டு, இந்திய நிர்வாகத்தில், இந்தியா விலேயே தயாரிக்கப்படுவது.
டாடா ஸ்போர்ட்ஸ் ரீவியூவை செவ்வாய், வியாழன், சனிக்கிழமை களில் இரவு 9 மணிக்கு ரேடியோ சிலோனில் கேளுங்கள்
TS. 9775 (R)

விசேஷ சலுகை


பாதி விலைக்கும் குறைவானது

பிரபல ஸ்விஸ் தொழிற்சாலையில் தயாரான
கைக் கடிகாரங்கள்
பாக்கெட் கடிகாரங்கள்
அலாரம் கடிகாரங்கள்
ஒவ்வொன்றும் 5 வருஷ உத்திரவாதம்



	ஒரிஜினல் விலை	விற்பனை விலை
பாக்கெட் கடிகாரம் (ஆல்ட்பா)	ரூ. 24/-	12/-
வெளிநாட்டுஅலாரம்கடிகாரம்	ரூ. 30/-	14/-
உயர்தர அலாரம் கடிகாரம்	ரூ. 35/-	16/-

No. 601



Size 7½

15 ஜூவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ. 75/-	36/-
15 ஜூவல்ஸ் 10 மைக்ரோன்ஸ்	ரூ. 90/-	40/-


No. 602



Size 10½

15 ஜூவல்ஸ் வாட்டர் புரூப்	ரூ. 80/-	38/-
17 ஜூவல்ஸ் வாட்டர் புரூப்	ரூ. 90/-	44/-
21 ஜூவல்ஸ் வாட்டர் புரூப்	ரூ. 130/-	60/-

No. 603



Size 6½

5 ஜூவல்ஸ் க்ரோம் (மீரஜ்)	ரூ. 42/-	20/-
5 ஜூவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ. 58/-	25/-
15 ஜூவல்ஸ் ரோல்டு கோல்டு	ரூ. 70/-	32/-

★

Pioneer Watch Co.
Post Box No. 11428, Calcutta



ஜலதோஷத்தை அகற்றுங்கள்

2 விதங்களில் அதிசீக்கிரமாக!

இப்பொழுது நீங்கள் ஜலதோஷத்தை முன்னைக்காட்டிலும் அதிக சீக்கிரத்தில் நிறுத்தலாம். படுக்கப்போகும் சமயத்தில் விக்ஸ் வேபோரப்பை உங்கள் குழந்தையின் மார்பின் மேலும், தொண்டையின் மேலும், முதுகின் மேலும், தடவித் தேயுங்கள். இந்த நவீன ஔஷதம் பல தேசங்களில் பிரக்யாதி பெற்றுள்ளது. ஏனெனில் அது ஜலதோஷத்தை இரண்டு விதங்களில் எதிர்த்துப் போராடுகிறது.



1. அதன் குணப்படுத்தும் உஷ்ண மார்பிலுள்ள வலியை அகற்றுகிறது.

விக்ஸ் வேபோரப்பின் சக்திவாய்ந்த மருந்துச் சத்து சருமத்தின் வழியாக உட்சென்று மார்பிலுள்ள சளியை வெளியேற்றுகிறது. மேலும், அதே சமயத்தில்...



2. அதன் நல்ல வாசனை சுவாசக் குழாய்களைச் சுத்தம் செய்கிறது.

நல்ல வாசனையுள்ள விக்ஸ் வேபோரப் ஜலதோஷத்துக்கு மிகவும் சக்திவாய்ந்த மருந்தாகும். உங்கள் குழந்தை இந்த வாசனையை இரவு முழுவதும் சுவாசிக்கிறது. அடைசலாயிருந்த அவனுடைய மூக்கு சுத்தமாகிறது. தொண்டைபுண்ணுக்கு ஆறுதலளிக்கப்படுகிறது. இருமல் நிறுத்தப்படுகிறது. அநேகமாக மறுநாள் காலையில் ஜலதோஷத்தின் கொடுமை மறைந்துவிடுகிறது.

தடவித் தேயுங்கள்...

விக்ஸ் வேபோரப்



"விக்ஸ்" மற்றும் "வேபோரப்" டிரேட் மார்க்குகள். 320

ஆரோக்கிய வாழ்வு

சீதாலக்ஷ்மி குமாரசாமி

5. வைடமின் சி.

எல்லா வைடமின்களைக் காட்டிலும் இந்த 'வைடமின்' மிக மிக முக்கியமானது. இதன் வேலைகளைத் தெரிந்து கொண்டால் அது எவ்வளவு அவசியமானது என்பதை அறிவோம்.

நமது உடல் பலவித அணுக்களால் ஆக்கப்பட்டது. ஒவ்வொரு அணுவையும் சுற்றி ஒரு விதமான பசைப் பொருள் உண்டு. அந்தப் பசைப் பொருள் அணுக்களுக்குப் பாதுகாப்பாய் இருப்பது மல்லாமல் அணுக்கள் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து உருவமாய் அமையவும் உதவுகிறது. நமது தசை, நரம்புகள், உள் அவயவங்கள் அம்மாதிரி ஒன்று சேர்ந்ததினால், அதாவது கோடிக்கணக்கான அணுக்களின் கூட்டால், உண்டானவைதான். இவ்வாறு இணைத்துப் பிணைத்திருக்கும் சிமிட்டி போன்ற பசையுள்ள பாகத்துக்கு இந்த 'வைடமின் சி' யின் சத்து போஷணை அளிக்க வல்லது. இது எது வரை உடலுக்குக் கிடைக்கின்றதோ அதுவரை சருமம், தசைகள், உடல் அவயவங்கள் எல்லாம் ஒழுங்காய் வேலை செய்யும். குறைந்தால் இந்தப் பசைப் பொருள் இளகி, சருமம், தசை, நரம்புகள் முதலியன வெல்லாம் பல குறிகளைக் காட்டும்.

முதலில் அணுக்களின் பலம் குறையும். பல் ஈறுகளில் வீக்கம், இரத்தம் ஒழுகும். கை கால் மூட்டுகள் வீக்கங் கொள்ளும். நீர் கட்டிக் கொள்ளும். உடலில் இரத்த ஒழுக்கு உண்டாகும். பற்கள் கெடும். ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். பற்களில் சொத்தை விழும். பயோரியா வரக் காரணமாகும். காயங்கள் ஏற்பட்டால் சீக்கிரம் ஆறாது. இரைப்பையில் புண் உண்டாகும். எலும்புகளின் உறுதி குறையும். இருதயத் தசை பலவீனமாகும். முகம் வெளுக்கும். கால், கை மூட்டுகளில் வலி காணும். இரத்தம் கெட்டு நீர்த்துப் போகும். குஷ்ட நோய் வரும்.

உடல் அணுக்களின் பலம் குறைந்து, அதைக் காத்துப் பிணைக்கும் சத்துக்குப் போஷணை கிடைக்கவில்லையானால் எதுதான் உண்டாகாது!

இந்த வைடமினைக் காயகற்ப மென்று சொன்னாலும் தகும். காயம் என்றால் உடல், கற்பம் என்றால் பலத்தை உண்டாக்கும் மருந்து என்று பொருள். உண்மையில் இந்த வைடமின் சி. காய கற்பமே யாகும். காயகற்பத்தின் மகத்துவத்தைப் பற்றி நமது சித்தர்கள் பாடியிருப்பதுதான் தெரியும். தற்காலத்தில் அதைச் செய்யத் தெரிந்தவர்கள் இருக்கிறார்களோ, என்னவோ தெரியாது. ஆனால் அந்தக் காய கற்பத்திலும் இந்த வைடமின் சி. க்குத்தான் பிரதான ஸ்தானம் இருக்கு மென்பதில் ஐயமில்லை. ஒரு வஸ்துவின் வேலையிலிருந்து அதன் குணங்களை அறியலா மல்லவா!

சிலர் வாலிபர்களாகவும் இருப்பார்கள். ஆனால் சதா சோர்வு கொள்ளுவார்கள்; ஆயாசப்படுவார்கள். வைத்தியர்களும் இன்ன நோய் என்று கண்டு பிடிக்க முடியாது. ஆனால் அவர்களுக்கு இந்த வைடமின் சி. சத்து கொடுத்து வந்தால் இந்தக் குறிகளெல்லாம் மாறிவிடும்.

வயதானாலும் இயற்கையாகவே அணுக்கள் பலம் குன்றி இந்தச் சத்து உடலிலிருந்து குறைவுபடும். அதனால்தான் வயதானவர்கள் இந்த சி. வைடமின் சத்துள்ள ஆகாரங்கள் அதிகம் சாப்பிட வேண்டும் என்று சொல்லுவது.

இந்தச் சத்து மற்ற சத்துக்களைப்போல உடலில் கல்லீரலோ தசைகளோ, அணுக்களோ சேகரித்து வைத்துக் கொள்ள முடியாது. தினசரி புதிது புதிதாய் நாம் உட்கொண்டே யிருக்க வேண்டும். உடல் தனக்கு வேண்டியதை எடுத்துக் கொண்டு மீதியைக் கழித்து விடும். ஒரு நாள் அதிகமாய்ச் சாப்பிட்டு மறுநாள் குறையச் சாப்பிடலாம் என்று இருக்க முடியாது.

அவ்வளவு முக்கியமான இந்தச் சத்து இயற்கையாய் எல்லாப் பொருள்களிலுமே பரவிக் கிடக்கின்றது. முக்கியமாய் பழங்கள், கீரைகள், காய்கறிகள் இவைகளில் இருக்கின்றது.

எல்லாவற்றிலும் இது இருந்தாலும் நாம் சமைக்கும்போது இந்தச் சத்து அழிந்து விடுகிறது. நெருப்பின் சூடு இதற்கு விரோதி. ஆகையால் பச்சையாகச் சாப்பிடக் கூடியவைகளைப் பச்சையாகவே சாப்பிடுவது நல்லது.

சாதாரணமாய் வேலை செய்கிறவர்களுக்குத் தினசரி வேண்டிய அளவு 75 மில்லி கிராம்தான். சிறு குழந்தைகளுக்கு ஐந்து வயது வரை 30 லிருந்து 50 மில்லி கிராம் வரை தேவைப்படும். வளரும் வயதாகிய பதின்மூன்று வயதிலிருந்து பதினெட்டு வயது வரையில் 100 மில்லி கிராம் வேண்டும். மாதர்கள் கர்ப்பமாய் இருக்கும் போதும், குழந்தைக்குப் பால் கொடுக்கும் போதும் 150 மில்லி கிராம் வரை இந்த வைடமின் சத்து வேண்டியதாய் இருக்கும்.

முதலில் இந்த வைடமின் சத்து எப்பொருளில் எவ்வளவு இருக்கிறது என்பதை அறிந்து பின் அவைகளைப் பெறும் விதம் அறிவோம். 3½ அவுன்ஸ் எடையுள்ள கீழ்க்காணும் பொருள்களில் இருக்கும் வைடமின் சி.யின் மில்லி கிராம் அளவு:

முளைக்கீரை 173. முருங்கைக்காய் 120. கொய்யாப்பழம் 299. முட்டைகோஸ் 124. பாகற்காய் 88. எலுமிச்சை 63. கொத்தமல்லி இலை 135. காலிபிளவர் 66. ஆரஞ்சு 68. முருங்கைக் கீரை 220. நெல்லிக்காய் 600. அன்னாசி 63 திராக்ஷை ரசம் 31. ஸ்டிராபெரி 52. தக்காளிப் பழம் 32.

மேற்குறித்தவைகளில் தவிர, மற்றும் சிலவற்றில் மிக இலேசாய் இருப்பதால் அவைகளைக் குறிக்க வில்லை. இந்த சி. வைடமின் சத்து அடுப்பில் சமைப்பதால் மாய்ந்துவிடு மாகையால் பச்சையாகவே சாப்பிட முயற்சி செய்ய வேண்டும். கொத்தமல்லி இலை எல்லாவற்றிலும் பச்சையாகவே போடலாம். சிலர் தாளிக்கும் போது போடுவார்கள். அப்படிச் செய்யாமல் தாளித்து எல்லாம் முடித்து இறக்கின பின் போட்டு மூடி வைத்துவிட வேண்டும். முட்டைகோஸ், காலிபிளவர் முதலியவைகளும் பச்சையாகச் சிறிதளவு சாப்பிடலாம். சமைப்பதானால் மிக இலேசான தீயில், சிறிதளவு ஜலம் விட்டுக் கொதிக்க வைத்து இவைகளைப் போட்டு வெந்ததும் இறக்கி விட வேண்டும். பொதுவாகவே எல்லாக் காய்கறிகளிலும் முதலிலேயே உப்பைப் போட்டு விடக்

கூடாது. அடுப்பிலிருந்து இறக்கிச் சிறிது நேரம் இருக்கும்போது உப்பைப் போட்டால் ஜீவ சத்துக்கள் அவ்வளவாக மாளாது.

அதற்காகத்தான் மற்ற நாட்டவர்கள் எதையும் வேக வைத்து மேஜையில் வைத்து விடுவார்கள். அவர்கள் சாப்பிடும் போது அவரவர்களின் ருசிக்குத் தகுந்தபடி உப்புத் தூள், மிளகுப் பொடி, கடுகுப் பொடி தூவிக் கொள்ளுவார்கள். எலுமிச்சைச் சாறு பிழிந்து கொள்ளுவார்கள். நம் நாக்கு போல் அவர்களுக்கு நீளம் கிடையாது. நாம் எல்லாம் சமைக்கும் போதே போட்டுத் தாளிப்பு செய்து விடுவோம். அவர்கள் தாளிப்பு வாசனையே அறியார்கள். அதனால் அவர்கள் நம்மை விட ஒரு விதத்திலும் குறைந்து விட்டவில்லை. அவர்கள் நன்றாகவே வளர்ந்து ஆரோக்கியமாய் இருக்கிறார்கள். நாம் உணவு ஞானம் இல்லாமல் வெறும் ருசிக்காகவே சாப்பிடுகிறோம். அவர்கள் ஆரோக்கியத்துக்காகச் சாப்பிடுகிறார்கள். முளைக் கீரை, முருங்கைக் கீரை, முருங்கைக்காய், பாகற் காய் முதலியவை சமைத்துத்தான் சாப்பிட வேண்டிய பொருள்கள். அவைகளையும் முன் சொன்னது போல் வேக வைத்துச் சாப்பிட்டால் நல்லது.

மற்றும் திராட்சை, கொய்யா, எலுமிச்சை, நெல்லிக்காய், ஆரஞ்சு, அன்னாசி, ஸ்டிரா பெரி, தக்காளிப்பழம் இவைகள் எல்லாம் அடுப்பேற்றாமல் உபயோகப்படுத்தக் கூடியவையே. இவற்றில் எலுமிச்சை உப்புப் போட்டு ஊறுகாய் போட்டுச் சாப்பிடலாம். காரம் அதிகம் இல்லாமல் ஊறுகாய் போடலாம். நெல்லிக் காயும் ஊறுகாய் போடலாம். நெல்லிக்காய் சிறந்த கற்பம் என்று சொல்லுவார்கள். ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டால் இரண்டு ஆரஞ்சுப் பழம் சாப்பிட்டதற்கு ஒப்பாகும். (தொடரும்)

★ உலகத்தின் எந்த தேசத்தைச் சேர்ந்தவரா யிருந்தாலும், தேசபக்தி என்பது எல்லோருக்கும் பொது.—அதை விளக்குகிறது இந்தக் கதை. உண்மையாக நடந்தது இது. ஹிந்தியிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்துள்ள சரித்திரக் குறிப்புகளை ஆதாரமாக வைத்து எழுதப்பட்டது.

வீரப் புதல்வி

எம். எல். சபரிராஜன்

1936-ம் வருஷம்.

அப்போது இத்தாலியில் முஸோலினியின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. அவர், தம் நாட்டை உலகத்திலேயே பெரிய வல்லரசாக ஆக்க விரும்பினார். பழங்காலத்தில் ரோம சாம்ராஜ்யம் பெரும் புகழுடன் விளங்கியதுபோல, இப்போது இத்தாலியின் செல்வாக்கும் ஆதிக்கமும் எங்கும் பரவ வேண்டுமென்று ஆவல் கொண்டார். இதற்கு என்ன செய்வதென்று யோசித்தார். இத்தாலியோ, சின்ன நாடு. அதை மாத்திரம் வைத்துக் கொண்டு என்ன செய்வது! பிற நாடுகளைக் கைப்பற்றினால்தான் சொந்த நாட்டைப் பெரிதாக்க முடியுமென்று தீர்மானித்தார்.

உடனே, அபிஸீனியா நாட்டின் மீது படையெடுத்து விட்டார்.

அபிஸீனியா ஆப்பிரிக்காக் கண்டத்தின் வட கோடியில் இருக்கிறது. காடும் மலையும் நிறைந்த நாடு. தற்கால நாகரிகம் அதிகமாய்ப் பரவாத பூமி. உலகத்தைப் பற்றி அவர்களுக்கு அதிகமாய்த் தெரியாது. படிப்பு குறைவு. பயிர்த் தொழில் போன்ற பண்டைக்காலத் தொழில்களில் ஈடுபட்டு வாழ்க்கை நடத்தி வந்தார்கள்—யாருக்கும் ஒரு தீங்குகூட நினைக்காத மக்கள்.

இத்தகைய தேசத்தைத் தாக்கினார் முஸோலினி.

பீரங்கிகள், நெருப்புக் குண்டுகள், டாங்குகள்—போன்ற எல்லாவிதமான நவீன ஆயுதங்களுடன் போர் தொடங்கினர். விமானங்கள் குண்டுமாரி பொழிந்து, நாடு நகரங்களைத் தவிடு பொடியாக்கின. பாவம், அபிஸீனிய மக்களுக்கு யாருடைய உதவியும் கிடைக்கவில்லை. வல்லரசுகள் கையைக் கட்டிக் கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தன,—ஆயினும் அந்த வீரமக்கள் பணியவில்லை. தாய் நாட்டின் ஒவ்வோர் அங்குல பூமிக்கும் உயிரைக் கொடுத்துப் போராடினார்கள். ஆயிரக் கணக்கான மக்கள் செத்துச் சவமாகி, ஆங்காங்கே மலைபோலக் குவிந்து கிடந்தார்கள். இத்தாலியப் படை அவர்களைக் கடந்து முன்னேறிச் சென்று கொண்டிருந்தது. ஆனால், அவர்கள் ஒரு பெருங் கஷ்டத்தைச் சமாளிக்க வேண்டியதா யிருந்தது.—அங்கு காடுகளும், மலைகளும் கூடி மல்லவா!—தோற்றுப் போன அபிஸீனியப் படைகள் காடுகளில் புகுந்து மறைவாக இருந்துகொண்டு, முன்னேறிச் சென்ற எதிரிப் படைகளைப் பின்புறமாகத் தாக்கி வந்தார்கள். இது இத்தாலியப் படைகளுக்குப் பெருந் தொல்லையா யிருந்தது.

** ** **

ஒரு நாள்—

போர்க்களத்தில் தோற்ற ஓர் அபிஸீனியப் படைத்தலைவன், தன் வீரர் சிலருடன் ஒரு சிறு கிராமத்து வழியாய்த் தப்பியோடினான். அந்தக் கிராமத்தில் யாருமே இல்லை,—ஒரே ஒரு பெண்ணைத் தவிர. அவளுக்கு வயது பதினேழு அல்லது பதினெட்டு இருக்கும். வாசலில் உட்கார்ந்தபடி, கவலையுடன் ஏதோ ஒரு யோசனையில் மூழ்கியிருந்தாள். அவள் தந்தை, சகோதரர்கள், உற்றார் - உறவினர் எல்லோரும் போரில் இறந்து விட்டார்கள். தான் என்ன செய்வது, எங்கு போவது என்பதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தாள் போலும்!

அந்தப் பெண்ணைப் பார்த்தான் படைத்தலைவன். உடனே நின்றான்.

"ஸிலியா!" என்று சற்று உரத்துக் கூவினான். 'தங்கையே' என்று அதற்குப் பொருள்.

அந்தப் பெண் திடுக்கிட்டு எழுந்து நின்றாள்.

"இதோ பார், எங்களைத் துரத்திக் கொண்டு எதிரிகள் வருகிறார்கள். நாங்கள் எந்தப் பக்கம் போனோமென்று அவர்கள் உன்னைக் கேட்பார்கள். நீ உண்மையைச் சொல்லி விடாதே. சொல்லி விட்டாயோ, ஆபத்து! — எங்களைப் பிடித்து விடுவார்கள். அப்புறம், நாங்கள் யுத்தத்தில் கலந்து கொள்ள முடியாது—என்ன!"

"ஆகட்டும், அப்படியே செய்கிறேன்" என்றாள் அந்தப் பெண்.

அப்போது அவள் முகத்தில் ஒரு பிரகாசம் தோன்றியது. தற்காலிகமாக அவள் எல்லாக் கவலைகளையும் மறந்து விட்டவள் போலானாள்.

படைத் தலைவன் ஓடி மறைந்தான்.

அரை மணி நேரம் கழிந்திருக்கும். அபிஸீனிய வீரர்களைத் துரத்திக்கொண்டு பின்னால் ஓடி வந்தார்கள் இத்தாலியர்கள்.

அந்தக் கிராமத்துக்குள்ளே புகுந்ததும், பாதை மூன்று திக்குகளில் பிரிந்தது. எவ்வழி செல்வதென்று அவர்களுக்குத் தெரியவில்லை. யோசித்துக் கொண்டே கொஞ்ச தூரம் போனதும், அந்தப் பெண்ணை,—'குயிங் போ'—வைக் கண்டார்கள். முன் போலவேயே அவள் வாசலில் உட்கார்ந்திருந்தாள்—ஒன்றுமறியாதவள் போல.

காப்டன் அவளைப் பார்த்து, "பெண்ணே, இந்தப் பக்கமாகச் சிலர் ஓடி வந்தார்களே, அவர்களைப் பார்த்தாயா!" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாதே!" என்றாள் குயிங் போ.

"உண்மையாய்த் தானா!" என்று அதட்டிக் கேட்டான் காப்டன்.

"ஆம், நான் பார்க்கவே யில்லை" என்றாள் அவள் அமைதியாக — கொஞ்சங்கூட பயம் என்பதே இல்லாமல்.

"பொய்; முழுப் பொய். அதெப்படி அவர்களைப் பார்க்காமல் இருக்க முடியும்! அவர்கள் ஓடிவந்த சத்தம் ஒரு மைலுக்கு அப்பாலிருந்தாலும் கூடக் கேட்டிருக்குமே" என்றான் வீரருள் ஒருவன்.

"கள்ளி; உண்மையை மறைக்கிறாய்!" என்றான் மற்றொரு வீரன்.

காப்டனுக்கோ, அவசரம், பரபரப்பு; அவர்களை உடனே பிடிக்க வேண்டுமென்ற ஆத்திரம்.

"நிஜத்தைச் சொல்!" என்று பயங்கரமாய் அதட்டினான் அவன்.

"எனக்குத் தெரியாது" என்று அவள் மிகவும் அலட்சியமாய்ப் பதிலுரைத்தாள்.



காப்டனுக்குக் கோபம் பொங்கிற்று. "இதோ உனக்குப் புத்தி வரவழைக்கிறேன்" என்று சொல்லி விட்டு, சாட்டையால் அவளை அடிக்கத் தொடங்கினான்.

அவள் துடித்தாள்; அலறினாள். "ஐயோ!" "ஐயோ!" என்று அழுது புலம்பினாள். ஆனால் தீரம் நிறைந்த அப் பெண்மணியின் வாயிலிருந்து வேறு ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை.

சற்று நேரம் வரை அடித்த பிறகு, அடிப்பதை நிறுத்திவிட்டு, "என்ன, இப்போதாவது சொல்லுகிறாயா!" என்று கேட்டான்.

"எனக்குத் தெரியாதே!" என்றாள் அவள், கண்களில் நீரை வடித்துக் கொண்டே.

"யாரை ஏமாற்றுகிறாய்!—உனக்கு அது தெரியாது என்பதை நான் எப்படி நம்புவேன்!–பேசாமல் உண்மையைச் சொல்லிவிடு. ஏன் வீணாக அடி வாங்கிச் சாகிறாய்! நீ உண்மையைச் சொல்லும் வரை உன்னை விடப் போவதில்லை" என்றான் அந்த மூரடன்.

"எனக்குத் தெரியாது; தெரியவே தெரியாது. என்னை விட்டு விடுங்கள்" என்று நடுங்கித் துடித்துக் கொண்டே சொன்னாள் குவிங் போ.

"அப்படியானால், தெரியும்படி செய்கிறேன்" என்று சொல்லிவிட்டு, மீண்டும் அவளைப் பலமாக, கடுமையாக அடிக்கத் தொடங்கினான், இரக்கம் என்பதே கொஞ்சமுமற்ற அந்த அரக்கன்.

அவள் ஓடினாள்; குதித்தாள்; விழுந்தாள்; எழுந்தாள்; வேண்டினாள்; அழுதாள்.

கடைசியில், எவ்வளவு நேரந்தான் ஒரு ஜீவன் உயிரோடு சித்திரவதையை அனுபவித்துக் கொண்டிருக்க முடியும்! — 'உண்மையை மறைக்காமல் சொல்லிவிட வேண்டியதுதான்' என்ற முடிவுக்கு வந்தாள் அவள். ஆனால், உடனே, – மறுகணமே– அதை நினைத்துத் திடுக்கிட்டாள்.

"ஆ, என்ன நினைத்தேன்! என்ன காரியம் செய்யத் துணிந்தேன்! எவ்வளவு பெரிய தேசத் துரோகம்!-ஆண்டவனே!"

இப்போது அவளை ஒரு புதிய பயம் பற்றிக் கொண்டது. "ஒரு வேளை, வலி பொறுக்க முடியாமல், என்னையறியாமலே என் வாய் சொல்லி விடுமோ! அப்படியானால், என்ன செய்வது!"—அவள் யோசித்தாள். ஒரு கணந்தான்—உடனே ஒரு முடிவுக்கு வந்தாள்.

"நிறுத்துங்கள்; சொல்லி விடுகிறேன்" என்றாள்.

"அப்படி வா வழிக்கு!" என்று சொல்லி விட்டு காப்டன் அடிப்பதை நிறுத்தினான்.

"இதோ, வந்து விட்டேன்" என்று சொல்லி விட்டு உள்ளே போனாள். அங்கு மூலையில் கிடந்த ஒரு கத்தியை எடுத்தாள். அப்புறம்!—

என்னவென்று சொல்வது! எப்படிச் சொல்வது!

கத்தியை வாய்க்குள்ளே கொண்டு போனாள். நாக்கைக் 'கரகர' வென்று அறுத்துக் கீழே எறிந்தாள். உதிரம் பெருக்கெடுத்து வழிந்தது.

இந்தத் தியாகத்தைப் பார்த்தான் இத்தாலியப் படைத் தலைவன்—காப்டன்.

"அடி மோசக்காரி! எங்களை ஏமாற்றி விட்டாயே!" என்றான் ஆக்ரோஷத்துடன். "அடியுங்கள்! சாட்டையால் அடித்து இவளைக் கொல்லுங்கள்" என்று தன் வீரர்களுக்குக் கட்டளை யிட்டான்.

அவர்களும் அடித்தார்கள்; மேலும், ஒரு கால் மணி நேரம் வரை மாற்றி மாற்றி அவளை அடித்தார்கள். வீரப் புதல்வி குவிங் போ மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தாள்.

அந்தக் கொலைகாரர்கள், மனித உருவில் வந்த பேய்கள்,-எமதூதர்கள்-இப்போது திருப்தியடைந்தார்கள். அவ்விடத்தை விட்டு அகன்றார்கள்.

மாலை கழிந்தது; இரவும் மறைந்தது; பொழுதும் புலர்ந்தது.

அவள்—அருமைக் குவிங் போ—எழுந்திருக்கவேயில்லை.—எழுந்திருக்கவே மாட்டாள். தந்தை சென்ற உலகத்துக்கு அவள் போய் விட்டாள். தாய்நாட்டின் நலத்துக்காக உயிரைத் தத்தம் செய்த மகா தியாகிகளில் ஒருத்தியாகி விட்டாள்!



ஆற்றங்கரையினிலே

4. புகார் நகரம்

தமிழ் நாட்டிலே பட்டணங்கள் பல உண்டு. அவற்றுள்ளே ‡சாலச் சிறந்தது சென்ன பட்டணம். ஆயினும், சென்னை உருப்படுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னமே சோழ மண்டலக் கரையில் ஒரு பட்டினம்* சிறந்து விளங்கிற்று. காவிரி யாறு கடலொடு கலக்கும் இடத்தில் காட்சிக்கு இனியதாய் வீற்றிருந்த அப் பட்டினம். காவிரிப்பூம் பட்டினம் என்று பெயர் பெற்றது. இக்காலில் பட்டணம் என்பது சென்ன பட்டணத்தைக் குறித்தல் போலவே முன்னாளில் பட்டினம் என்பது காவிரிப்பூம் பட்டினமே. பொன்னி என்னும் காவிரியாற்றின் நன்னீர் பாய்ந்து புனிதமாக்கிய மூங் நீர்த் துறையில் அமைந்த பட்டினத்தைப் 'புகார் நகரம்' என்றும் புலவர்கள் போற்றுவார் ஆயினர்.

"பொன்னி நன்னதி மிக்கநீர் பாய்ந்து
புணரி† தன்னையும் புனிதமாக் குவதோர்
நன்னெடும் பெருந் தீர்த்தம் முன்னுடைய
நலம் சிறந்தது வளம்புகார் நகரம்"

என்று பெரிய புராணம் பாடிற்று.

சோழ நாட்டை ஆண்ட கரிகாற் சோழன் என்னும் திருமா வளவன் புகார் நகரத்தைத் திருத்தினான்; தலைநகர் ஆக்கினான். "குண கடலின் கோமகள்" என்று எந்நாட்டவரும் புகழத் தக்க ஏற்றமும் தோற்றமும் அளித்தான். அதனால் வாணிகம் சிறந்தது; செல்வம் செழித்தது; மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது.

இவ்வாறு நாட்டுக்குப் பெருநலம் புரிந்த திருமாவளவனைப் புலவர்கள் பாமாலை அணிந்து போற்றினர்: பொது மக்கள் மனமார வாழ்த்தினர். அம் மன்னன் பெற்ற பாமாலைகளுள் ஒன்று "பட்டினப் பாலை." பட்டினம் என்ற பெயரைத் தனக்கே உரிய தாக்கிக் கொண்ட காவிரிப்பூம் பட்டினத்தின் சிறப்பும், அங்கு அரசு வீற்றிருந்த வளவன் பெருமையும் அப் பாட்டில் அழகாகக் காட்டப் படுகின்றன. சோழ வள நாட்டில் "வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரியின் செழும் புனல் பொன் கொழிக்கும்" என்று பாடுகின்றது பட்டினப் பாலை.

பசிப்பிணியின் பகைவனாகிய திருமாவளவன் வெற்றிடங்களை யெல்லாம் விளைநிலம் ஆக்கினான்; காடுகளை வெட்டித் திருத்திக் கழனி யாக்கினான். காவிரி நீரைக் கால்களின் வழியாக எடுத்துக் குளங்களில் நிரப்பி வளம் பெருக்கினான். கடல் வழியாகவும் தரை வழியாகவும் பல நாட்டுப் பொருள்களும் புகார் நகரத்தில் வந்து நிறைந்தன. கப்பல்கள் இடையறாது போக்குவரவு புரிந்து கொண்டிருந்த துறைமுகத்தில் உயரிய விளக்கொன்று நின்று ஒளி வீசியது. தரையிலே தவழ்ந்து வரும் குழந்தையை முகமலர்ந்து கை நீட்டி அழைக்கும் தாய் போல், கடலில் மிதந்து வந்த கப்பல்களைக் கதிர்க்கரம் விரித்து வரவேற்றுத் துறைமுகத்துக்கு அழைத்த அவ் ஒளி நிலயம் (lighthouse) 'கலங்கரை விளக்கு'‡ என்று பெயர் பெற்றது.

இரு பாக்கங்களை உடையதாய் விளங்கிய பட்டினத்தின் நடுவே பெரியதோர் அங்காடி (market) அமைந்திருந்தது.

"கொடுப்போர் ஓதையும் கொள்வோர் ஓதையும்
நடுக்கின்றி நிலைஇய நாளங்காடி"

என்று அவ் அங்காடியின் இரைச்சலைப் பாடினார், இளங்கோவடிகள். பகலும் இரவும் பண்டமாற்று நிகழ்ந்த பட்டினத்தில் நாளங்

---

* பட்டினம் என்பது கடற்கரை நகரம்.

† புணரி—கடல்

‡ கலம்-கப்பல்; கரைதல் - அழைத்தல்; கலங்கரை விளக்கு என்பது கப்பல்களை (துறைமுகத்துக்கு) அழைக்கும் விளக்கு.



காடியோடு, *அல்லங்காடியும் நடைபெற்றது. அங்காடி என்னும் அழகிய தமிழ்ச் சொல் இப்பொழுது பழகு தமிழில் பெரும்பாலும் வழங்குவதில்லை. எனினும் தமிழினத்தைச் சேர்ந்த கன்னடத்திலும், தெலுங்கிலும், மலையாளத்திலும் அச் சொல் இன்றும் வழங்கி வருகின்றது. காவிரிப்பூம் பட்டினத்திலே பிறந்து, அத் தொன்னகரின் பெருமை யெல்லாம் தன் பெருமையாக்கிக் கொண்ட பட்டினத்தடிகள் நெஞ்சுருகிப் பாடுகின்ற பாட்டிலே இச் செஞ்சொல் பயின்றுள்ளது.

"செங்காட்டில் ஆடுகின்ற தேசிகனைப் போற்றுமல்
அங்காடி நாய்போல் அலைந்தனையே நெஞ்சமே"

என்பது அவர் திருவாக்கு. ஆங்கிலச் சொல்லாகிய 'மார்க்கட்' வந்து அங்காடியை வழக்காற்றினின்றும் அகற்றி விட்டது. சென்னையிலுள்ள அந்திக் கடைத் தெருவை அல்லங்காடி என்றும், மூர்மார்க்கட்டை மூரங்காடி என்றும் அழைத்து நாம் இன்புறும் நாள் எந்நாளோ?

இறவாத புகழ் உடைய ஆன்றோர் பலரை ஈன்ற பெருமையும் புகார் நகரத்திற்கு உண்டு. கற்பின் செல்வியாகிய கண்ணகி பிறக்கும் பேறு பெற்ற நகரம் புகார் நகரமே! அம் மங்கையை மணந்து, சில காலம் மனையறம் புரிந்து, பின்பு மாதவியின் மையலிலே தாழ்ந்த கோவலனைக் கானல் வரிப் பாட்டால் பிரித்து, சிலப்பதிகாரக் காவியத்துக்கு அடிப்படை கோலிய நகரமும் அதுவே. புனித மாதவன் என்று புகழப் பெற்ற புத்த சங்கத் துறவியாகிய அறவணவடிகள் வாழ்ந்த நகரமும் அதுவே. "இல்லையே என்னாத இயற்பகையார்" என்று தேவாரத்தில் போற்றப்பட்ட திருத்தொண்டரைத் தந்த நகரமும் அதுவே.

திருமாவளவன் அரசு புரிந்த காலத்தில் கலைமகளும், திருமகளும் புகார் நகரத்தில் களிநடம் புரிவாராயினர். இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் மன்னன் ஆதரவு பெற்று முறையாக வளர்ந்தன. வரிசை யறிந்து பரிசளித்த வளவனை நாடி வந்தனர் நல்லியற் கவிஞர். பட்டினப் பாலை பாடிய கடியலூர்க் கவிஞருக்குத் திருமாவளவன் பதினாறு லட்சம் பொன் பரிசளித்தான் என்று கலிங்கத்துப்பரணி கூறுகின்றது. இன்னிசைக் கருவிகளாகிய குழலினும் யாழினும் தமிழ்ப் பாட்டிசைக்க வல்ல பெரும் பாணர்கள் புகார் நகரத்தில் செழிப்புற்று வாழ்ந்தனர்.

---

*அல்-இரவு: அல்லும் பகலும் என்ற தொடர் இன்றும் வழங்குகின்றது.

" குழலினும் யாழினும் குரல்முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும் பெறல் மரபின் பெரும்பாண் *
இருக்கையும் "

என்று அன்றைய இசைப் புலமையைப் பாராட்டுகின்றது சிலப்பதிகாரம்.

அரசன் சபையில் ஆடல் பாடல்களை அரங்கேற்றும் வழக்கமும் அந்நாளில் இருந்தது. மாதவி என்னும் அழகிய மங்கை ஐந்தாண்டில் ஆடலும் பாடலும் பயிலத் தொடங்கிப் பன்னிராண்டில் அக்கலைகளை அரசன் சபையில் அரங்கேற்றிப் பரிசு பெற்ற செய்தி சிலப்பதிகாரத்தில் விரித்துரைக்கப்படுகின்றது.

தமிழ் மக்கள் என்றும் இறைவனை வழிபடும் இயல்புடையவர். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கும் வழக்கம் தமிழ் நாட்டில் இல்லை. பல நாட்டு மக்களும் கலந்து வாழ்ந்த காவிரிப்பூம்பட்டினத்தில் சைவமும், வைணவமும், சமணமும், சாக்கியமும் இணக்கமுற்று வாழ்ந்தன.

§" பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
....
நீலமேனி நெடியோன் கோயிலும்
மாலைவெண்குடை மன்னவன் கோயிலும்
அறவோர் பள்ளியும் அறனோம் படையும் "

அந்நகரில் அமைந்திருந்தன என்று சிலம்பு பாடுகின்றது. திருவிழாக்களும் சிறப்பாக நடைபெற்றன. நாட்டிலே பசியும், பிணியும், பகையும் நீங்கி, வசியும் வளமும் நிலைபெறும் பொருட்டு மருத நிலத்தெய்வத்திற்கு ஆண்டுதோறும் திருவிழாக் கொண்டாடினர் புகார் நகரத்தார். இருபத்தெட்டு நாள் தொடர்ந்து நடந்த அத்திருவிழாவில் சிறந்த ஆடலும் பாடலும் நிகழ்ந்தன; தெய்வமணம் கமழ்ந்தது.

இவ்வாறு பல்லாற்றானும் சிறப்புற்றிருந்த பூம்புகார் நகரம் இப்பொழுது சீரழிந்த சிற்றூராகக் கடற்கரையில் துஞ்சுகின்றது. கருங் கடல் பொங்கி எழுந்து அந்நகரின் பெரும் பகுதியை விழுங்கி விட்டதாகத் தெரிகின்றது. கொடுங் கடல் நல்நகரத்தைக் கொள்ளை கொண்டபோது திருமாவளவன் வழி வந்த சோழன் "குழைக்கின்ற கவரியின்றி, கொற்ற வெண் குடையும் இன்றி" எளியனாய்த் தமியனாய் வெளியேறினுன்;

" விரிதிரை வந்து வியன்நகர் விழுங்க
ஒருதனி போயினன் உலக மன்னவன் "

என்று மணிமேகலை கூறும் செய்தி மனத்தை உருக்குவதாகும்!

---

* பெரும்பாண் - பெரும் பாணர்; பண்ணோடு இசை பாடுபவர் பாணர்.

§ பிறவா யாக்கைப் பெரியோன் - சிவபெருமான்.
நீலமேனி நெடியோன் - திருமால்.
மாலைவெண்குடை மன்னவன் - வாசவன்.

ராஜாச்சுழி ரங்கம்



கு. பஞ்சாபகேசன்

கொட்டிலில் கட்டியிருந்த சோடிக் காளைகளில் ஒன்று, கம்பீரத்துடன் கத்தியது. கொட்டிலுக்கு வெளியே, இருள் போர்வையிலும் அசாத்தியமான பனியிலும் சிக்கிக் கிடந்தது உலகம்.

மெதுவான உறுமலாலும், காளையின் குரல் சற்று எட்டக் கட்டியிருந்த சிறு கொட்டிலில் படுத்திருந்த முருகையனுக்கு நன்றாகக் கேட்டது. தூக்க மயக்கத்தில் வலது புறத்தில் திரும்பிப் படுத்துக் கொண்டானே தவிர, அவன் எழுந்து செல்ல விரும்பவில்லை.

மறுபடியும் காளையின் குரல். தலையோடு காலாய்ப் போர்த்திக் கொண்டு படுத்திருந்தாலும், விழிப்பில்தான் இருந்தான் முருகையன். பலமுறையும் காளையின் குரல் கேட்கவும், போர்வையை அகற்றிக் காதுகளைத் தீட்டிக் கொண்டான்.

ரங்கத்தின் உறுமல்தான் அது. ரங்கம் ஒன்றுக்குத்தான் அத்தகைய கனைப்பு உண்டு. இரவு வேளையில் அன்னியன் ஒருவன் பக்கத்தில் வந்தால் ரங்கம் இந்த மாதிரிக் குரல் கொடுக்கும்.

'மே......ங் !'

மூன்றாவது முறையும் குரல் வந்து விடவே, முருகையன் போர்வையை உதறி விட்டு எழுந்திருந்து விட்டான். உடலுடன் உள்ளத்தையும் உறைத்தது குளிர். கண்கள் பொட்டையாகி விட்டனவோ என்று சொல்லும்படியாக வெளியே இருள் பரந்து கிடந்தது.

ஹரிக்கேன் லாந்தரை ஏற்றிக் கொள்ளலாம் என்கிற நினைப்பில், இடுப்பில் நெருப்புப் பெட்டியைத் தேடினான் முருகையன். மடியில் தீப்பெட்டி இல்லை. 'ஒன்றுமிருக்காது' என்று தன்னைத் தேற்றிக் கொண்டு, மறுபடியும் படுத்து விடுவோமா என்று நினைத்தான் முருகையன்.

ஆனால் அவன் மனச்சாட்சி மிராசு எஜமானரின் சொற்களை அவனுக்கு ஞாபகப் படுத்தியது. "காளைகளைச் சாக்ரதையா ஓட்டிக்கிட்டுப் போ. ரங்கத்தின் பேரிலே எப்பவுமே கண்ணாயிரு. ராஜாச் சுழியைக் கண்டா சும்மா விடமாட்டாங்க, பசங்க. முருகையா! நான் உனக்கொண்ணும் சொல்ல வேண்டியதில்லை. இன்னிக்கு நாலாம் நாள் காலையிலே நான் ரயில் வண்டியிலே வந்து சேர்ந்துப்பிடறேன், திருவண்ணாமலைக்கு!" என்ற மிராசு எஜமானின் குரல் 'கணீர் கணீர்' என்று முருகையனின் நெஞ்சத்தில் கேட்டது.

கையில் உருண்டைத் தடியை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

"யார் அங்கே!" என்றான்.

"மே...ங்" என்று காளை கத்தியது.

"யார்ரா அவன்!"

"மே...ங் !"

கொட்டிலுக்கு அருகில், ரங்கத்தின் பக்கத்தில் போய் நின்று, உற்றுப் பார்த்தான். இருட்டில் சில நிமிஷங்களுக்குப் பழக்கப்பட்டுப் போன கண்களுக்கு, அந்தச் சூழ்நிலைக்குள் ஏதோவொரு விதமான ஒளி ஏற்பட்டு விடுவது சகஜம்தானே!

ரங்கம் அசையாமல் படுத்திருந்தது. அதைத் தட்டிக் கொடுத்தான் முருகையன். உடனே தன்னுடைய கம்பீரமான ஆகிருதியை உலுக்கித் தூக்கிக் கொண்டு எழுந்தது ரங்கம்.

ரங்கத்துக்கு உடம்பு சுகமில்லை என்று உடனே உணர்ந்து கொண்டான் முருகையன். அந்தக் கணமே கவலை அவன் மனத்தை உடும்பாய்ப் பிடித்துக் கொண்டு விட்டது. அடுத்த நாள் நின்று மறுநாள், திருவண்ணாமலை மலையடிவாரத்தில் பெரிய மாட்டுச் சந்தை கூடுகிறது. அந்தச் சந்தைக்காகத் தம் எஜமானர் தம்முடைய பண்ணையில் வைத்து வளர்த்த காளைகளுள் நாலு சோடிகளை, முருகையன் வசம் ஒப்புவித்து அனுப்பித்திருந்தார். அவற்றில் இந்த ராஜாச் சுழி ரங்கத்தின் பேரில்தான் அவருக்கு ஒரு கண் இருந்தது. அந்தக் காளைக்கு உடல்நிலை சரியாக இல்லை.

அப்புறம் முருகையனுக்குத் தூக்கம் வருமா! அல்லது குளிர்தான் எடுக்குமா!

★

வட ஆற்காடு ஜில்லாவைச் சேர்ந்த இருஞ்ணுபுரம் என்ற கிராமத்தில் துரைசாமி ரெட்டியாருக்கு மிகப் பெரிய மிராசு இருந்தது. கரும்புக் காடுகளும் சோளக் கொல்லைகளுமாகக் கண்ணுக் கெட்டிய தூரம் வரைக்கும் இருந்தது அவருக்கு; வானம் பார்த்த சீமை என்று வருஷ ருதுக்களை எதிர்பார்த்து நாட்களை வீணாக்காமல், ஐந்தாறு 'பம்பு செட்'டுகள் வைத்துத் தமது 'வெள்ளாமையை' நடத்திக் கொண்டிருந்தார் அவர். வெல்லத்துக்குத் தட்டு ஏற்பட்ட போதெல்லாம் ரெட்டியார் பாடு கொள்ளை.

ரெட்டியார் மேழிச் செல்வ போகத்திலெல்லாம் தலையாக இருந்தது அவர் மாட்டுச் செல்வம்.

மாடு பிடிக்கப் பக்கத்து ஊர்ச் சந்தைகளுக்குப் போகாமல், நேரே ரெட்டியார் பண்ணைக்கே வந்து, அவர் சொல்லும் விலை கொடுத்து, மாடு பிடித்துப் போவார்கள் அநேகர்.

சுழி சுத்தத்துக்குப் பேர் போனவை ரெட்டியாருடைய காளைகள்.

துரைசாமி ரெட்டியார் பண்ணையில், அவருடைய நேரான கண்காணிப்பில், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்திருந்ததுதான் ரங்கம். ரங்கத்தை அதன் தாய் பெற்றது அந்தத் தாய்க்குப் பெருமையாக

இருந்திருக்குமோ இல்லையோ, பண்ணையில் ரங்கம் வளைய வருவது ரெட்டியாருக்குப் பிடிபடாத பெருமையாகத்தான் இருந்தது.

காரணம், அந்த ரங்கம் சாதாரணமா யில்லை; பிறப்பினால் ராஜாவாக இருந்தது; ராஜாச் சுழி ரங்கமா யிருந்தது அது. அதன் கழுத்தை யொட்டி வலது புறத்தில், ஸ்பஷ்டமாக ஒரு சுழி விழுந்திருந்தது.

ஒரு மாட்டுக்கு இந்த இடத்தில் சுழியிருந்து விட்டால், அந்த மாட்டின் அருமையை மேற்கொண்டு பார்க்கவே தேவையில்லை. கண்ணை மூடிக் கொண்டு, கேட்கப்படும் எந்த விலையையும் கொடுத்து அந்தக் காளையை வாங்கி விடலாம்.

இந்த வருஷம் திருவண்ணாமலை பெரிய சந்தைக்கு, தாம் பிரிய விரும்பாத ரங்கத்தைச் சோடி சேர்த்து, ரெட்டியார் அனுப்பித்திருந்தார் என்று கேள்விப் பட்டதும், மடியில் பச்சை நோட்டுகளைக் கட்டிக் கொண்டு, திருவண்ணாமலைக்குப் பஸ் ஏறியவர்கள் அநேகர்.

துரைசாமி ரெட்டியாருக்குக் காட்டுப்பாடியில் வேறு ஏதோ முக்கிய காரியம் இருந்ததால், திருப்பத்தூரிலிருந்து காட்டுப் பாடிக்குப் போய் விட்டு, அங்கேயிருந்து நேரே திருவண்ணாமலைக்கு வந்து சேருவதாகத் தெரிவித்திருந்தார் முருகையனிடம். அந்தப்படிக்கே ரெட்டியார் புறப்பட்டார். திருவண்ணாமலைத் தலத்தைப் பார்க்க வேண்டும் என்ற ஆசையிலும் விலை போவதற்கு முன்பு ரங்கத்தை ஒரு முறை பார்க்க வேண்டும் என்ற ஆசையிலும் ரெட்டியாருடன் புறப்பட்டாள் அவருடைய அருமைக் குமாரி சௌபாக்கியம்.

★

முருகையனுக்கு வயோதிகம் வந்துகொண்டிருந்த பருவம்தான். எஜமான விசுவாசத்தில் வயதுக்கு மீறிய காரியங்களை, அஞ்சாமல், அவன் ஆற்றிக்கொண்டிருந்ததும் உண்மைதான். ஆனால் ரங்கத்துக்கு இப்படியாகும் என்று அவன் நினைக்கவில்லை யாதலால், மனம் இடிந்து தான் போனான்.

திருவண்ணாமலை கால்நடை ஆஸ்பத்திரிக்கு அதை ஓட்டிக் கொண்டு போனான். 'சந்தைக்கு வந்திருக்கும் காளையா! சரியான புள்ளி' என்று போகிற வழியெல்லாம் ரங்கத்தைப் பார்த்துப் பார்த்துக் கண் போடாதவர் இல்லை. ஆஸ்பத்திரி டாக்டர் கூட ரங்கத்தை ஏற இறங்க ஒரு முறை அண்ணாந்துதான் பார்த்தார். 'மயிலத்து ரகக் காளையோ!' என்று கேட்டாரே தவிர, ரங்கத்துக்கு மருந்து கொடுக்க வேணும் என்கிறதையே மறந்து விட்டார் அவர்.

“காளைச் சந்தை தினமுங்க. கொஞ்சம் கவனிச்சுச் செய்யணுங்க ...” என்று கெஞ்சாத குறையாக டாக்டரிடம் சொன்னான் முருகையன்.

அவர் மருந்து கலந்து கொடுத்தார். தீனியுடன் சேர்த்துக் கலந்து கொடுக்கும்படி சொன்னார்.

★

முருகையன் ஸ்டேஷனுக்குப் போயிருந்தான். அன்று காலை வண்டியில் துரைசாமி ரெட்டியாரும் சௌபாக்கியமும் வந்து இறங்கினார்கள்.

“அட, குழந்தைகூட வந்திருக்கு!” என்று மகிழ்ச்சியில் கூவினான் முருகையன்.

கிராமச் சூழ்நிலையில் வளர்ந்த சௌபாக்கியத்துக்கு இயற்கை யழகு நிறைந்திருப்பதில் தவறொன்று மில்லை. செழிப்பான மேனி; தன் தாயைக் கொண்டு பிறந்திருந்த அவள், தந்தை நிறத்தை யொத்திருந்தாள். காதிலும் மூக்கிலும் வைரங்கள் பளிச்சிட்டன; கழுத்தில் எத்தனை வடம் என்று சொல்ல முடியாதபடி சங்கிலிகளைச் சுற்றிக் கொண்டிருந்தாள். ஸாமுத்ரிகா லட்சணங்களுக்குச் சற்றும் மீறிப் போகாத அங்க அழகு. பிளாட்பாரத்தில் அன்னம் நடந்து வந்ததோ என்று சொல்லும்படியாக நடந்து வந்துகொண்டிருந்தாள் சௌபாக்கியம்.

“காளைங்களை யெல்லாம் சாக்ரதையா ஓட்டி வந்திட்டே யில்லே!”

“வந்திட்டேன் சாமி, ஆனா...”

“ஆனா, என்ன!”

“ரங்கத்துக்கு நேத்துக் கொஞ்சம் உடம்பு சரியா யில்லாமெ இருந்துச்சு. இப்பத் தேவலை...” என்றான் முருகையன் பயந்து கொண்டே!

“அப்படியா! அதுக்கு இந்த ஊர் மலைக் காத்து ஒத்துக்கலையோ என்னமோ! எல்லாம் சரியாப் போயிடும்” என்று மெதுவாகவே, ஆனால் அடக்கம் நிறைந்த குரலில், சொன்னார் ரெட்டியார்.

முருகையன் இப்பொழுதுதான் நிம்மதியாக மூச்சு விட்டான்.

சௌபாக்கியம் இதை யெல்லாம் கவனிக்கவே இல்லை. ஓடிக் கொண்டிருந்த குதிரை வண்டியில் இருந்து கொண்டே திருவண்ணாமலைக்கு அழகு சேர்க்கும் மலையையும், வல்லாள மகாராஜா கோபுரத்தையும், தேர்த் திருவீதிகளையும் பார்த்துக் கொண்டே வந்தாள்.

“அப்பா! இன்னைக்கே ஊரெல்லாம் சுத்திப் பார்த்திடணும்!” என்றாள் சௌபாக்கியம், தன் தேனினுமினிய குரலில்.

“இரும்மா, இன்றைக்குச் சந்தைப் பக்கம் எட்டிப் பார்த்து விட்டு, சாயங்காலமா ஊரைச் சுத்திப் பார்க்கலாம். கோவிலுக்கும் போகலாம்...” என்றார் ரெட்டியார்.

“சரி!” என்றாள் சௌபாக்கியம்.

★

திருவண்ணாமலை மாட்டுச் சந்தை அந்தப் பக்கங்களில் மிகவும் பிரசித்தியானது. கோயமுத்தூர், சேலம், கடலூர், பாண்டிச்சேரி, வேலூர் பக்கங்களிலிருந்து சந்தைக்குக் காளைகள் வருவதோ டல்லாமல் வடக்கே நெல்லூர், விஜயவாடா, ராஜமகேந்திரம் ஆகிய ஊர்களிலிருந்தும் காளைகள் பல சோடி சோடியாய்ப் புழுதியைக் கிளப்பி விட்டுக் கொண்டு வரும். சந்தை இரைச்சலில் பிரதானமாகக் கேட்கும் மாடுகளின் மணியோசை, அருகில் சுயம்புலிங்க வடிவமாய் நின்று கொண்டிருந்த மலையில் பட்டு எதிரொலியைக் கூடக் கிளப்பி விடும்.

அன்று சந்தை ஆரம்ப நாளானாலும், கூட்டம் நிறையத்தான் இருந்தது. மனிதர்களை விடக் காளைகளின் எண்ணிக்கை நிறைய இருந்த வகையில், சந்தைக்குக் கடந்த வருஷங்களை யெல்லாம் விட அந்த வருஷம் காளைகள் அதிகம் வந்திருந்தன.

துரைசாமி ரெட்டியார் தம் சோடிகளைப் பிரதானமானதொரு இடத்தில், ஒரே வரிசையில் கட்டியிருந்தார். ரங்கம் இப்போது தன்னுடைய பழைய உற்சாகத்துடன் நிமிர்ந்து நின்றுகொண்டிருந்தது. அருகில் வைக்கோல் திணித்த சாக்குப் பரப்பில் கம்பீரமாய் உட்கார்ந்திருந்தார் ரெட்டியார். பட்டுத் தெறித்த காலை வெய்யிலில், சந்தைக்கு வந்திருந்த காளைகளின் உடல்கள் யாவும் மினுமினுத்ததைப் போலவே, ரெட்டியாருடைய கை விரல்களிலிருந்த வைரக் கல் மோதிரங்களும் பளபளத்தன. தம்முடைய ராஜாச் சுழி ரங்கத்-


· SANFORIZED ·
REGD TD MK
SHRUNK
'சான்பொரைஸ்ட்' துணியில்
தைக்கப்படும் உடைகள்
உடம்புக்குப் பொருந்தாதபடி
சுருங்கவே செய்யாது
—எத்தனே முறை
சலவை செய்தாலும் கூட
இது
சான்பொரைஸ்ட்'
துணி— உடை
தைப்பதற்குமுன்
நனைக்க
வேண்டாம்"



தைப் பார்த்துக் கொண்டே பெருமையுடன் உட்கார்ந்திருந்தார் அவர்.

மாடு விலை பேசுபவர்களிடைத் தரகர்களின் அடா பிடிப் பேச்சுகள்தான் சற்று அதிகமாய் இருந்தன சந்தையில்.

கையில் துணியைச் சுற்றிக் கொண்டு, மற்றவர் கையைப் பிடித்து, விரல்களை மடக்கி, நூற்றுக் கணக்கில் மௌன பாஷையில் விலை பேசினார்கள் அவர்கள். மற்றவருக்குத் தெரியாத வகையிலும் புரியாத வகையிலும் அவர்கள் காளை சோடிகளை விலை பேசியது வெகு விநோதமாயிருந்தது.

சந்தையை ஒட்டியிருந்த ரஸ்தாவில் காப்பிக் கிளப்புகளும் பழக்கடைகளுமாகச் சாரி சாரியாக இருந்தன. சௌபாக்கியம் அங்கே ஒரு கடையில் ஒரு சீப்பு வாழைப் பழம் வாங்கிக் கொண்டு, துரைசாமி ரெட்டியார் இருந்த இடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தாள். ஊரைச் சுற்றிப் பார்க்காமல் இப்படிச் சந்தையில் உட்கார்ந்திருப்பது அவளுக்குப் பிடிக்கவே இல்லை.

சாரி சாரியாக நின்று கொண்டிருந்த சோடிக் காளைகளின் நடுவில் போய்க் கொண்டிருந்தாள் அவள். பச்சையும் குங்குமச் சிவப்பும் கலந்த புடவை சலசலக்க அன்னமென நடந்தாள் சௌபாக்கியம்; அவளுடைய சுருளான கூந்தலுக்கு நடு வகிடு அழகு செய்தது; மதிமுகம் மதிமுகமாகவே இருந்தது.

நடந்து கொண்டிருந்தவள் திடுக்கிட்டு நின்றாள். கண்ணுக்கெதிரே ஒரு சோடிக் காளைகள் நின்று கொண்டிருந்தன. சந்தையிலிருந்த மனிதர்களையும் மற்றக் காளைகளையும் சர்வ அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்தன அந்தக் காளைகள்.

'ரங்கத்தைவிடவும் ஓர் உயர்தரக் காளையா!' என்று நினைத்திருந்த சௌபாக்கியத்துக்கு அந்தக் காளைகள் அவ்வளவு அதிசயம் தரவில்லை. ஆனால்—

ஒரு சின்ன துண்டுக் கடியில் கையை வைத்துக் கொண்டு மாட்டுச் சொந்தக்காரருடன் விலை பேசிக் கொண்டிருந்த அந்த இளைஞன், தன் கைகளை விடுவித்துக்கொள்ள முடியாத வகையில், "கோ" வென்று கத்தியதுதான் சௌபாக்கியத்தைத் திடுக்கிட்டு நிற்க வைத்தது. கூடி நின்றவர்கள் அதிசயத்துடன் அந்தக் காட்சியைப் பார்த்தார்கள்.

இளைஞன் கையை எடுத்துக் கொண்டான்.

"ஆ!"

கட்டை விரலுக்கு மேலே, வலது கையில், ரத்தம் லேசாய்க் கசிந்து கொண்டிருந்தது. இளைஞன் நல்ல சிவப்பான மேனி; அதனால் ரத்தத்தினுடைய சிவப்பு பளிச்சென்று தெரிந்தது.

சௌபாக்கியத்துக்கு மிகவும் இளகிய மனம். அவளுக்குத் தாளவில்லை. தான் என்ன செய்கிறோம் என்ற யோசனையே இல்லாமல் அவள் இளைஞனுக்கருகில் வேகமாகப் போனாள். வாழைப் பழச் சீப்பைக் கீழே வைத்துவிட்டு, தன் கையிலிருந்த கைக்குட்டைத் துண்டை இரண்டாகக் கிழித்து அந்த இளைஞனுடைய வலது கையில், காயத்துக்கு மேலே கட்டுப் போட்டாள்.

மாட்டுச் சொந்தக்காரருடைய உறுமல் இப்பொழுது தெளிவாகக் கேட்டது.

"காளை விலை கேக்க வந்துட்டான், விலை! அந்தச் சோடியிலே ஒத்தைக்குக்கூட அவன் கேட்ட விலை மதிப்புக் கொடுக்காது. அநியாய விலை சொன்னான்! எனக்குப் பொறுக்கல்லே. கையைச் சற்றுக் கோபமா அழுத்தினேன். பச்சைப் புள்ளை; ரத்தம் வந்திருச்சு......!"

மாட்டுக்கு இல்லாத மூர்க்கத்தனம் அதன் சொந்தக்காரருக்கு இருந்தது. இதைப் பற்றி மற்றவர்கள் கண்டித்துக் கொண்டிருந்த சமயத்தில், சௌபாக்கியம் கட்டுப் போட்டு முடித்தாள்.

அவன் அவளைப் பரிவோடு பார்த்தான்; அவள் அவனைப் பரிதாபத்தோடு பார்த்தாள். அவனுக்கு உலக அநுபவம் போதாது என்று அவன் முகமே சொல்லிற்று. வெகு அழகான முகம். கட்டான, சிவந்த உடல். நல்ல பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்த தோரணை இருந்தது. சௌபாக்கியம்

அவனைப் பார்த்த உடனேயே தன் உள்ளத்தை அவனுக்குப் பறி கொடுத்து விட்டாள்.

கலவரம் நடைபெற்ற இடத்திலிருந்து சற்றுத் தள்ளி வந்தார்கள் அவர்கள்.

"அந்த மூர்க்கனிடம் கையைக் கொடுத்தீங்களே. ரத்தம் வரக் கிள்ளி விட்டானே" என்றாள் சௌபாக்கியம்.

'அவனிடம் கையைக் கொடுத்ததால்தானே உன் அழகான கையைத் தொட முடிந்தது' என்று எண்ணிக் கொண்ட இளைஞன், சௌபாக்கியத்தைப் பார்த்துப் புன்னகை செய்தான். அவள் உயிரையே பறித்தது அந்தப் புன்னகை.

"பார்த்தியா, அந்த வலப் பக்கத்துக் காளையை, அதுக்கு முதுகு பக்கத்திலே சேர்ந்தாப்பலே மூணு சுழி விழுந்திருக்கு. அபூர்வமா கிடைக்கக் கூடிய ரகம், விலை கேட்டால், ஆயிரத்துக்கும் மேலே போறான்......" என்றான் இளைஞன்.

"அதைவிட ஒசத்தியான காளை இந்தச் சந்தையில் இருக்கிறதை நீங்க பார்க்கல்லியா! ராஜாக் கழி ரகத்திலே ஒரு காளை, அதோ அந்த மேற்காலே வந்திருக்கே! வாரீங்களா!" என்று ஆவலோடு கேட்டாள் சௌபாக்கியம்.

"அந்த ஒசத்தியான காளையைப் பார்க்காமே இருந்துடுவேனா! ஆனால் அந்தக் காளை இருக்கிற சோடிக்குத்தான் குறைஞ்ச விலையே ஆயிரத்து ஐந்நூறிலே நிக்கிறதே. எங்கிட்டே இருக்கிறதே ஆயிரம் ரூவா. அது பக்கத்திலேயும் கூடப் போக முடியாது என்னால்" என்றான் இளைஞன்.

கையில் பழச் சீப்பை எடுத்துக் கொண்டே சௌபாக்கியம், "முதல் நாள் சந்தையில் அப்படித்தான் இருக்கும். நாளைக் காலையிலே அந்தப் பக்கமா வாங்களேன். எதுனாச்சியும் ஒரு விலை பேசி முடிச்சிடலாம்......" என்றாள்.

"அப்படின்னா நீ யாரு!" என்றான் இளைஞன்.

"ராஜாக் கழிச் சொந்தக்காரருடைய மகள்; காளையின் சொந்தக்காரி......" பெருமையோடு சொன்னாள் சௌபாக்கியம்.

"உன் பேரு நான் கேக்கலாமா!"

"சௌபாக்கியம்"

"நல்ல பேரு."

"ஓஹோ!"

"நான் வர்றேன். நாளைக்கு மறக்காமே வர்றேன்" என்று சொல்லிவிட்டு அந்த இளைஞன் சௌபாக்கியத்திடம் விடைபெற்றுக்கொண்டான்.

★

அன்று மாலை, அம்பாளுக்குத் தீபாராதனை சமயத்தில் மீண்டும் அந்த இளைஞனைக் கோவிலில் சந்திப்போம் என்று சௌபாக்கியம் நினைக்கவேயில்லை. எதிர் வரிசையில் நின்று கைகூப்பி வணங்கிக் கொண்டிருந்தவர்களில், மிக அருகில், அவனும் நின்று கொண்டிருந்தான்.

சலவைச் சட்டையும் வேஷ்டியும் அணிந்து கொண்டு, சந்தையில் பார்த்ததை விடப் பளிச் சென்று விளங்கினான். இழைய இழையக் கிராப்பு வாரி யிருந்தான். நெற்றியில் பட்டை விபூதி; நடுவில் சின்னதாய்க் குங்குமப் பொட்டு. கையில் தங்கச் செயின் ரிஸ்ட் வாட்சு; மோதிரம்.

சௌபாக்கியத்தின் கைகள் கூப்பிக்கொண்டிருந்தனவே தவிர, கண்கள் அவனையே பார்த்துக்கொண் டிருந்தன. அவனும் அவளைப் பார்த்து விட்டான். அவள் உடனே முகத்தை அம்பாள் பேரில் திருப்பிக் கொண்டாள். பிராகாரத்தைச் சுற்றி வந்தபோது அவன் அவளையே சுற்றி வந்ததாகப் பட்டது அவளுக்கு. தன் தந்தையுடன் போனாலும், திரும்பித் திரும்பித் திருட்டுத்தனமாய்ப் பார்த்துக் கொண்டேதான் போனாள். வெகு மந்தகாசத்துடன் நடந்துகொண்டு வந்திருந்த அவன், அவளுடைய உள்ளத்திலும் அப்படியேதான் நடனமாடினான்.

கடைத் தெருவுக்குப் போனபோது அவர்கள் ஏறி யிறங்கிய கடைகளிலெல்லாம் அவனும் ஏறி இறங்கினான்; அவர்களுக்குப் பின்னால் அவன் அப்படித் திண்டாடிக் கொண்டு நின்றதைப் பார்க்கச் சௌபாக்கியத்துக்கு வேடிக்கையாகவும் சந்தோஷமாகவும் இருந்தது.

தங்கள் ஜாகைக்குப் போனதும், தன் கையாலேயே ரங்கத்துக்குத் தீனி எடுத்துப் போட்டாள். என்றுமில்லாத வகையில் அதற்கு ஆசார உபசாரமெல்லாம் செய்தாள்.

நேரே வீட்டுக் கூடத்துக்கு வந்தபோது, தந்தை சாவகாசமாகத் தாம்பூலம் தரித்துக் கொண்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்தாள். தந்தையின் அருகில் போய் நெருங்கி உட்கார்ந்து கொண்டாள்.

"என்ன அம்மா! என்ன வேணும்!"

"ஒண்ணுமில்லே, அப்பா. நாளைக்கே ரங்கத்தை வித்துடுவீங்களா!"

"நல்ல விலை வந்தா வித்துட வேண்டியது தானே சௌபாக்கியம்!"

"அப்பா! நம்ம ரங்கத்தை வாங்கறவங்க அதை நம்மளைப் போலவே வைச்சுக் காப்பாத்தறவங்களா யிருக்கணும், அப்பா!"

"அது அவங்க பாடு, அம்மா. நம்மகிட்டே இருக்கிறவரை அதை நல்லாத்தான் வைச்சுக்கிட்டு இருக்கிறோம். விலை போயிடுச்சுன்னால், அதைப்பத்தி நாம் கவலைப்பட்டு முடியுமா!"

AII. 808

லண்டனுக்கு

போகவர உள்ள டூரிஸ்ட் வகுப்பு கட்டணம்



இதுவே தருணம், டூரிஸ்ட் வகுப்பில் பிரயாணம் செய்து ரூ. 599 மிச்சமாக்குங்கள்

ரோம் . . . ஜெனிவா . . . பாரிஸ் . . . டஸல்டார்ப் . . . மற்றும் இதர ஐரோப்பிய நகரங்களுக்கு வாராந்தர கான்ஸ்டலேஷன் ஸெர்விஸ்

குறைக்கப்பட்டுள்ள டூரிஸ்ட் வகுப்பு கட்டணம் இப்பொழுது உங்கள் ஐரோப்பா விஜயத்தை எவ்வளவோ சுலபமாக்குகிறது. ஐரோப்பாவில் புதிய வியாபாரத் தொடர்புகள் ஏற்படுத்திக் கொள்வது, பழைய தொடர்புகளை வலுப்படுத்துவது, சௌமியமான சிசிர வெய்யிலின் சுகம் அனுபவிப்பது, இங்கிலாந்தில் சம்பிரதாயமான கிருஸ்துமஸ் பண்டிகை கொண்டாடுவது . . . எல்லாம் உங்களது குறுகிய விடுமுறை காலத்திற்குள்ளேயே சாத்தியம்தான்!

ஏ. ஐ. ஐ. கான்ஸ்டலேஷன்களும் சூப்பர் கான்ஸ்டலேஷன்களும் லண்டனுக்கு மிக துரிதமாகவும் மிகச் சௌகரியமாகவும் பிரயாணம் செய்ய வசதியளிக்கின்றன. இதற்குள்ளாகவா வந்து விட்டோம் என்று தோன்றும்படி, அவ்வளவு சீக்கிரம் சென்னையிலிருந்து புறப்பட்ட புதுமையுணர்ச்சி குன்றாமல் போய்ச் சேர்ந்துவிடுவீர்கள். இவ்விசேஷ சலுகையை பயன் படுத்திக் கொள்ளத் தவறாதீர்கள் — இன்றே உங்கள் பிரயாண ஏஜண்டை கண்டு ஆலோசியுங்கள்!

குறிப்பு : குறைக்கப்பட்ட கட்டணம் பிப்ரவரி 28உ வரை அமுலிலிருக்கும்.

ஏர்-இந்தியா இன்டர்நேஷனல்

கலீல் மான்ஷன்ஸ், 35 மவுண்டு ரோடு, மதராஸ் 2. டெலிபோன் : 86194

"அப்பா! நான் ஒன்று கேக்கட்டுமா?"

"என்னம்மா?"

"சின்னக் கன்று யிருந்தபோது ரங்கத்தை விக்க நீங்க பிரியப்படவில்லை. ராஜாச் சுழிக் காளையைக் கொடுக்க இஷ்டப்படவில்லை. இத்தனை நாளா வளர்த்து விட்டு, அதைக் கொடுக்கிற துன்னு, பயன் கருதித்தானே இந்தக் காரியத்தைச் செய்யுறீங்க!"

"சௌபாக்கியம்! உனக்காகவே ரங்கத்தை வளர்த்தேன். அந்தப் பணத்திலே உனக்கு ஒரு சோடி வைரத்தோடு வாங்கி......"

"...... எனக்கு அந்தத் தோட்டைப் பூட்டி, என்னையும் இன்னொருத்தருக்குக் கொடுத்திடத் தானே போறீங்க, அப்பா! உங்க அருமை ரங்கமும் போகுது; உங்க அருமை மகளும்......"

"அப்படி யெல்லாம் பேசாதே, அம்மா. உன்னை நல்ல இடத்தில் கல்யாணம் செய்து கொடுத்து விடறதுக்குத் தானே நான் இத்தனையும் செய் கிறேன்!" என்று சொல்லி விட்டுத் தூங்கப் போய் விட்டார் துரைசாமி ரெட்டியார். மகள் கூறிய அந்த வார்த்தைகள் அவருடைய நெஞ்சத்திலே தைத்துக் கொண்டுதான் இருந்தன.

★

மறு நாள் சந்தையில் முதல் நாளைவிட அதிகக் கூட்டம் இருந்தது. ராஜாச் சுழி ரங்கம் இருந்த சோடியைச் சுற்றித்தான் அதிகக் கூட்டம் இருந்தது. பெருமையுடன் உட்கார்ந்து கொண்டு வருகிறவர்களுக்குத் தம்முடைய சாமர்த்தியமான பேச்சுகளினால் பேரம் செய்து கொண்டிருந்தார் துரைசாமி ரெட்டியார்.

அருகில் நின்று கொண்டிருந்த சௌபாக்கியம் அதிகப் பரபரப்பு அடைந்து சந்தையைச் சுற்றியும் தன் கண்களை அளாவிக் கொண்டிருந்தாள். அவன் இன்னும் வரவில்லை. ரெட்டியாரோ ரங்கம் சம்பந்தமாகத் தன்னுடைய பேரத்தை முடித்து விடுவார் போலிருந்தது. பேரம் ஆயிரத்து எழு நூறில் நின்று கொண்டிருந்தது.

ஆயிரத்து எழுநூறுக்கும் மேலே 'அவரால்' கொடுக்க முடியுமா?—என்பதைப்பற்றிச் சௌபாக்கியம் அந்தச் சமயத்தில் யோசிக்கவில்லை. அதோ அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட அவன் வந்து விட்டான்!

பாவம்! வலது கையில் கட்டை விரலை யொட்டிக் கட்டுப் போட்டிருந்தான். வந்தவன் ரங்கத்தைக் கூட அத்தனை உன்னிப்பாகப் பார்க்கவில்லை, சௌபாக்கியத்தைப் பார்த்துப் புன்னகை செய்தான். தந்தையின் அருகில் போய் நாணத்துடன் உட்கார்ந்து கொண்டாள் சௌபாக்கியம்.

அவன் துரைசாமி ரெட்டியாரின் எதிரில் வந்து உட்கார்ந்து கொண்டான், பேரம் பேச.

"என்ன தம்பி, வலது கையிலே கட்டுப் போட்டிருக்கே! இடது கையாலே பேரம் பேச நமக்குச் சம்மதமில்லை தம்பி" என்றார் ரெட்டியார்.

"பரவாயில்லைங்க. காயம் ஒன்றும் பெரிசில்லை. இந்தக் கையாலேயே பேசலாம்" என்று சொல்லி இளைஞன் துண்டை எடுத்துப் போட்டு, அதன் மறைவில் ரெட்டியாரின் கையைப் பிடித்துக் கொண்டான்.

மௌன பாஷையில் அவர்கள், துண்டின் மறைவில், பேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நிமிஷம், இரண்டு நிமிஷங்கள்...

"இது சரி, இது சரி..." என்று சொல்லிக் கொண்டே வந்தார் துரைசாமி ரெட்டியார்.

"இவ்வளவு முடியும்!" என்றான் அவன்.

துண்டு விலக்கப் பட்டது. துரைசாமி ரெட்டியார் கொஞ்சம் வைக்கோலைக் கையில் எடுத்துக் கொண்டு, "தம்பி, எழுந்திரு! காளைங்க உனக்குத்தான்!" என்றார் வைக்கோலை அத்தாட்சியாய்க் கொடுத்த வண்ணம்.

சௌபாக்கியம் ஆச்சரியத்தால் திகைத்துப் போனாள். காளை சோடிகளை,—அவருடைய அருமையான ரங்கத்தை—அவன் எதிரே கொண்டு வந்து நிறுத்தினார் ரெட்டியார். அவன் எடுத்துத் தந்த கத்தை நோட்டுக்களை எண்ணிக் கூடப் பார்க்காமல் பையில் திணித்துக் கொண்டார். தம்முடைய இருக்கையில் வந்து அமர்ந்து கொண்டார்.

சோடியை ஓட்டிக் கொண்டு, சௌபாக்கியத்தைத் திரும்பிப் பார்த்துக் கொண்டே, அவனும் போய் விட்டான்.

"அப்பா! எவ்வளவு ரூபாய்க்கு நம்ம ராஜாச் சுழி ரங்கத்தைக் கொடுத்தீங்க!"

"உனக்குத் திருப்திதானே சௌபாக்கியம்!"

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

"என்னப்பா, சொல்றீங்க!"

ரெட்டியார் தணிந்த குரலில், "ஆயிரம் ரூபாய்க்குத் தானம்மா கொடுத்தேன்! நிச்சயம் சொல்றேன், சௌபாக்கியம்! நம்ம ஜாகைக்கு இன்று சாயந்திரம் வருவான் அவன். சந்தையில் இத்தனை மாடுங்க இருக்கே, இதுகளெல்லாம் ஒன்றுமே பேசாத வாய் இல்லா ஜீவன்களா இருக்கிறபோது, இந்த மனுஷங்க பேசுறாங்க. அவன் கைக்கு நீ கட்டுப் போட்டதும் தெரியும்; கோவிலில் அவன் வந்ததும் தெரியும்..." என்றார்.

அன்று இரவு அவர்கள் இருந்த ஜாகைக்கு வெளியே மாட்டுச் சதங்கை யொலி 'ஜல் ஜல்' என்று கேட்டது. அதில் ரங்கத்தின் நடை தெளிவாகத் தெரிந்தது.

"அப்பா......" என்று மகிழ்ச்சிப் பெருக்கில் கூவினாள் சௌபாக்கியம்.

"ஆமாம், அம்மா, அவனும் ரங்கமும்தான்" என்றார் ரெட்டியார். முருகையன் ஹரிக்கேன் விளக்கைப் பெரிதுபடுத்தி, நிமிர்த்தினான்.

மந்தகாசமான முகத்துடன் அவன் நின்று கொண்டிருந்தான்.

"எனக்காக ராஜாச் சுழிக் காளையைக் குறைச்சுக் கொடுத்திருக்கிறதாக நினைக்கிறேனுங்க. இந்த அநுகப்படிச் சலுகை எனக்கு வேணுங்க. உங்க காளையை நீங்களே......" என்று அவன் வார்த்தையை முடிக்கவில்லை.

"தம்பி! முன்கூட்டியே உனக்கு நான் கொடுத்த சீர் அது. நீ கொடுத்திருக்கிற பணத்தையும் இப்பொழுதே சீராக வாங்கிக் கொள்......"

"அப்பா..." என்றாள் சௌபாக்கியம். அதற்கு மேலே பேச முடியவில்லை. ஓடிப் போய் ரங்கத்தின் அருகில் நின்று கொண்டு, அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

★

மாட்டை விலை பேசப் போய், மங்கையையே மனத்தில் விலை பேசிப் பெற்றுக் கொண்டான் அவன். ரங்கத்துக்கு இருந்த ராஜாச் சுழி தங்களுடைய இனிய மண வாழ்வையே மங்களமாக முடித்து வைத்ததில் சௌபாக்கியம் மனமகிழ்ந்தாள். திருவண்ணாமலை அருணாசலேச்வரருக்குப் பெரியதொரு கும்பிடு போட்டாள் அவள்!

Printed and Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10. Editor: Mi. Pa. Somasundaram.

REGISTERED No. M. 4392
Registered as newspaper in Ceylon



ஒரு சந்தோஷமான குடும்பத்தின் சித்திரம்!

என்னுடைய குடும்பத்தார் எல்லோருடைய முகத்திலும் தவழும் புன்முறுவலுக்குப்பின்னால் ஒரு கதையிருக்கிறது. சிலமாதங்களுக்கு முன் என் கணவர் அடிக்கடி சீக்காக படுத்துவந்தார். மேலும், என் மூன்று குழந்தைகளும் ஆரோக்கியம் குன்றி, மெலிந்து வாழ்க்கையில் பற்றில்லாதவர்கள்போல் காணப்பட்டார்கள். நான் அவர்களுடைய உபாத்தியாயினியுடன் அகஸ்மாத்தாகப் பேசிக்கொண்டிருக்கும் போதுதான் அவள் "உங்களுடைய கஷ்டங்களுக்குக் காரணம் ஒருக்கால் நீங்கள் உபயோகிக்கும் சமையல் கொழுப்பாக இருக்கலாமோ என்று நினைக்கிறேன்" என்று கூறினாள். நான் விலையுயர்ந்த சிறந்த கொழுப்பை சில்லறையாக வாங்குகிறேன் என்று சொன்னதும் அவள் "சில்லறையாக வாங்கும் கொழுப்பு எவ்வளவு சிறந்ததாக இருந்தாலும், எப்பொழுதும் திறந்திருப்பதால் அழுக்கான கைகளாலும், ஈக்களாலும் அசுத்தப்படுத்தப்பட்டு நோய்கள் விளைவிப்பதாக இருக்கலாம்" என்று சட்டென்று பதிலளித்தாள்.

அவள் டால்டா வனஸ்பதியை உடனே வாங்கும்படி எனக்கு யோசனை கூறினாள். ஏனென்றால் முதலாவதாக டால்டா, ஆரோக்கியத்தைப் பாதுகாக்கிறது. அதன் சீல் செய்த டின்னுக்குள் கிருமிகள் நுழையமுடியாது. அன்றியும் டால்டா வனஸ்பதியின் தரம் மிகச் சிறந்தது. என் குடும்பத்தினருக்கு டால்டா வனஸ்பதியில் சமைத்த உணவு சீக்கிரமே பிடித்துப் போய்விட்டது. டால்டா பரிமளிக்கச்செய்யும் உணவிலுள்ள இயற்கை ருசியை அவர்கள் மிகவும் விரும்பினார்கள். காற்றுப்புகாத சீல் செய்த டின்னில் வாங்க முடிகிற டால்டா வனஸ்பதி எப்பொழுதும் சுத்தமாகவும், புத்தம் புதிதாகவும் ஆரோக்கியமளிப்பதாகவும் இருக்குமென்று திடமாக நம்பலாம். டால்டா வனஸ்பதி என் குடும்பத்தினரை சந்தோஷமாகவும், ஆரோக்கியமாகவும், நான் முழுவதும் திருப்தியடைந்தவர்களாகவும் வைத்திருக்கிறது. நீங்களும் எல்லா உணவுகளையும் டால்டா வனஸ்பதியில் தயாரியுங்கள். இன்றே ஒரு டின் வாங்குங்கள்.

10, 5, 2, 1, ½ பவுண்டு டின்களில் கிடைக்கிறது.
டால்டாவில் விடமின் 'ஏ', 'டி' இருக்கிறது.

சிறந்த சமையல் கொழுப்பை தேர்ந்தெடுப்பது எப்படி?
இலவச ஆலோசனைகளுக்கு இன்றே எழுதுங்கள்:

தி டால்டா அட்வைஸரி ஸர்வீஸ்
தபால் பெட்டி நெ. 353, பம்பாய் 1



மர அடையாளமுள்ள டின்னைப் பார்த்து வாங்குங்கள்.

HVM. 220-50 TM

டால்டா வனஸ்பதி

சிறந்த சமையல் — குறைந்த செலவு